பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்

New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-100

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)

| மலர் : 15<br>Vol : 15 | இதழ் : 06<br>Issue : 06 | www.ncbhpublisher.in | செப்டம்பர் 2023<br>September 2023 | விலை<br>Price | ₹ 45/- | ஆண்டு சந்தா<br>Annual Subscription | ₹ 540/- |
|---|---|---|---|---|---|---|---|



"கல்வெட்டியல் அறிஞர்"

## புலவர் செ.ராசுவுக்கு அஞ்சலி

8.8.2023 அன்று ஈரோடு புத்தகத் திருவிழாவில் நியூ செஞ்சுரியின் 25 புதிய நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் என்சிபிஎச் நிறுவனத்தின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன், மேலாண்மை இயக்குநர் க.சந்தானம், பொது மேலாளர் எஸ்.சண்முகநாதன், ஈரோடு வேளாளர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் எஸ்.டி.சந்திரசேகர், சிக்கைய நாயக்கர் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் ப.கமலக்கண்ணன், த.க.இ.பெ ஈரோடு மாவட்ட செயலாளர் பெ.துரையரசன், எழுத்தாளர் சுப்ரபாரதிமணியன் மற்றும் என்சிபிஎச் கோவை மண்டல மேலாளர் ஆர். ரங்கராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



8.8.2023 அன்று ஈரோடு புத்தகத் திருவிழாவில் ஈரோடு புத்தகக் கண்காட்சி சிறப்பிதழாக வெளியான 'உங்கள் நூலகம்' மாத இதழின் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் என்சிபிஎச் நிறுவனத்தின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன், மேலாண்மை இயக்குநர் க.சந்தானம், எழுத்தாளர் இமையம், எழுத்தாளர் உதயசங்கர், எழுத்தாளர் சல்மா ஆகியோர் கலந்துகொண்டனர்.






கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

# நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2053*

*மலர் - 15 இதழ் - 06 - செப்டம்பர் 2023*

ஆசிரியர்
**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்
**சண்முகம் சரவணன்**



ஆசிரியர் குழு
பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.குராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா

இதழ் வடிவமைப்பு
கா. குணசேகரன்



நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

சந்தா தொகையை
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

---

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


1 படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்............................................04

2 செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்டம் கலைஞர் தமிழுக்குத் தந்த அருங்கொடை
டாக்டர். சு. நரேந்திரன்............................................11

3 இயற்கையிலிருந்து எடுத்துக்கொண்டார்கள்
அ.கா.பெருமாள்............................................17

4 காட்டுணவு
முனைவர் ஆறு.இராமநாதன்............................................21

5 கொங்குநாட்டின் கல்ஹணர்
செ.இளவேனில்............................................29

6 இசைத்தமிழ் இயக்க முன்னோடி ஆபிரகாம் பண்டிதர்
த.ஜான்சிபால்ராஜ்............................................33

7 திரிதரும், இழிதரும் பழந்தமிழில் கூட்டு வினைகள்
ஆ.கார்த்திகேயன்............................................37

8 பெயருக்கேற்ப வாழ்ந்தவர்
இரா. காமராசு............................................41

9 இன்றைய டிஜிட்டல் யுகக் குழந்தைகள்
மருத்துவர் ப.வைத்திலிங்கம்............................................45

10 சிலுவையாய் சுமக்கும் அனுபவங்கள்
சுப்ரபாரதிமணியன்............................................51

11 இசையாகும் தமிழும் தமிழாகும் இசையும்
ஜமாலன்............................................53

12 ஆய்வறிஞராக உயர்ந்த தமிழாசிரியர்
ஜி.சரவணன்............................................59

13 ஐக்கிய நாடுகளின் நிலைத்த மேம்பாட்டு இலட்சியங்களும் கல்வியும்
க.பழனித்துரை............................................61

14 ஒப்பீட்டு நோக்கில் வள்ளுவமும், ஆத்திச்சூடியும்
முனைவர் தி. சுமதி............................................65

15 TRIBAL EDUCATION IN KASHMIR: A GENDERED PERSPECTIVE
Mansoor Ahmad............................................69



படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்

# கிறித்தவ மதமாற்றத்தின் வரலாறு

**எஸ்,ஜெயசீல ஸ்டீபன் (2023):**
கிறித்தவர்களாக மதம் மாறிய தமிழர்களும் ஐரோப்பிய மறைப்பணியாளர்களும் (ஆன்மீக மற்றும் உலகியல் வாழ்க்கை அனுபவங்கள் உள்ளும் புறமும் 1510-1858).

**S.Jeyaseela Stephen (2023):**
Tamil christian Converts & European Missionaries.
(The spiritual and Worldly Life Experience Inside and Outside, 1510–1858)
Institute for Indo- Europeean Studies. Puducherry 605 011.

தமிழர்களின் பொதுப் புத்தியில் மதமாற்றம் என்பதைக் கிறித்தவத்துடன் இணைந்த ஒன்றாகவே பார்க்கும் எண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது.ஆனால் இது முற்றிலும் உண்மையல்ல. தமிழ்நாட்டின் சமூக வரலாற்றில் மதமாற்றம் என்பது இரண்டாயிரம் ஆண்டுகட்கும் முற்பட்ட ஒன்றாகவே இடம் பெற்றுள்ளது.வடபுலத்தில் தோன்றிய வைதீக சமயமும் அதனுடன் முரண்பட்டு உருவான சமணம், பௌத்தம், ஆசீவகம் ஆகிய சமயங்களும் அவை உருவான சிறிது காலத்திற்குள்ளேயே தமிழ்நாட்டில் பரவியுள்ளன.கி.மு.வில் உருவான தொல் தமிழ்க் கல்வெட்டுக்கள் (பிராமி) மட்டுமின்றி சங்க இலக்கியங்களும் காவியங்களும் இலக்கணங்களும் இதற்குச் சான்று பகர்கின்றன.

மதமாற்றம் என்பது கிறித்தவத்துடன் மட்டுமே தொடர்புபடுத்திப் பார்க்கப்படுவதற்குக் காரணமாக அமைந்தது அவர்கள் தொடக்கத்தில் மேற்கொண்ட கல்வி, மருத்துவப் பணிகள் மற்றும் பிற அறப்பணிகள் வழி அவர்களது இருப்பு துலக்கமாகத் தெரிந்ததுதான். எல்லாவற்றிற்கும் மேலாகக் கோவில் என்ற பொதுவெளிக்குள் அனுமதி மறுக்கப்பட்டிருந்த மக்கள் பிரிவை கிறித்தவத் தேவாலயத்தினுள் அனுமதித்ததுடன் வழிபாட்டை நடத்துவிக்கும் சமயக் குருவின் பணி கிடைக்கும்படிச் செய்ததும்தான். இன்று மதம் என்பது அரசியலுடன் பிணைக்கப்பட்ட சூழலில் மதமாற்றம் என்பதும் அரசியலாக்கப் பட்டுவிட்டது.


யேசுவின் நேர்முகச் சீடரான புனித தாமஸ் வாயிலாகப் பரவிய தொடக்ககாலக் கிறித்தவம் சொல்லிக் கொள்ளும் வகையில் ஒரு பரந்த குழுமமாக உருப் பெறாது போனது. இதனையடுத்து போர்ச்சுக்கீசியர், பிரெஞ்சியர் வருகையால் கத்தோலிக்கக் கிறித்தவமும், டச் , டேனிஷ், ஆங்கில நாட்டினர் வருகையால் சீர்திருத்தக் கிறித்தவமும் தமிழ் நாட்டில் அறிமுகமாயின. இவர்களுள் ஆங்கிலேயர் நீங்கலாக ஏனையோர் பரந்துபட்ட தமிழ்நாட்டில் சில பகுதிகளில் மட்டிலுமே நிலை கொண்டிருந்தனர். தொடக்க காலக் காலனியம் என்ற தமது நூலில் ஜெயசீல ஸ்டீபன் பொது ஆண்டு 1500 தொடங்கி 1800 முடிய உள்ள காலத்தை காலனியத்தின் தொடக்க காலம் என்று குறிப்பிட்டுள்ளார். இம் முந்நூறு ஆண்டுக் காலத்தில்தான் கிறித்தவம் தமிழ்நாட்டில் பரவலாக அறிமுகமாகி வளர்ச்சி பெற்றது.

காலனியவாதிகளுக்கும் கிறித்தவத்திற்கும் இடையே உறவு இருந்தது என்னவோ உண்மைதான். இருப்பினும் பெரியளவிலான ஆதாயங்களை மதமாற்றம் புதிய கிறித்தவர்களுக்கு வழங்கிவிடவில்லை.

கிழக்கிந்தியக் கம்பெனி உருவாக்கிய திருநெல்வேலி மாவட்டத்தின் முதல் ஆட்சியாளரான லூஷிங்டன் என்ற ஆங்கிலேயர் அப்பகுதியில் செயல்பட்ட சீர்திருத்தக் கிறித்தவ சபைக்கு எழுதிய கடிதம் ஒன்றில் ‘சீசருக்கு உரியதை சீசருக்கும் தேவனுக்குரியதை தேவனுக்கும் கொடுங்கள்’ ( சீசர்: மன்னர்) என்ற விவிலியத் தொடரை அழுத்தமாகக் கற்றுக் கொடுக்கும்படி எழுதியுள்ளார் . கிறித்தவர்களாக மதம் மாறினும் வரியை ஒழுங்காகச் செலுத்த வேண்டும் என்பதையே அவர் இவ்வாறு வலியுறுத்தி உள்ளார். விதிவிலக்காக தம்மால் மதமாற்றப்பட்ட புதிய கிறித்தவர்களின் நலனுக்காக ஒரு சில கிறித்தவ மறைப்பணியாளர்கள் (மிஷனரிகள்) காலனிய அதிகாரிகளுடன் முரண்பட்டு நின்றதும் உண்டு. வெகுமக்களுடன் மட்டுமின்றி ஆளுவோருடனும் தொடர்புடையதாக விளங்கியதால் சமயங்களுக்கு வரலாற்றில் இடமுண்டு.

இந்தியப் பொதுமக்களின் சமய உணர்வைப் பாதிக்கும் கிறித்தவப் பரப்புரைகளால் இந்தியாவில் தம் நலனுக்கு ஊறு விளையும் என்று ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி கருதியது. தம் மேலாண்மையைப் பாதுகாக்கும் நோக்கில் இங்கிலாந்தில் இருந்து கிறித்தவ மறைப் பரப்பாளர்கள் வருவதை தடை செய்தது. ‘டெயிலி டிரிபியூன்’ (1853 ஆகஸ்ட் 8) இதழில் இந்தியாவைக் குறித்து எழுதிய கட்டுரை ஒன்றில் ‘இந்தியாவில் கிறிஸ்தவ மதப்பிரச்சாரத்தை நடத்தக் கூடாது என்று தடை செய்யவில்லையா?’ என்று கார்ல் மார்க்சும் வினா எழுப்பியுள்ளார். கிறித்தவத்தை இந்தியாவில் அறிமுகம் செய்கிறோம் என்று இங்கிலாந்தில் கூறிவிட்டு அங்கிருந்து கிறித்தவ மறைப்பணியாளர்கள் வருவதைத் தடை செய்யும் இரட்டை வேடம் குறித்தே அவர் இவ்வாறு வினா எழுப்பி உள்ளார்.

இச்சிக்கலைத் தவிர்க்கும் வகையில் ஜெர்மனியின் லூத்தரன் மறைப்பணியாளர்களை



ஆங்கிலத் திருச்சபை வரவழைத்தது. டேனிசியக் குருக்களின் செயல்பாட்டில் நம்பிக்கை இல்லாத நிலையில் டேனிஷ் மன்னரும் ஜெர்மன் மதக்குருக்களை தரங்கம்பாடிக்கு அனுப்பிவைத்தார். இக்காரணங்களால் கிறித்தவம் தொடர்பான ஜெர்மன் மொழி ஆவணங்களில் தமிழ்நாடு இடம் பெறலாயிற்று. திருநெல்வேலி மாவட்டத்தில் நன்கு அறிமுகமான ரேனியஸ் ஐயர், ஷாப்டர், தஞ்சை மாவட்டத்தில் பணியாற்றிய ஸ்வாட்ஸ் ஆகியோர் ஜெர்மனியில் இருந்து வந்தவர்களே. தரங்கம்பாடியில் அச்சுக்கூடம் நிறுவிய சீகன் பால்க் டேனிஷ் மன்னரால் அனுப்பப்பட்ட ஜெர்மனிய நாட்டவரே. கிறித்தவம் குறித்த ஜெர்மன் மொழி ஆவணங்களில் பெரும்பாலானவை சீர்திருத்தக் கிறித்தவம் தொடர்பானவை என்பர்.

மற்றொரு பக்கம் இதற்கு முந்திய கத்தோலிக்கப் பரவலின் போது இந்தியாவில் செயல்பட்ட காலனிய நாட்டு மறைப் பணியாளர்களுடன் இத்தாலி, ஸ்பெயின் நாட்டுப் பணியாளர்களும் இணைந்து பணியாற்றி உள்ளனர். தமிழர்களுக்கு நன்கு அறிமுகமான தத்துவ போதகர் (டிநொபிலி) வீரமாமுனிவர் (பெஸ்கி) ஆகிய இருவரும் இத்தாலிய நாட்டினர்தாம். இதன் விளைவாக இவ்விரு மொழிகளிலும் எழுதப்பட்ட தமிழ்நாடு தொடர்பான ஆவணங்கள் உள்ளன.

**மதமாற்றம் குறித்த ஆய்வு:**

மதம் என்பது அடிப்படையில் தனிமனிதன் சார்ந்த ஒன்று. இருப்பினும் தனிமனித எல்லையைக் கடந்து சமூகம் சார்ந்த ஒன்றாகவும் அது பார்க்கப்படுகிறது. இது பற்றியே அது சமூகவியல், வரலாறு ஆகிய அறிவுத்துறையினரின் ஆய்வுப் பொருளாக விளங்குகிறது. மதமாற்றம் என்பதைத் தனிமனித மதமாற்றம், குழும மதமாற்றம் *(Mass Conversion)* என இரண்டாகப் பகுக்கலாம்.முதலாவது ஒரு தனிமனிதனின் சமய நம்பிக்கை மாற்றமாக அமையும்.மதவாதிகள் ஆன்மீகத் தேடலின் விளைவு என்று இதைக் கருதுவர். குழும மதமாற்றம் உலகியல் சார்ந்த ஒன்றாகவே பெரும்பாலும் அமையும். சமூகப் பாதுகாப்பு, சமூக உயர்மதிப்பு,பொருளாதார நலன் என்பனவற்றை இது அடிப்படையாகக் கொண்டிருக்கும். அத்துடன் இவர்களில் பெரும்பாலோர் கிராமப்புற ஏழைக் குடியானவர்கள். இது பற்றியே சோற்றுக் கிறித்தவர்கள் *(Rice Christians)* என்ற சொல்லாட்சி உருவாகியுள்ளது.

தமிழ்நாட்டைப் பொருத்த அளவில் சமூகப் பாதுகாப்புத் தேவைப்பட்டோரும் பொருளாதார நிலையில் நலிந்தோரும் பண்பாட்டு ஒடுக்குமுறைக்கு ஆளாகி இருந்தோருமே அதிக அளவில் குழுமமாக மதம் மாறியுள்ளனர். ஆன்மீகத் தேடல் என்பது அரிதான ஒன்றாகவே இருந்துள்ளது. தேவ அழைத்தல், மனமாற்றம் என்ற சொற்களுக்குப் பின்னால் சமூகச் சிக்கல் மறைந்துள்ளது.

இது காரணம் பற்றியே அடித்தள மக்களை முன் நிறுத்தும் புதிய வரலாற்று வரைவில் மதமும் இடம் பெறுகிறது.

**கிறித்தவ சமய ஆவணங்கள்:**

இங்கு நாம் ஆராயப் புகும் கிறித்தவம் ஒரு நிறுவன சமயம் என்பதன் அடிப்படையில் முறையான ஆவணங்களைப் பராமரித்து வரும் கடமை அதற்கிருந்தது. இவ்வகையில் திருமுழுக்கு தொடங்கி இறப்புவரை பல்வேறு வாழ்க்கை வட்டச்சடங்குகள் குறித்த ஆவணங்கள் உள்ளன. இவை தவிர அங்கு பணியாற்றிய சமயக் குருக்கள்,துறவியர்,துறவினியர், ஆகியோருக்கு அவர்களின் சமயத்தலைமை அனுப்பிய சுற்றறிக்கைகள், கடிதங்கள், சமயத் தலைமையுடன் இவர்கள் நடத்திய கடிதப் போக்குவரத்துகள்,அனுப்பிய அறிக்கைகள் என்பனவும் குறிப்பிடத்தக்க அளவில் ஆவணமதிப்பைக் கொண்டுள்ளன. இவர்களில் சிலர் நாட்குறிப்பு எழுதும் பழக்கம் உடையவர்களாய் இருந்தமையால் அவையும் கூட சில சமூக-வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கி இருந்தன. அவர்கள் எதிர்கொண்ட வழக்குகள் தொடர்பான ஆவணங்களும் கூட சில நேரங்களில் வரலாற்றாவணங்களாயின.


இக் காரணங்களால் வரலாற்று வரைவுக்கான தரவுகளாகவும் ஆவணங்களாகவும் விளங்கும் தகுதியை இவை கொண்டுள்ளன. வரலாற்றறிஞர் சத்தியநாதையர் ஆங்கிலத்தில் எழுதிய மதுரை நாயக்கர் வரலாறு, 17 ஆவது நூற்றாண்டுத் தமிழகம் என்ற இரு நூல்களிலும் பிரஞ்சு மொழியில் எழுதப்பட்ட கிறித்தவ ஆவணங்களின் பயன்பாடு குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு இடம் பெற்றுள்ளது.

ஸ்பெயின் நாட்டுக் கத்தோலிக்கத் துறவி ஒருவர் ஸ்பானிஷ் மொழியில் எழுதிய பதினாறு பக்க அளவிலான ஒரு கடிதம் மதுரை, தஞ்சை நாயக்க மன்னர்கள் விசய நகர மன்னருக்குக் கப்பம் கட்டுவதை நிறுத்தியதையும்,அவர் படையெடுத்து வந்ததையும்,அவரைக் காண்பதற்காக மதுரையில் இருந்து திருமலை நாயக்கர் தஞ்சாவூர் சென்றிருந்தபோது மேல்மலைக் கள்ளர்கள் மதுரையைக் கைப்பற்றியதையும் பதிவு செய்துள்ளது. கத்தோலிக்கத் திருச்சபையில் இலத்தீன் மொழி செல்வாக்குடன் இருந்தமையால் தமிழ்நாடு தொடர்பான சில ஆவணங்கள் இலத்தீனிலும் உள்ளன.

"

*தம் மதத்தைத் துறந்து மற்றொரு மதத்தை விரும்பித் தழுவியவர்களால் சாதியைத் துறக்க இயலவில்லை என்ற வரலாற்றுண்மை முதற்பகுதியில் வெளிப்படுகிறது.*

"



ஓர் அயற் பண்பாட்டாளர் என்ற முறையில் ஐரோப்பிய மறைப்பணியாளர்கள் தமிழ்நாட்டில் அவர்கள் கண்டவற்றையும் பெற்ற அனுபவங்களையும் ஐரோப்பாவில் உள்ள மதத் தலைவர்களுக்கு மட்டுமின்றி தம் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எழுதிய கடிதங்களிலும் பதிவிட்டுள்ளனர். சேசு சபை என்ற கத்தோலிக்கத் துறவற சபையை நிறுவிய இக்னேஷியஸ் இலயோலா தம் சபையின் துறவிகள் தாம் பணிபுரியும் நாடுகளில் வாழும் மக்களின் பழக்க வழக்கங்கள், அரசியல் சமூக நிகழ்வுகள், அங்கு காணப்படும் தாவரங்கள், விலங்குகள் பறவை இனங்கள் என்பன குறித்து ஆண்டுதோறும் அவர்கள் எழுதும் கடிதங்களில் பதிவிடும்படிக் கட்டளையிட்டுள்ளார். அவரது கட்டளைப்படி எழுதப்பட்ட சேசு சபையினரின் ஆண்டுமடல்கள் இன்று வரலாற்றாய்வாளர்களுக்கு ஓர் அரிய கருவூலமாக விளங்குகின்றன. கொரியா அஃப்பென்சா என்ற இந்திய சேசுசபைத் துறவி இந்திய வரலாற்று வரைவுக்கு இக் கடிதங்களின் பங்களிப்பு குறித்து மும்பை பல்கலைக் கழகத்தில் ஆய்வு செய்து ஆய்வுப் பட்டம் பெற்றுள்ளார். ஆனால் இக்கடிதங்கள் ஆங்கிலம் அல்லாத மேலே குறிப்பிட்ட ஐரோப்பிய மொழிகளில் எழுதப்பட்டிருப்பதால் தமிழ்நாட்டின் வரலாற்றாய்வில் இவற்றைப் பயன்படுத்துவோர் குறைவுதான்.

இவர்களது தனிப்பட்ட பதிவுகளும் நூல்களும் கூட ஆவண மதிப்பைப் பெற்றுள்ளன. ஆனால் தமிழ்நாடு தொடர்பான தொடக்க காலத்திய காலனிய ஆவணங்களில் பெரும்பாலானவை போர்ச்சுக்கீஸ், டச், பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலி, ஸ்பானிஷ், டேனிஷ், இலத்தீன் மொழிகளில் உள்ளன. இம்மொழிகளில் புலமையும் வரலாற்றார்வமும் கொண்டோர் குறிப்பிடத்தக்க அளவில் தமிழ்நாட்டில் இல்லாத நிலையில் இவற்றைப் பயன்படுத்த முடியாத அவல நிலை இன்று வரை நிலவுகிறது. இத்தகைய அறிவுச் சூழலில் மேற்கூறிய ஐரோப்பிய மொழிகளில் உள்ள மூலஆவணங்களின் துணையுடன் எழுதப்பட்டுள்ள இந்நூல் குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைந்துள்ளது.

**நூலாசிரியர்:**

இந்நூலாசிரியர் ஜெயசீல ஸ்டீபன் 'உங்கள் நூலகம்' இதழின் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர். இவரது ஆங்கில நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்புகளை உங்கள் நூலகம் இதழை வெளியிடும் நியூசெஞ்சுரி புத்தக நிறுவனம் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது.

தாகூர் உருவாக்கிய விசுவபாரதி பல்கலைக் கழகத்தில்(சாந்திநிகேதன்) கடல்சார் வரலாற்றுத் துறையில் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஓய்வை அடுத்து பல்வேறு ஐரோப்பிய நாடுகளின் துணையுடன் புதுச்சேரியில் நிறுவப்பட்ட இந்திய ஐரோப்பிய ஆய்வு நிறுவனத்தின் இயக்குநராகவும் பணியாற்றி ஓய்வு



பெற்றுள்ளார். ஓலைச் சுவடிகளைத் தேடி கிராமம் கிராமமாக அலைந்து திரிந்து சேகரித்து அழிவில் இருந்து அவற்றைக் காப்பாற்றி வெளிக் கொணர்ந்த உ.வே.சா. போன்று இவரும் நாடுகள் தோறும் பயணித்து அங்குள்ள பல்வேறு ஆவணக் காப்பகங்களில் இடம் பெற்றுள்ள தமிழ்நாடு தொடர்புடைய ஆவணங்கள், பழைய இதழ்கள், ஒளிப்படங்கள், ஓவியங்கள். கிடைப்பருமையான அரிய நூல்கள் என்பனவற்றைக் கண்டறிவதுடன்,அவற்றின் துணையுடன் “தமிழக மக்கள் வரலாற்றை" எழுதி வருகிறார். மேலே குறிப்பிட்ட ஐரோப்பிய மொழிகள் பலவற்றை அவர் அறிந்துள்ளமை அவரது இப்பணிக்குப் பெரிதும் துணை நிற்கிறது.

**நூலின் அமைப்பு:**

இந்நூலின் அறிமுக உரை முதல் இயலில் இடம் பெற்றுள்ளது. இந்நூல் ஐரோப்பிய மறைப்பணியாளர்கள், தமிழ்க் கிறித்தவர்கள் குறித்துக் கூறுவதுடன், மதம் மாறிய புதிய கிறித்தவர்களின் அக-புற அனுபவங்களை ஆராய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளதாக அறிமுக உரையில் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தென் இந்தியாவில் கிறித்தவத்தின் மறைத் தளங்கள் (mission)மறைப்பணியாளர்கள் (missionaries) குறித்து இந்நூலுக்கு முன்னர் வெளியான ஒன்றிரண்டு நூல்களையும் அவற்றின் உள்ளடக்கத்தையும் குறிப்பிட்டுள்ளார். இவை மேற்கத்திய நாட்டவரால் எழுதப்பட்டவை. தமது நூல் கிறித்தவத்தை மேற்கொண்ட தமிழர்களுக்கு அது வழங்கிய அடையாளக் கட்டமைப்பு குறித்துப் பேசுவதுடன் மதமாற்றம் குறித்த அறிவுசார் புரிதலை உருவாக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதன் தொடர்ச்சியாக இந் நூலின் அமைப்பு குறித்தும் அறிமுகம் செய்துள்ளார்.

இரண்டாவது இயல் பண்டையக் காலத்திலும் இடைக்காலத்திலும் தமிழ்நாட்டில் வழக்கில் இருந்த சமயங்கள் குறித்தும்,நிகழ்ந்த மதமாற்றங்கள் மறுமதமாற்றங்கள் குறித்தும் பறவை நோக்கில் அறிமுகம் செய்கிறது. சமயவாதிகளின் சகிப்பின்மையும், மேற்கொண்ட சித்திரவதைகளும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளன. அத்துடன் இஸ்லாம் அறிமுகமானமையும் தமிழ் மக்கள் அதைத் தழுவியமையும் குறிப்பிடப்பட்டுள்ளது

இந் நூல் மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. முதல் பகுதி நான்கு இயல்களையும் (இயல்கள்3 முதல்6 வரை). இரண்டாவது பகுதி நான்கு இயல்களையும் (7-10) மூன்றாவது பகுதி மூன்று இயல்களையும் (11-13) கொண்டுள்ளன. இறுதி இயலான பதினான்காவது இயல் நூலின் முடிவுரையாக அமைந்துள்ளது

**பகுதி ஒன்று:**

நூலின் முதலாவது பகுதியிலிருந்து நூலின் தலைப்புடன் முழுமையாகப் பொருந்தும் செய்திகள் வாசகனுக்கு அறிமுகமாகின்றன. தமிழ்நாட்டின் கிறித்தவ மதமாற்ற வரலாற்றில் போர்ச்சுக்கீசியரின் பங்களிப்பு புறக்கணிக்க முடியாத ஒன்று. இது தொடர்பான செய்திகள் முதலாவது பகுதியில் இடம் பெற்றுள்ளன. பொது ஆண்டு 1510-1514 காலகட்டத்தில் தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்டக் கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்த முக்குவர்களும், 1532-1536 காலகட்டத்தில் முத்துக்குளித்துறை என்றழைக்கப்பட்ட இராமேஸ்வரம் தொடங்கி கன்னியாகுமரி வரை உள்ள கடற்கரைப் பகுதியில் வாழ்ந்து வந்த பரதவர்களும் போர்ச்சுக்கீசியரின் துணையுடன் கத்தோலிக்கர்களாக மதம் மாறினர். முக்குவரின் மதமாற்றத்திற்கு கொச்சி மன்னரும் பரதவரின் மதமாற்றத்திற்கு மதுரை நாயக்க மன்னரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மதம் மாறிய முக்குவர்களில் சிலர் இஸ்லாமியர்களாக மதம் மாறியுள்ளனர். இஸ்லாமிய இளைஞர்களைக் காதலித்து மணந்து கொண்ட முக்குவ இளம் பெண்களும், அவர்களது அன்னையரும் மதம் மாறியதாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

17ஆவது நூற்றாண்டில் கத்தோலிக்க சமயத்தின் துறவற சபைகளில் ஒன்றான சேசு சபையினர் கடற்கரைப் பகுதியில் பரவியிருந்த கத்தோலிக்கத்தை உள்நாட்டுப் பகுதியில் அறிமுகம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர். இம் முயற்சியில் பிராமண சந்நியாசிகள், பண்டாரசாமிகள் என்ற பெயர்களைக் கொண்ட இருவகையான துறவிகள் சேசு சபையில் உருவாக்கப்பட்டனர். பிராமண சந்நியாசிகள் என்போர் உயர் சாதியினரிடமும் பண்டாரசாமிகள் என்போர் இடைநிலை சாதியினர் மற்றும் தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்பட்ட சாதியினரிடமும் சமயப்பணியை மேற்கொண்டனர்.

புதிய கிறித்தவர்களுக்காக மறைப் பணியாளர் கிணறு வெட்டிக் கொடுத்தமை, அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப் பட்டமை போன்ற செய்திகள் இம் முதலாவது பகுதியில் இடம் பெற்றுள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக சாதிய வேறுபாடுகள் கிறித்தவத்திலும் நுழைந்துவிட்டதை இம் முதற்பகுதியின் இறுதி இரண்டு இயல்கள் வெளிப்படுத்தியுள்ளன. இதற்குச் சான்றாக மதுரை, திருச்சி, வடக்கன்குளம், சென்னை -இராயபுரம், கடலூர் ஆகிய ஊர்களில் வாழ்ந்த கத்தோலிக்கர்களிடையே சாதியை மையமாகக் கொண்டு உருவான முரண்பாடுகளைக் குறிப்பிட்டுள்ளார். திருமணச்சடங்கு, கல்லறைத் தோட்டம், வழிபாட்டில் அமரும் இடம் என்பன முரண்பாட்டிற்கான காரணங்களாக இருந்துள்ளன. தம் மதத்தைத் துறந்து மற்றொரு மதத்தை விரும்பித் தழுவியவர்களால் சாதியைத் துறக்க இயலவில்லை என்ற வரலாற்றுண்மை முதற்பகுதியில் வெளிப்படுகிறது.

**பகுதி: இரண்டு:**

இந்நூலின் இரண்டாவது பகுதியின் நான்கு இயல்களில் (7-10) முதலாவதாக அமைந்துள்ள ஏழாவது இயல் தமிழ் நாட்டில் பரவிய கிறித்தவத்தைத் தழுவியவர்களிடமிருந்து சமயக் குருக்கள் உருவானதை அறிமுகம் செய்கிறது. அடுத்த மூன்று இயல்களும்(8-10) சமயக் குருக்களுக்குத் துணை புரியும் வகையில் உருவாக்கப்பட்ட உபதேசியார்கள் என்போர் குறித்த விரிவான செய்திகளை அறிமுகம் செய்கின்றன. தொடக்கத்தில் பிராமண, வேளாளர் சாதிகளில் இருந்து உபதேசியார்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். பின்னர் தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்பட்ட சாதிப் பிரிவில் இருந்தும் தேர்வு செய்யப்பட்டனர். சமய வழிபாட்டுச் சடங்குகளை நடத்தி வைக்கும் உரிமையும், அதில் உதவும் உரிமையும் அனைத்துச் சாதியினருக்கும் உரிய ஒன்று என்பதை இந்நியமனங்களின் வழி கிறித்தவம் அறிமுகம் செய்துள்ளது. ஆயினும் இதை நடைமுறைப்படுத்துவது என்பது அவ்வளவு எளிதாக அதற்கு இருக்கவில்லை.

**பகுதி மூன்று:**

மூன்று இயல்களைக் கொண்ட (11-13) மூன்றாம் பகுதியில் முதல் இயல் திருவேங்கிடம் என்ற வில்லியம் ராபர்ட் என்பவரின் மதமாற்ற அனுபவங்களை வெளிப்படுத்தும் கட்டுரை. வரலாற்று ஆவணங்களின் துணையுடன் கட்டமைக்கப்பட்ட ஓர் உண்மை மனிதனின் வரலாறு என்று இதைக் குறிப்பிடலாம்.

இறுதி இரண்டு கட்டுரைகளும் மத மாற்றம் குறித்த ஆய்வுக்கட்டுரைகள்.

**நூலாசிரியரின் முடிவுரை:**

மகேந்திர பல்லவன் (பொ.ஆ.590-630), குலோத்துங்கச் சோழன் (பொ.ஆ1070-1118) ஆகியோரின் மதச் சகிப்பின்மைச் செயல்பாடுகளில் தொடங்கி சாதியம் தொடர்பான ஐரோப்பிய மறைப் பணியாளர்களின் பார்வையுடன் நூலின் இறுதி இயல் முடிவுறுகிறது.

(தொடரும்)

●

கட்டுரையாளர், நாட்டார் வழக்காற்றியலாளர்



நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்
காலத்தை வென்ற மாவீரர்கள்
₹ 325/-
அருந்ததியர் வாழும் வரலாறு
மாற்கு
₹ 560/-
அடிப்படை மாற்றங்களை நோக்கி
₹ 200/-
₹ 280/-
சிலுவை
(நாவல்)
₹ 1200/-
தமிழ் நாவல்கள்: பண்பாட்டு எழுத்து
₹ 510/-
தமிழகத்தில் மனிதர்கள் மற்றும் விலங்கினங்களுடனான தொடர்பு
₹ 420/-
சோழர் கால நிலவுடைமைப் பின்புலத்தில் கோயில் பொருளியல்
₹ 320/-
சுவர்கள்
மாற்கு
₹ 200/-
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

கட்டுரை



# செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்டம்

# கலைஞர் தமிழுக்குத் தந்த அருங்கொடை

டாக்டர் சு.நரேந்திரன்

இந்திய மொழிகளில் தமிழ்மொழியில்தான் முதன்முதலில் அகராதி உருவாக்கப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகம் 1936-இல் தமிழில் பேரகராதியை உருவாக்கியது. ஒரு காலத்தில் இந்திய மொழிகள் அனைத்தும் சமற்கிருதத்தை மூலமாகக் கொண்டு அதிலிருந்துதான் உருவாயின என்று கூறப்பட்டது. இராபர்ட் கால்டுவெல் பாதிரியார் வந்த பின்தான் சமற்கிருதத்திற்குத் தொடர்பே இல்லாத சில மொழிகள் ஒரு குடும்பமாக இருப்பதாகவும் அவை ஒரு மொழிக் குடும்பத்திற்குள் அடங்கும் என்றும் ஆராய்ந்து அவற்றிற்கான ஒப்பியல் இலக்கணத்தையும் உருவாக்கினார். அவர் கூறிய மொழிக் குடும்பமே தமிழை முதன்மையாகக் கொண்ட திராவிட மொழிக் குடும்பம். திராவிட மொழிக் குடும்பத்தில் மிகப் பழைமையான மொழியும், தொன்மையான மொழியும் தமிழ் ஆகும்.

சமற்கிருதத்தின் துணையில்லாமல் தமிழ் இயங்கக் கூடியது. மேலும் தமிழ்மொழியின் சொற்களுக்கான வேர் மூலங்களும் தமிழாகவே உள்ளன.

எனவே தமிழ் எந்த மொழியையும் சாராத தனித்தியங்கவல்ல மொழி என்று நிறுவுவதற்குத் தமிழ்ச் சொற்களின் சொற்பிறப்பியலைத் தொகுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஞானப்பிரகாசர், மாகறல் கார்த்திகேயனார் போன்றவர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் முழுதுமாக அப்பணியைச் செய்யவில்லை.

தேவநேயப் பாவாணர் சொற்பிறப்பியல் தொடர்பாக வேர்ச்சொற் கட்டுரைகள், முதல் தாய்மொழி போன்ற ஆய்வு நூல்களை வெளியிட்டார். அனைத்துத் தமிழ்மொழிச் சொற்களுக்கும் சொற்பிறப்பியல் கண்டுபிடிப்பதற்காக ஒரு துறையையே உருவாக்கித் தர வேண்டுமென்று தமிழக அரசிடம் கோரிக்கை வைத்தார். அக்கோரிக்கையைக் கனிவாக ஏற்றுக்கொண்ட அப்போதைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் எக்காலத்திலும் தனித்து இயங்கும் வகையில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தைத் (1974) தோற்றுவித்தார். சொற்களே மொழிக்கு அடிப்படை. சொற்களைப் பாதுகாத்தால் தான் மொழியைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் முடியும். சொற்கள் பெருகப் பெருக மொழியும் வளர்ந்து உயர்வு பெறும். காலந்தோறும் மொழியில் சில சொற்கள் பொருள் மாறுபாடு அடையும்; சில சொற்கள் வழக்கொழியும்; சில சொற்கள் புதிதாக உருவாகும். இவை அனைத்தையும் தொகுத்துப் பதிவு செய்து அகரமுதலி வடிவில் வெளியிடுவதே மொழி வளர்ச்சிக்கான ஆக்கப் பணியாக அமையும்.

அந்த வகையில் புலமையாளர்கள், பொதுமக்கள், ஆய்வறிஞர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பயன்படும் வகையில், தமிழில் சொற்பிறப்பியல் அகரமுதலிகளைத் தொகுத்து வெளியிட வேண்டுமென்று தமிழ்நாடு அரசு விரும்பியது.

இதனை நடைமுறைப்படுத்த தனி இயக்ககம் இருந்தால்தான் பணி சிறப்பாக அமையும் என்று எண்ணிய தமிழ்நாடு அரசு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் என்னும் துறைத் தலைமை அலுவலகத்தை 1974-ஆம் ஆண்டு தோற்றுவித்தது.

உலக மொழிகளில் தொன்மை மிக்கதும் இலக்கணச் செறிவுடையதும், பல்வேறு துறைகளிலும் இலக்கிய வளம் கொண்டதும், மிக விரைவாக வளர்ந்து வரும் அனைத்து அறிவியல் துறைகளுக்குமான கலைச்சொற்களைத் தன் சொல்வளத்திலிருந்தே உருவாக்கிக் கொள்ளும் வல்லமை வாய்ந்ததுமான தமிழ்மொழியில், சொல்லின் பொருளைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுவதற்கு உரிய வழிகாட்டுதல் தேவையாகும்.

தமிழ்மொழியின் ஒவ்வொரு சொல்லமைப்பையும் அறிந்து சிறப்பாக வெளிப்படுத்தும் ஆற்றலைப் படைப்பாளர்களும், கல்வியாளர்களும் பெற வேண்டுமெனில் தமிழின் வேர்மூலங்களை வெளிப்படுத்தும் சொற்பிறப்பியல் அகராதி அவர்களுக்கு மிகவும் இன்றியமையாதவை.

சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ்மொழிக்கு உருவாக்கிய பேரகராதிக்குப் பின் தமிழ்நாடு அரசே இந்தப் பொறுப்பை ஏற்றுத் தமிழ்ப் பேரகராதிக்கென ஒரு துறையைச் 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்' என்ற பெயரில் உருவாக்க திட்டம் வரைந்தது.

**கலைஞர் கண்ட இயக்கம்**

அதன் விளைவாக 1974ஆம் ஆண்டு, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களை முதல் இயக்குநராகக் கொண்டு தொடங்கப்பெற்றதே செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககமாகும்.

ஒரு மொழியின் தொன்மையைப் போலவே அதன் இளமையும் எளிமையும் பெருமைக்குரிய ஒன்றாகும். அதனடிப்படையில் இனிமை, வளமை, செம்மை, வியன்மை போன்ற சிறப்புகளை ஒருங்கேயுடைய தமிழ்மொழியை என்றும் குன்றாத வண்மொழியாக மிளிரச் செய்வதற்குச் சொல்லாக்கம் மிகவும் இன்றியமையாததாகும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் வாய்மொழிக்கிணங்க அகரமுதலி இயக்ககமானது இப்போது அகராதிப் பணிகளோடு, காலத்திற்கேற்ற புதிய கலைச்சொற்களை உருவாக்கி வழங்குவது உள்பட, தமிழ்மொழியின் மேம்பாட்டுக்கான ஆக்கப்பணிகளை இவ்வியக்ககம் இடைநிற்றலின்றித் தொடர்ந்து செயற்படுத்தி வருகிறது.

இவ்வியக்சுசுத்தால் கடந்த இரண்டு ஆண்டுகளில் நடைமுறைத் தமிழ்அகரமுதலி, மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி, அயற்சொல் அகராதி, தமிழ்- தமிழ் பையடக்க அகராதி, மயங்கொலிச் சொல்லகராதி, ஒருபொருட் பன்மொழி அகராதி ஆகியவை வெளியிடப்பட்டுள்ளன. ஆட்சிச்சொல்லகராதி திருந்திய பதிப்பு, துறைவாரியான ஆட்சிச்சொல்லகராதி குறுநூல், தமிழ் மரபுத்தொடர் அகராதி ஆகியவை அணியமாக்கப்பட்டு அச்சில் உள்ளன.

**மருத்துவக் கலைச்சொல் அகராதி**

தமிழ்நாடு அரசு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வழியாக, ஆங்கிலச் சொற்களுக்கு இணையான புதிய தமிழ்க் கலைச்சொல் அகராதி உருவாக்கி வெளியிட இசைவளித்து தமிழ்நாடு வெளியிட்டுள்ள அரசாணையின்படி, அகரமுதலி இயக்ககமானது, தமிழ்நாடு பாடநூல் (ம) கல்வியியல் பணிகள் கழகத்துடன் இணைந்து, துறைசார் வல்லுநர்களைக் கொண்ட குழுக்களை அமைத்து, ஆண்டுக்கொரு துறையைத் தேர்வுசெய்து கலைச்சொல் அகராதிகளை உருவாக்கி வெளியிடவுள்ளது. அதன்படி நடப்பாண்டில் முதற்கட்டமாக மருத்துவக் கலைச்சொல் அகராதி உருவாக்கப் பணி இயக்குனர் முனைவர் கோ. விசயராகவன் தலைமையில் நடைபெற்று வருகிறது. இதற்காக 2023 ஜூன் வரை 10,10,000 சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. வருகிற நவம்பர் திங்களில் வெளியிடப்படவுள்ள மருத்துவக் கலைச்சொல் அகராதி வருங்காலங்களில் மாணவர்கள் தாய்த்தமிழில் மருத்துவம் பயில பெரும் துணையாக அமையும்.


**வட்டார வழக்குச் சொற்பொருள் அகராதி:**

தமிழின் சொல் வளத்திற்கு ஆக்கம் சேர்ப்பவை தமிழக மக்களால் பேசப்படும் வட்டார வழக்குச் சொற்களே எனலாம். வட்டார வழக்குச் சொற்கள்தான் தமிழ் மொழியின் தொடக்க நிலையைக் கண்டறிவதற்கும், மூலச் சொற்களை உணர்ந்து புதுச் சொல்லாக்கம் படைப்பதற்கும் உதவியாக அமைகின்றன.

அந்தகைய வட்டார வழக்குச் சொற்களைப் பதிந்து பாதுகாக்கும் வகையில், "வட்டார வழக்குச் சொற்பொருள் அகராதி" அணியமாக்கப்பட்டு வருகிறது. இதற்காகத் தமிழ்நாட்டின் பகுதிகளை சென்னை, சேலம், திருச்சி, திருநெல்வேலி, மதுரை, கோவை ஆகிய 6 மண்டலங்களாகப் பகுத்து, ஒவ்வொரு மண்டலத்திற்கும் தனித்தனி ஒருங்கிணைப்பாளர்கள் அமர்த்தப்பட்டு, 2023 மார்ச்சு 19-ஆம் நாள் வரை 18,784 சொற்கள் திரட்டப்பெற்றுள்ளன. இவ்வகராதி விரைவில் வெளியிடப்படவுள்ளது.

**பன்மொழி அகராதியுடன் தமிழ் கற்பிக்கும் செயலி**

தெலுங்கு, கன்னடம், மலையாளம் உள்ளிட்ட திராவிட மொழிகளிலும், ஆங்கிலம், இந்தி உள்ளிட்ட பிற மொழிகளிலும் தமிழ்மொழியை இலகுவாகக் கற்கும் வகையில் அந்தந்த மொழிகளில் புலமைவாய்ந்த வல்லுநர்களைக் கொண்டு பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு பாடநூலும், பன்மொழி அகராதியும்




உருவாக்கும் பணி நடைபெற்றுவருகிறது. மேலும், பன்மொழி அகராதியை உள்ளடக்கி தமிழ் கற்கும் வகையில் திறன்மிகு குறுஞ்செயலி உருவாக்கப்பட்டு, 2023ஆம் ஆண்டுக்குள்ளாகப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படவுள்ளது.

**சொல் தொகுப்பி**

தமிழறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தமிழார்வலர்கள், அயல்நாடுவாழ் தமிழர்கள் உள்ளிட்ட அனைவரும் இணையதளம் வழியாக ஆங்கிலத்திற்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களைத் தாமே உள்ளீடு செய்யும் வகையில், "கலைச்சொல் தொகுப்பி" உருவாக்குவதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**'சொல் வயல்' மாத இதழ் வெளியிடுதல்**

கலைச்சொல்லாக்கம், சொல்லாய்வுகள், அகராதியியல், மொழியியல் சார்ந்த கருத்துக்கள் தமிழ்மொழி குறித்த செய்திகள், இயக்ககச் செயற்பாடுகள் உள்ளிட்டவற்றைக் கொண்டு "சொல்வயல்" மின்னிதழ் சொற்குவை வலைத்தளத்தில் மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. 2021 ஜூன் முதல் 2023 ஏப்ரல் வரை 35 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**சொற்குவை வலைத்தளம்**

அறிவியல் பெரிதும் வளர்ந்து கொண்டிருக்கும் இன்றைய காலத்திற்கேற்பக் கலைச்சொற்களை உருவாக்கும் திறன் பெற்ற மொழி மட்டுமே வாழும்; வளர்ச்சி பெறும். தமிழ்மொழியின் அனைத்துச் சொற்களையும் தொகுத்து, அச்சொற்களுக்கு நிகரான ஆங்கிலச் சொற்களோடு பொருள்விளக்கம் அளித்து, அச்சொற்களுக்கான வேர்ச்சொல் விளக்கத்தையும் சொற்குவை (**sorkuvai.com**) என்ற வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது.

தமிழ்மொழிக்குப் பெருமை சேர்ப்பது அதன் சொல்வளமே ஆகும். இன்றைய அறிவுப்புலத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட துறைகளில் புழங்கும் கலைச்சொற்களையெல்லாம் திரட்டி அவற்றிற்கு நிகரான தமிழ்க் கலைச்சொற்களை வடிவமைத்து இணையதளத்தின் வழியாகப் பொதுவெளியில் வெளியிடுவதும், இதுவரை தமிழில் வெளிவந்துள்ள அகராதிகளில் இடம் பெற்றுள்ள அனைத்துச் சொற்களையும் ஒன்றுதிரட்டி; அவற்றுள், வந்த சொல்லே மீளவும் வராத வகையில் (deduplication) நிரல்படுத்தி தமிழின் சொல்வளத்தை உலகறியச் செய்வதுமே அகரமுதலி இயக்ககத்தின் ‘சொற்குவை’ திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

‘சொற்குவை’ திட்டத்திற்குச் சொல் வருவாய்க் களன்களாகக் கருதப்படுகிற தமிழ்க் கலைக்கழகம், வல்லுநர்க் குழுக்கூட்டம், சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம், துறைசார் புதிய கலைச்சொற்கள் கலந்தாய்வுக் கூட்டம், இணையவழிப் பன்னாட்டுக் கலைச்சொல்லாக்கப் பயிலரங்கம் போன்றவை சொற்குவைக்குத் துணை நிற்பவையாகும்.

**தமிழ்க் கலைக்கழகம்**

புறநிலையில் உள்ள பலதுறை அறிஞர்களிடமிருந்து தமிழ்க் கலைச்சொற்களைப் பெற்றுச் சொற்குவை வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யும் நோக்கில் 01.10.2021ஆம் நாளிலிருந்து இணையவழிப் பன்னாட்டுக் கலைசொல்லாக்கப் பயிலரங்கம் நடத்தப்பெற்று வருகிறது. இதுவரையிலான 81 அமர்வுகளில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 231 அயலக அறிஞர்களும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 141 தாயக அறிஞர்களும் பங்கேற்றுள்ளனர்.

அவர்களிடமிருந்து 8,100 தமிழ்ச் சொற்கள் பெறப்பட்டு வல்லுநர்களின் ஆய்வுக்குப்பின் அவை சொற்குவை வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு அரசின் மிகச்சீரிய நடவடிக்கையின் காரணமாகவும் ஊக்குவிப்பின் பயனாகவும் 30.11.2022 நாளில் 7,81,533 சொற்களாகவும், 13.07.2023-ஆம் நாளன்று 10,10,008 சொற்களாகவும் உயர்ந்துள்ளது.

**“உலகுக்குத் தமிழ்மொழியின்**
**உயர்வுதனைக் காட்டுவாது சொற்பெருக்காம்”**

எனும் பாவேந்தரின் வாய்மொழிக்கிணங்க, உயர்தனிச் செம்மொழியாம் தமிழ்மொழி சொல்வளம் நிறைந்த மொழி என்பதால், எட்டவேண்டிய இலக்கு இன்னும் இருக்கிறது.

அகராதியியல் ஆய்வறிஞர்கள், சொல்லாக்க வல்லுநர்கள், தமிழ் அறிஞர்கள், பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், ஆய்வாளர்கள் அனைவருக்கும் பயனளிக்கும் விதமாக சொற்குவை (sorkuvai.com) வலைதளம் பயன்பட்டு வருகின்றது.

**சொற்குவையின் முதன்மை நோக்கங்கள்**

தமிழ்மொழியின் சொல்வளத்தைக் காத்தல்

தமிழ் மொழியின் சொல்வளத்தைப் பெருக்குதல்.

என்னும் இரு முதன்மை இலக்குகளை நோக்கமாகக் கொண்டு சொற்குவை செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**“என்றும் தமிழ் வளர்க - கலை**
**யாவும் தமிழ்மொழியால் விசைந்தோங்குக”**

என்று பாவேந்தரின் மொழி வேட்கையை நிறைவேற்றுவதற்குத் தமிழ்மொழியின் அனைத்துச் சொற்களையும் காக்க வேண்டியது தேவையாகிறது. இக்காலம் வரையில் மட்டுமல்ல இனி எக்காலத்திலும் எந்தத்துறை சார்ந்த பிறமொழிச் சொற்களுக்கும் நிகரான, நேர்த்தியான, பொருத்தமான தமிழ்க் கலைச் சொல்லாக்கங்களை உடனடியாக வடிவமைத்திடவும், பிறமொழி நல்லறிஞர்களின் படைப்புகளைக் கருத்துச் சிதையாமல் மொழிபெயர்த்திடவும், தமிழ்மொழிவழிக்



கல்வி, தமிழ் ஆட்சிமொழிச் செயலாக்கம் ஆகியவற்றின் முழு வெற்றிக்காகவும் தமிழின் சொல்வளத்தைக் காக்க வேண்டியுள்ளது. இத்தகைய மொழிக்காப்புப் பணியைத்தான் சொற்குவை செய்து வருகிறது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில், 06.04.2023ஆம் நாள் நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழில் சொற்பிறப்பியல் பேரகரமுதலிகளை உருவாக்கியதோடு, வேர்ச்சொல் ஆய்வின் வழியாகத் தமிழ்மொழியின் தொன்மையையும் பெருமையையும் உலகறியச் செய்த மொழிஞாயிறு தேவநேயப் பாவாணருக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில், சென்னையில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் திருவுருவச் சிலையும், கோட்டமும் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை அறிவிக்கச் செய்தார். இந்த அறிவிப்பு, பொன்விழா காண உள்ள செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்ககத்தின் தமிழ்ப்பணிகள் தமிழ்கூறு நல்லுலகம் முழுமைக்கும் ஒன்று சேர பெருவாய்ப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வெளியீடுகள்**


தமிழின் சொற்களுக்குச் சொற்பிறப்பியலுடன் கலந்த பேரகரமுதலியை உருவாக்கும் பணி 1974 இல் தொடங்கி 2011இல் 38 ஆண்டுகளில் 13,270 பக்கங்களில் 31 தொகுதிகளை உருவாக்கிய போது நிறைவு பெற்றது. இதன் பிறகு கீழ்கண்ட நூல்கள் வெளிவந்துள்ளன.

சுருக்கப் பதிப்பு (2016)
வினைச்சொல் அகராதி (2016)
வேர்ச்சொல் சுவடி (2017)
நற்றமிழ் அறிவோம் (2017)
நடைமுறைத் தமிழ் அகரமுதலி (2021)
மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி (2021)
அயற்சொல் அகராதி (2021)
ஒருபொருட் பன்மொழி அகராதி (2022)
மயங்கொலிச் சொல் அகராதி (2022)
தமிழ்-தமிழ்ப் பையடக்க அகராதி (2022)

●


கட்டுரையாளர், எழுத்தாளர், சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்.

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்
தொ.பரமசிவன் நூல்கள்










₹ 270/-
₹ 215/-
₹ 215/-

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மகத்தான படைப்பு விரைவில்...

# சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம்

### ஒரு நூற்றாண்டு வாசிப்புப் பின்புலத்தில்

பாடல் - பாடவேறுபாடு - உரைவேறுபாட்டு விளக்கங்கள் - பாடற்கருத்து - அருஞ்சொற்பொருள் - விரிவான ஆய்வு முன்னுரை எனும் அமைப்பில்

எண்மரின் பத்தாண்டுகாலக் கடும் உழைப்பில்

20 தொகுதிகள், 8000 பக்கங்கள்

உயர்ந்த கட்டமைப்பில்

தமிழக வரலாற்றில் முதல்முறையாக

நற்றிணை - க.பாலாஜி,
குறுந்தொகை - இரா.அறவேந்தன்,
ஐங்குறுநூறு - ம.லோகேஸ்வரன்,
பதிற்றுப்பத்து - இரா.மகிழேந்தி,
பரிபாடல் - ம.லோகேஸ்வரன்,
கலித்தொகை - மு.முனீஸ்மூர்த்தி,
அகநானூறு - மா.பரமசிவன்,
புறநானூறு - அ.செல்வராசு,
திருமுருகாற்றுப்படை - நித்தியா அறவேந்தன் & இரா.அறவேந்தன்,
பொருநராற்றுப்படை - அ.செல்வராசு,
சிறுபாணாற்றுப்படை - அ.செல்வராசு,
பெரும்பாணாற்றுப்படை - இரா.அறவேந்தன்,
முல்லைப்பாட்டு - நித்தியா அறவேந்தன்,
மதுரைக்காஞ்சி - அ.செல்வராசு,
நெடுநல்வாடை - இரா.மகிழேந்தி,
குறிஞ்சிப்பாட்டு - நித்தியா அறவேந்தன்,
பட்டினப்பாலை - இரா.மகிழேந்தி,
மலைபடுகடாம் - மு.முனீஸ்மூர்த்தி,



கட்டுரை

# இயற்கையிலிருந்து எடுத்துக்கொண்டார்கள்

**அ.கா.பெருமாள்**

கிராமியக் கலைஞர்களின் இன்றைய கலை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படும் ஒப்பனை, கருவிகள், இசைக்கருவிகள், நிகழ்த்தும் முறை, பாடல்களின் இசை வடிவம், மூலப்பனுவல், என்பனவற்றில் ஏற்பட்ட மாற்றங்களை ஆய்வாளர்கள் அங்கங்கே பதிவு செய்திருக்கிறார்கள் என்றாலும் தமிழகத்தின் கிராமிய கலை வடிவங்கள் எல்லாவற்றிலும் நிகழ்ந்த வடிவ மாற்றங்கள் கருவிகளின் மாற்றங்கள் என எல்லாம் பதிவு செய்யப்பட்டதா என்று தெரியவில்லை.

இன்றைய நிலையில் 80 வயது கலைஞர்களில் சிலரைச் சந்தித்தபோது "என் தாத்தா இந்த இசைக்கருவியைப் பயன்படுத்தியதாகச் சொல்லி இருக்கிறார்கள். சில இசைக்கருவிகளை நாங்கள் பயன்படுத்தக் கூடாது என்றும் சொல்லி இருக்கிறார்கள். எங்கள் ஜாதிக்காரங்க சலங்கை கட்டி ஆடக்கூடாது. கோவிலில் நடனமாடும் தேவதாசிகள் மட்டும்தான் சலங்கை கட்டி ஆடலாம். அதனால் எங்கள் முன்னோர்கள் வாகை மரத்தின் நெத்தை கயிற்றில் கோர்த்து கட்டிக்கொண்டு ஆடினார்கள்; நான் அப்படி ஆடவில்லை. ஆனால் தாத்தா சொல்லிக் கேட்டிருக்கிறேன்" என்று சொன்னார்கள்.

இன்றைய வயதான கலைஞர்களிடமிருந்து அவர்களின் நேரடி அனுபவத்தைப் பதிவு செய்கின்றபோது பலர் தன் சமகால விஷயங்களையே சொல்லிக்கொண்டு போவதைக் கவனித்திருக்கிறேன். நாமாக உங்கள் தாத்தா காலத்தில் எப்படி நடந்தது என்று கேட்டால் பழைய நினைவைப் பகிர்ந்து கொள்வார்கள். பெரும்பாலும் அது தாத்தா சொல்லி கேட்டதாக இருக்கும். சிலர் வாய்வழி கேட்ட விஷயங்களை தன் சமகாலத்தில் நடந்தது மாதிரி சொல்லவும் கேட்டிருக்கிறேன். கள ஆய்வு செய்கின்ற ஆய்வாளனுக்கு இது ஒரு பிரச்சனை.

மராட்டிய மொழியைத் தாய் மொழியாகக் கொண்டதோல்பாவைக்கூத்து கலைஞர்களில் ஒருவர் 500 - 600 வருஷம் முன்பே நாங்கள் தமிழ்நாட்டிற்கு வந்து விட்டோம் ; நாங்கள் 17ஆம் தலைமுறை. எங்கள் பகுதியில் இருந்து இந்தக் கலையைக் கொண்டு வந்தோம் என்று சொன்னார். தமிழகத்தில் மராட்டிய ஆட்சி 1659 - 1855 ஆண்டுகளில் இருந்தது என்பது வரலாறு. சில தகவலாளிகளின் பேச்சு வரலாற்றுக்கு முரணாக இருந்ததைக் கவனித்திருக்கிறேன்.

தோல்பாவைக் கூத்துக் கலைஞர்களில் எதார்த்தமாக இயல்பாக பேசுகின்றவர்களில் சுப்பையா ராவ், பரமசிவராவ், கணபதிராவ் போன்றோர் முக்கியமானவர்கள் என்று நினைக்கிறேன். இவர்களிடம் நான் சேகரித்த பல விஷயங்களைப் பின்னர் ஒப்பிட்டுப் பார்த்து உண்மை என்பதை ஊகித்து இருக்கிறேன்.

எழுபதுகளின் இறுதியில் தோல்பாவைக் கூத்து பார்ப்பதற்கு அஞ்சுகிராமம் என்ற கிராமத்திற்குச் சென்றபோது சுப்பையா ராவிடம் பேச (1908-1999) முடிந்தது அப்போது அவர் 75 வயதைத் தாண்டி விட்டார். அவரது தந்தை கோபால ராவ் (1882- 1976) தாத்தா கிருஷ்ணராவ் (1860- 1940) ஆகியோர் சொன்ன விஷயங்களை விரிவாகவே சொன்னார்

அன்று நான் பார்த்த நல்லதங்காள் கூத்தை சுப்பையாவின் தம்பி பரமசிவராவ் நடத்தினார். சுப்பையா ராவ் பின்பாட்டு பாடினார். நிகழ்ச்சி முடிந்த பின் இரவு 10 மணிக்கு மேல் சாலையோர கடையில் ஒன்றாக சென்று டிபன் சாப்பிட்டு விட்டு கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அந்த மாதிரி சந்தர்ப்பங்கள் கிடைப்பது அரிது. நான் அதற்காக காத்திருந்து செய்திகளைச் சேகரித்து இருக்கிறேன்.

சுப்பையாராவ் பழைய விஷயங்களை ரசபாவத்துடன் சொல்லுவார். அன்று அவரது தாத்தா கிருஷ்ணராவ் சொன்ன விஷயங்களைச் சொன்னார். எனக்கு முக்கியமாக தோலில் படங்களை வரையும் முறை பற்றி அறிய வேண்டும் என்று தோன்றியது. அதைப் பற்றியே கேட்டேன்.

தோல்பாவைக்கூத்து கலை பற்றியும் கலைஞர் பற்றியும் செய்தி சேகரிக்கின்றவர்கள் மின்சாரம் வருவதற்கு முந்திய காலம் வந்த பின்பு உள்ள காலம் என்னும் காலகட்டத்தின் அடிப்படையில் செய்தி சேகரித்தால் பகுத்து ஆய்வதற்கு வசதியாக இருக்கும். ஏற்கனவே இது பற்றி மு.ராமசாமி என்னிடம் சொன்னதன் அடிப்படையில் கேள்விப்பட்டியலைத் தயார் செய்திருந்தேன்.

தோல் பாவைகளைச் செய்வதில் ஆட்டுத்தோலை வாங்கியதும் உடனே பதப்படுத்துவது தோலில் படம் வரைந்து நிறம் கொடுப்பது என்னும் இரண்டு நிலைகளில் பகுத்துக் கொண்டு செய்திகள் சேகரிக்கலாம். இதுவும் கூட இரண்டு காலகட்டங்களில் மாற்றம் அடைந்திருக்கிறது

தோலில் படம் வரைந்து சாயம் பூசுவதற்கு கோழிச் சாயம் எனப்படும் (இது ஓலைச்சாயம் எனவும் படும்) ஒரு வகை சாயத்தை இப்போது பயன்படுத்துகிறார்கள். இந்தச் சாயப்பொடியில் தண்ணீர் கலந்து வரைவது என்னும் வழக்கம் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வந்துவிட்டது என்பதை சுப்பையாராவின் பேட்டியின் வழி ஊகித்துக் கொண்டேன். அதற்கு முன்பு தோலில் நிறம் கொடுக்கும் முறை பற்றி சுப்பையா ராவ் அவரது அண்ணன் கணபதி ராவ் ஆகியோர் அவர்களின் தாத்தா வழிகேட்ட செய்திகள் மூலம் அறிந்து கொண்டேன்.

முந்திய காலங்களில் தோல்பாவைக் கூத்துக்கு உரிய ஆட்டுத்தோல் இலவசமாக கிடைத்தது. அப்போது அதைப் பயன்படுத்தியதற்கு ஒரு முறை இருந்தது. தோலை சாதாரண நீரிலோ சுண்ணாம்பு கலந்த நீரிலோ இரண்டு நாட்கள் ஊற வைத்த பின்பு தோலின் மேல் உள்ள ரோமத்தை எளிதாக அகற்றுவார்கள். பின்னர் தோலை வெயிலில் காய வைப்பர். அதற்கும் கூட ஒரு முறை உண்டு.

தோலை இழுத்துக் கட்டி ஆணி அடித்து டெம்பராக ஆகும்படி செய்து காய வைப்பர். அது தகடு போல் ஆகிவிடும். அதன் பிறகு தேவையான படத்தைக் கரித்துண்டால் வரைபடம் போல் வரைவர். சாயம் கொடுத்த பின்பு பட வடிவத்தை உளியால் வெட்டிக்கொள்ளுவர்.

இன்றைய நிலையில் ஏற்கனவே பதப்படுத்தப்பட்ட ஆயத்தமான தோலை விலைக்கு வாங்கிக் கொள்கின்றனர். பெரும்பாலும் இசைக்கருவிகள் விற்கும் கடைகளில் பதப்படுத்தப்பட்ட தோல் கிடைக்கின்றது.

தோல்பாவைக் கூத்துக் கலைஞர்களிடம் நிறம் கொடுப்பதில் ஒரு வரன்முறை இல்லை. நிறம்



அடர்த்தியாக இருக்க வேண்டும். பாவையைத் திரையில் காட்டும் போது ஒளி ஊடுருவ வேண்டும். இந்த எண்ணத்துடனேயே நிறம் கொடுக்கின்றனர். கருப்பு, நீலம், சிவப்பு, பச்சை போன்றவை அடிப்படை நிறங்கள்.

தமிழகப் பாவைகளின் நிறங்களின் அடிப்படையில் அவை நல்ல பாத்திரங்களா, கெட்ட பாத்திரங்களா என்று பகுக்க முடியவில்லை. வண்ணங்களைக் குறித்த கலைஞர்களின் சிந்தனை சாதாரணமாக உள்ளது. பொதுவாக ராமன், நீலம், பச்சை ஆகிய நிறங்களிலும் பரதன் பச்சை நிறத்திலும் சீதை, இலக்குவன், தசரதன், ராவணன் ஆகியோர் சிவப்பு நிறங்களிலும் இருப்பதை விரும்புகின்றனர்

தமிழகக் கலைஞர்கள் பாவைகளின் நிறங்களை விட ஆபரணத் துளைகள் போடுவதில் கவனம் செலுத்துகின்றனர். தோலில் துளை போடுவதற்கென சிறிய பல்வேறு உளிகளை வைத்திருக்கிறனர். ஆபரணத் துவாரங்கள் வழி ஒளி ஊடுருவதால் படங்களின் தரம் கூடும் என்றும் இந்தப் பாவைகளைப் பார்வையாளர்கள் விரும்புகின்றனர் என்றும் கூறுகின்றனர். பாவைகள் அடர்த்தியில்லாமல் இருந்தால் பார்வையாளர்கள் குறை கூறுகின்றனர். இதனால் பாவைகளுக்கு அடிக்கடி நிறம் கொடுக்கின்றனர்

கறுப்பு நிறப் பொடி தயாரிப்பதற்கென்று ஒருமுறை உண்டு. தூய்மையான வெள்ளைத் துணியில் ஆமணக்கு எண்ணெய் தோய்த்து திரியாகச் சுற்றி அகல்விளக்கில் வைத்து ஆமணக்கு எண்ணெய் விட்டு எரிப்பர். விளக்கு நன்றாக எரியும் போது அகன்ற வாயுள்ள மண்சட்டியின் மூடியை விளக்கில் காட்டுவர். கொஞ்ச நேரம் ஆனதும் மண் சட்டியின் உள் பகுதியில் படிந்திருக்கும் கரியைப் பனை ஓலையால் சுரண்டிச் சேகரிப்பர். இந்தப் பொடியை வேப்பம் பசையுடன் கலந்து கொஞ்சம் நீர் விட்டு குழைத்துப் பயன்படுத்துவர்.

சிவப்பு நிறச் சாயத்தை சப்பாத்திக்கள்ளியின் பழத்திலிருந்து எடுப்பர். நன்றாகப் பழுத்த சப்பாத்திக் கள்ளிப் பழத்தில் சிறு ஊசியால் குத்தினால் சிவப்பு திரவம் வழியும். இதை கொட்டாங்கச்சி மூடியில் சேகரித்துக்கொள்ளுவர். இதைத் தண்ணீர் சேர்க்காமல் பயன்படுத்துவர். கள்ளிப் பழச்சாறு வயலட் நிறத்தில் இருக்கும். இதில் வேப்பம் பசையைக் கொஞ்சமாகக் கலந்தால் வயலட் தன்மை மாறிச் சிவப்பாகும்.

மஞ்சள் நிறத்துக்கு கஸ்தூரி மஞ்சளைப் பொடித்துப் பயன்படுத்துவது தோல்பாவைக் கூத்துப் படங்களுக்கு மட்டுமல்ல களமழுத்தும் பாட்டுக் கலையைப் போன்ற வேறு நாட்டார் கலைகளுக்கும் பொதுவானது. தோல்பாவை, கூத்துக் கலைஞர்கள் மஞ்சள் பொடியில் வேப்பம் பசையைக் கலந்து தண்ணீரையும் சேர்த்து குழைத்து பயன்படுத்துகின்றனர்.

மஞ்சள் நிறம் சில தோல்களில் ஒட்டாமல் இருப்பதுண்டு. அதனால் பூவரசு மரத்தின் மொட்டின் முனையை அறுத்துவிட்டு தண்ணீரில் தோய்த்து தோலில் வண்ணம் கொடுப்பர். மஞ்சள் பொடியை விட பூவரசம் மொட்டு இயல்பாக அடர்த்தியாக இருக்கும். அது எளிமையாக கிடைப்பதும் கூட.

நீல நிறத்திற்கு அவரிச்செடியின் இலையைப் பயன்படுத்தினர். சுப்பையா ராவ் அவுரியைப் பயன்படுத்தும் முறை பற்றி மேலோட்டமாகச் சொன்னார். கிழக்கு இந்திய கம்பெனி நூற்பு ஆலைகளுக்குத் துணியில் நீல நிற சாயத்திற்கு அவுரியை பயன்படுத்திய கதை நீண்ட வரலாறு. அவுரி பயிரிட்டதால் பஞ்சம் வந்தது என்பது வரலாறு இந்த அவுரி இலையை எப்படி பயன்படுத்தினார்கள் என்று தெரியவில்லை.

பூலாத்தி மரத்தின் பழத்தை நீல வண்ணத்திற்கும் பயன்படுத்துவது உண்டு. 10 முதல் 20 பழங்களை வெள்ளைத் துணியில் வைத்து இறுக்கிக் கட்டி கையால் பிழிந்தால் நீல நிறச் சாறு வழியும். அதை சேகரித்து வேப்பம் பசை சேர்த்து பயன்படுத்தினர்.

வாராய்ச்சி மரத்தின் இலையை இடித்து கசக்கி பிழிந்து சாற்றை எடுத்து வேப்பம் பசையுடன் சேர்த்து பச்சை நிறத்தை தயார் செய்தனர். அதில் கருப்புப் பொடியைக் கொஞ்சமாக சேர்த்தால் கரும் பச்சையாகும். மஞ்சள் பொடியை மிகக் குறைவாக சேர்த்தால் இளம் பச்சையாகும்

வெள்ளை நிறத்துக்குத் தனியாக தயாரிப்பு கிடையாது. தோல் நிறத்தை இயல்பாக விட்டுவிடுவர்.

எண்பதுகளின் பாதியில் தோல்பாவைக் கூத்து பற்றி விரிவான அறிக்கை தயாரிக்க பல்கலைக்கழகம் மானியம் கிடைத்தபோது பரமசிவராவை சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். முக்கியமாக நூறு ஆண்டுகளுக்கு முன்பு பாவைக்கூத்து எப்படி நடந்ததோ அதை மறுபடியும் நடத்த விரும்பினேன். அதற்காக நாகர்கோவில் இருளப்பபுரம் சிவன் கோவில் நிர்வாகிகளிடம் உதவி கேட்டேன். கோவில் வளாகத்தில் உள்ளே நிகழ்ச்சி நடத்த அனுமதித்தார்கள்

பாவைகளுக்கு உரிய தோலை இயல்பான நிலையில் பதப்படுத்த வேண்டும் என்று பரமசிவராவிடம் கேட்டுக் கொண்டேன். ஆயுத்த நிலையில் உள்ள தோலைத் தவிர்க்கச் சொன்னேன். அப்போது வள்ளியூர் அருகே உள்ள ஒற்றைப்பனை சுடலை மாடன் கோவில் விழாவில் நூற்றுக்கணக்கான ஆடுகள் பலி கொடுத்தார்கள். கோவில் சாமியாடியின் மகள் என் மாணவி. அவளது சிபாரிசு பேரில் பத்துக்கு மேற்பட்ட ஆட்டுத் தோல்களைப் பரமசிவராவிற்கு இலவசமாய் பெற்றுக் கொடுத்தேன். சுப்பையாராவின் உதவியுடன் தோலைப் பதப்படுத்திய போது கூடவே இருந்தேன்.

தோலில் வண்ணம் தீட்டுவதற்குரிய பொருட்களைச் சேகரிப்பது சிரமமாக இருந்தது. குறிப்பாக சப்பாத்திக் கள்ளியில் உள்ள பழத்தை எடுப்பது ஒரு சவால். அந்தக் கள்ளிப் புதரில் பாம்புகள் நிறையத் தங்கும். அதனால் அதற்குப் பாம்புக் கள்ளி என்ற பெயர் உண்டு. பழத்தைப் பறிக்க பரமசிவராவின் மகன் தயங்கினான். நான் பாம்பு பிடிக்கும் புல்லுக்கட்டி நாயக்கர் ஒருவருக்குப் பணம் கொடுத்து சப்பாத்திப் பழங்களைப் பறிக்கச் செய்தேன்

பத்து தோல்களில் 18க்கும் மேற்பட்ட கதாபாத்திரங்களை வரைந்தார்கள். நடத்துவதிலும் பழைய முறையைப் பயன்படுத்த வேண்டும் என்று சொன்னேன். கூத்து அரங்கிற்குள் புன்னைக்காய் எண்ணெய் விளக்கை பயன்படுத்தினோம். அந்த விளக்கு கூட சுப்பையா ராவ் 50 களில் பயன்படுத்திய விளக்கின் மாதிரி அது. விளக்கு பிரகாசமாக இருந்தது

பரமசிவராவ் மைக் கூட வேண்டாம் என்று தவிர்த்து விட்டார். குறைவான பார்வையாளர்கள் அன்று இருந்தனர். நிகழ்ச்சி கச்சிதமாக முடிந்து விட்டது. மின்விளக்கிலேயே பழகிய பார்வையாளர்களுக்கு புன்னகாய் எண்ணெய் விளக்கு பிரச்சனையாக இருக்கவில்லை. ஒருவிதத்தில் சொல்லப்போனால் பாவைகளில் ஒளி ஊடுருவதற்கு பாவை அசைவிற்கு எண்ணெய் விளக்கு நன்றாக இருந்தது. பார்வையாளர்களிடம் இது பற்றி நான் கேட்டபோது அவர்கள் பாவைகளைப் பார்ப்பதில் சிரமம் இருக்கவில்லை என்றார்கள். பழக்க தோஷமும் மனநிலையும்தான் ரசனை மாற்றத்திற்கு காரணமா?

●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர். நாட்டார் வழக்காற்றியல் மற்றும் சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்.

**புத்தகங்கள் அச்சிட அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

கட்டுரை

# காட்டுணவு



முனைவர் ஆறு. இராமநாதன்

வீட்டில் சமைத்து உண்ணும் உணவை வீட்டுணவு எனலாம். வீட்டுக்கு வெளியே குளம் குட்டைகளில், தோப்பு துரவுகளில், வயல் வரப்புகளில், காடு கரம்பைகளில் கிடைத்து, சமைக்காமல் உண்ணும் உணவுகளைக் காட்டுணவு எனலாம். காட்டுணவு இயற்கையில் கிடைப்பது. நிலத்தின் தன்மைகளோடும் பருவ காலங்களோடும் (Seasons) தொடர்பு கொண்டது. ஒவ்வொரு பருவ காலத்திலும் ஒவ்வொரு வகை உணவு கிடைக்கும். இந்த உணவுகள் இங்குக் கூறப்போகும் களம், காலத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கினால், வயிற்றை நிரப்புவதற்கானவை என்று கூற முடியாது. விளையாட்டில் ஏற்படும் சோர்வை நீக்கி உற்சாகமாக விளையாட வைக்க உதவுபவை எனலாம். சில வேளைகளில் வயிற்றை நிரப்பவும் பயன்படும்.

நான் பிறந்து வளர்ந்தது மஞ்சக்கொல்லை என்ற கிராமம். முன்பு தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தைச் சேர்ந்ததாக இருந்த இந்த ஊர், தற்போது கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டத்திற்குரியதாக உள்ளது. சிதம்பரத்திலிருந்து சேலம் செல்லும் நெடுஞ்சாலையில் புவனகிரியிலிருந்து மேற்கே 8 கி.மீ.

தூரத்தில் உள்ளது இவ்வூர். நெடுஞ்சாலையில் பேருந்து நிறுத்தத்திலிருந்து வடக்கே செல்லும் வழித்தடத்தில் 500 மீ. நடந்தால் கிழக்கு மேற்காக அமைந்திருக்கும் மஞ்சக்கொல்லை கிராமம். சாலையையொட்டி மேற்கு - கிழக்காக ஓடும் பாட்டவாய்க்கால் (அல்லது மானம்பாத்தான் வாய்க்கால்). ஊர் செல்லும் வழித்தடத்தின் இருபுறமும் நொச்சி, ஆடாதொடை, காட்டாமணக்கு வளர்ந்திருக்க, கீழே பள்ளமான நெல் வயல்கள். இன்னும் சற்று நடந்தால் ஊரையொட்டி மணியன்குட்டை வாய்க்கால். ஊரின் அனைத்து வாய்க்கால்களும் கிழக்கு நோக்கி ஓடுபவையே. அதே வழித்தடத்தில் ஊரைத் தாண்டிச் சென்றால் ஒரு கன்னி (சிறு வாய்க்கால்). மேலும் 500 மீ. நடந்தால் முரட்டு வாய்க்கால். இது ஊரின் வடக்கு எல்லை. ஊருக்குக் கிழக்கிலும் மேற்கிலும் இரு குளங்கள். ஊருக்கு மேற்கே 500 மீ. நடந்தால் பட்டியலின மக்கள் குடியிருப்பு - ஒரு குளத்துடன்.

நெடுஞ்சாலைக்கு வடக்கேயும் ஊருக்கு வடக்கேயும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை இருபோகமும் முப்போகமும் விளையும் நெல் வயல்கள். மாசி, பங்குனி மாதங்களில் பயறும், உளுந்தும் விளையும் நிலங்கள் அவை. நெடுஞ்சாலைக்குத் தெற்கே புஞ்சை நிலங்கள். கம்பு, கேவுரு, சோளம், மல்லாட்டை, கரும்பு, வள்ளிக்கிழங்கு, எள் விளையும் நிலங்கள் அவை. இவை மாறி மாறிப் பயிர் வைக்கப்படும்.

நெடுஞ்சாலைக்குத் தெற்கே 100 மீட்டரில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவிலான ஐயனார் கோயில் தோப்பு. அதையொட்டித் தெற்கே பெரிய வாய்க்கால் அல்லது அரியகோஷ்டி வாய்க்கால். வாய்க்காலுக்குத் தெற்கே ஒரு கன்னி. இந்தக் கன்னிதான் ஊரின் தெற்கு எல்லை. மேற்கே மிராளூர் என்ற ஊரும், சீப்பான் ஏரியை ஒட்டியுள்ள பகுதிகளும்; கிழக்கே சீயப்பாடி என்ற ஊரும், மேற்கு, கிழக்கு எல்லைகளாக உள்ளன. பெரிய வாய்க்காலிலிருந்து பிரிந்து தெற்கு வடக்காக நீளும் சம்போடை என்ற ஓடையும் உண்டு என்பது கூடுதல் செய்தி.

இந்த எல்லைக்குட்பட்ட ஊர்த் தெருக்கள், வீட்டுத் தோட்டங்கள், குளங்கள், அவற்றின் கரைகள், வழித்தடங்கள், வாய்க்கால்கள், அவற்றின் கரைகள், அறுவடையான வயல்கள், நெடுஞ்சாலை ஓரங்கள், ஐயனார் கோயில் தோப்பு போன்ற இடங்கள் எங்களின் விளையாட்டுக் களங்கள். மழைக்காலங்களில் வெளியில் சென்று விளையாடுவது குறைவு. சேறும் சகதியுமான களிமண் பூமி. தண்ணீர் தேங்குமிடங்களில் காகிதக் கப்பல் விடுவதோடு சரி. பள்ளி நாட்களில் வீட்டுக்கருகில் விளையாட்டுக்களம் அமையும். விடுமுறை நாட்களிலும் கோடைக்காலங்களிலும் வீட்டிலிருந்து தூரமான பகுதிகளில் விளையாட்டுக்களம் அமையும். அம்மா, அப்பா உடனே வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிடாத தூரத்தில் களம் அமையும். எங்களின் விளையாட்டுகள் பற்றியோ, விளையாட்டுக் களங்கள் பற்றியோ இங்கு விளக்கப் போவதில்லை. காட்டுணவு குறித்த விவரங்களும் அதற்கான களங்களும் மட்டுமே இங்குச் சுருக்கமாகக் கூறப்படுகின்றன.

முதலில் முருகன் கோயில் நந்தவனத்திலிருந்து தொடங்கலாம். எங்கள் வீட்டிற்கு மேற்புறம் (இடையில் வழித்தடம்) முருகன் கோயில் உள்ளது. மேலக்குளத்தின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள ஊர்ப் பொதுக்கோயில் அது. ஊரிலிருந்து வெளியூருக்கு மணமுடிக்கச் செல்லும் பெண்கள் இந்தக் கோயிலில் வழிபட்ட பின்னரே செல்வர். மணமுடித்து வருபவரும் இந்தக் கோயிலில் வழிபட்டே வீட்டிற்குச் செல்வர். பங்குனி உத்திரத்தன்று காவடி எடுப்பும், அன்னதானமும் சிறப்பாக நடைபெறும். கார்த்திகை மாதத் திங்கட்கிழமைகளில் (சோமவாரம்) படையல் சிறப்பாக இருக்கும்.

கோயிலின் தென்புறம் கோயில் நந்தவனம். தெற்குக் கடைசியில் ஒரு கூரைக் குடில். நந்தவனம் சுமார் அரை ஏக்கர் நிலத்தில் அமைந்திருக்கும். நந்தவனத்தின் மேற்கே - குளத்தையொட்டி - தாழம்புதர்கள் அடர்ந்திருக்கும். அதன் ஒருபக்கம் ஏற்ற மரம் நடப்பட்டிருக்கும். கோடைக்காலங்களில் நந்தவனம் காய்ந்து விடாமல் குளத்திலிருந்து நீரிறைக்க வசதியாக நந்தவனத்தின் நடுவில் மிக உயரமான இரு தென்னை மரங்கள் இருக்கும். வில்வ மரம், நெல்லிமரம், செம்பருத்தி, பவளமல்லி, ஒற்றை நந்தியாவட்டை, இரட்டை நந்தியாவட்டை, திருநீற்றுப்பச்சிலை, வெட்டுக்காயப் பச்சிலை (கட்டிப்போட்டால் குட்டி போடுமே அது), துளசி, இருவாட்சி என்று அடர்ந்திருக்கும் பசுமைச்சோலை அந்த நந்தவனம். அதனை உருவாக்கிப் பராமரிப்பவர் சின்னச்சாமியார்.

சின்னச்சாமியின் உண்மையான பெயர் தெரியாது. பூர்வீகம் தெரியாது. இவர் நந்தவனத்திலுள்ள கூரைக் குடிலில் தங்குவார். அங்கே சில மலையாள நூல்களைப் பார்த்த நினைவு. அதனால் இவர் மலையாளத் தேசத்திலிருந்து தமிழகம் வந்து சாமியாரானவராக இருக்கலாம். இவர் முருகன் கோயிலில் வந்து தங்கியிருந்தபோது ஒருமுறை ஏதோ வருத்தம் காரணமாக ஊரைவிட்டுச் சென்றுவிட்டதாகவும், ஊரார் இவரைத் தேடிப் பிடித்து மீண்டும் அழைத்து வந்ததாகவும் கூறுவர். பின்னர், இவர் ஊர் மக்களோடு ஒன்றிவிட்டார். திட்டமான உயரம். மாநிறம். காவி வேட்டி, துண்டு. கழுத்தில் உருத்திராட்ச மாலை. அமைதி தவழும் முகம். மாலையில் பாத்திரத்துடன் வீடு வீடாகச் சென்று பெயர் சொல்லி அழைப்பார். அவர்களும் உணவு அளிப்பர். தானும் உண்பார். கோயிலில் வந்து தங்கும் பரதேசிகளுக்கும் உணவளிப்பார். காலையிலும் அப்படியே. மதியம் மட்டும் பொங்கி முருகனுக்குப் படைப்பார்.

நானும் என் சேக்காளிகளும் (நண்பர்கள்) கோயிலின் சுற்றுப் பிரகாரத்தில், குறிப்பாக நந்தவனத்திற்கும் கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் கோலி ஆடுவோம். எங்கள் ஆட்டக்களம் அது. காலை நேரத்தில் சாமிக்கு (சின்னச் சாமியாருக்கு)ப் பூப்பறிக்கவும், மாலை கோர்க்கவும் உதவுவோம். நந்தவனத்தில் பவளமல்லியைப் பறித்து நூலில் கோர்த்து மாலையாக்கல் - செம்பருத்தி, நந்தியாவட்டை போன்ற மலர்களைப் பறித்துக் கொடுத்தல் போன்ற வேலைகளைச் செய்வோம். நந்தவனத்தில் பூத்திருக்கும் செம்பருத்திப்பூ, கருப்பும் சிவப்புமாகப் பழுத்துக் கிடக்கும் சற்றே இனிப்பான மணத்தக்காளி, சீமைத்தக்காளிப் பழம் (வெடித்தக்காளி என்றும் கூறுவர்), மூங்கில் படல் வேலியில் படர்ந்திருக்கும்

முசுமுசுக்கைக் கொடியில் காய்த்திருக்கும் (மிளகைவிடச் சற்றுப் பெரிதான) வெள்ளரிக்காய் சுவையை ஒத்த சுவையுடைய முசுமுசுக்கைக் காய், கோவைக் கொடியில் தென்படும் பூவோடு கூடிய சிறு பிஞ்சு மற்றும் செக்கச் சிவந்த கோவைப்பழம், துளசி இலைகள், தரையில் படர்ந்து அரை அடி உயரம் தலையைத் தூக்கி நிற்கும் அம்மான்பச்சரிசியின் துவர்ப்பான சிறிய காய், கீழே விழுந்து கிடக்கும் பெருநெல்லிக்காய், வேலியில் நடப்பட்டுள்ள கிளுவை மரக்கிளையில் துளிர்த்திருக்கும் கிளுவை மர இலைகள் எல்லாம் எங்களின் சிற்றுணவுகள். தாழம்புதரின் நுனிப் பகுதியில் இரண்டு மூன்று மடல்களை ஒன்றாகப் பிடித்து மெதுவாக இழுத்தால் மடல் அறுந்து வெளிவரும். அதன் அடிப்பக்கக் குருத்துப் பகுதி வெண்மையாக இருக்கும். இது தாழைச்சோறு என்று சுட்டப்படும். கடித்து மென்றால் மொறுமொறுவென்று அதுவும் ஒரு சுவைதான்.

கோயிலுக்கு வடபுறம் தொடக்கப் பள்ளியின் கூரைக் கட்டடம். பள்ளிக்கு வடபகுதியில் ஓர் அரச மரமும், அதன்கீழ் குளத்தங்கரைப் பிள்ளையாரும். அரச மரம் பழுக்கும் காலத்தில் மரத்தின் கீழே பாய்விரித்தாற்போலச் சிறுசிறு அரசம் பழங்கள். நல்ல பழங்களாகப் பார்த்து எடுத்து உண்போம். பழுக்கும் காலத்தில் காக்கைகளும், குருவிகளும், கிளிகளும், அணில்களும் ஒரே ஆரவாரமாக இருக்கும். அவற்றோடு நாங்களும் மகிழ்ச்சியாக இருப்போம்.

அரச மரத்தைத் தொடர்ந்து ஆண்கள் குளிக்கும் படித்துறையும், தொடர்ந்து இருபது அடி தள்ளி, பெண்கள் குளிக்கும் படித்துறையும் இருக்கும். முடிவில் குளத்தின் கிழக்குக் கரை முடிந்து வடக்குக் கரை தொடங்குமிடத்தில் ஓர் ஆல மரம். இம்மரம் பழுக்கும் காலத்தில் இதன் கிளைகளெல்லாம் நெருப்புப் பிடித்தாற்போல் சிவப்பாகப் பழுத்திருக்கும். அரச மரத்தைப் போலவே பறவை முதலானவற்றின் கீச்சொலிகள் இடையறாமல் ஒலிக்க, கீழே விழும் பழங்களை நாங்கள் பொறுக்குவோம். பழத்தைப் பிட்டு உள்ளே பூச்சி ஏதேனும் உள்ளதா என்று பார்த்து வாயால் நன்கு ஊதிய பின்னர் வாயிலிட்டு உண்போம். விதைகள் நறநறப்பதால் சில நேரங்களில் விதைகளை நீக்கிச் சதைப்பற்றை மட்டும் உண்போம்.

குளத்தின் வடக்குக் கரையில் மிக உயர்ந்த இரு பனை மரங்கள் உண்டு. நுங்கு பறிக்கக்கூட யாரும் அம்மரங்களில் ஏறுவதில்லை. அடைமழை பெய்யும் காலங்களில் பனை மரத்தின் மேலிருந்து நீர் வழிந்து ஏரிக்கரை வழியே குளத்தில் கலக்கும். அப்போது பனையேறி என்ற ஒருவகைக் கெண்டை மீன் குளத்திலிருந்து கரையேறி அந்தப் பனை மரங்களில் ஏறும் என்பர். நான் அவ்வாறு ஏறுவதைப் பார்த்ததில்லை. ஆனால், மழை விட்டபின் அங்கே செல்லும்போது பனையடியில் பனையேறி கெண்டை மீன்கள் நீரோட்டம் நின்றுபோனதால் திரும்பக் குளத்திற்குச் செல்ல முடியாமல் துள்ளுவதைப் பார்த்துள்ளேன். அந்தப் பனைகள் பழுக்கும் காலத்தில் எங்கள் வேட்டை தொடங்கும். பகலில் பழம் விழும்போது அங்கிருப்பவர் யாரோ, அவர் அதனை எடுத்து விடுவார். ஆனால், இரவில் விழும் பழம் பார்ப்பாரற்று வயல் சேற்றில் கிடக்கும். அதனால் விடியற்காலம் எழுந்து மரத்துக்குக் கீழே தேடி, பழத்தை எடுத்து, நீரில் கழுவி, ஆசைதீர வாசனை நுகர்ந்து மேல்தோலைப் பற்களால் கடித்து உறித்து, உள்ளே உள்ள நாரோடு உள்ள பழத்தைப் பற்களால் கடித்து மென்று, சாற்றை விழுங்கினால் சுவையோ சுவை. பனம்பழம் பித்தம் என்பர். கூடவே 'பசிக்குப் பனம்பழம் சாப்பிட்டால் பித்தம் போற வழியே போவும்' என்றும் கூறுவர். இதைப் பற்றியெல்லாம் நாங்கள் யோசித்ததில்லை.

குளத்தின் தெற்குக் கரையிலும் மேற்குக் கரையிலும் நடுவில் வண்டிப்பாதை இருக்கும். இருபுறமும் சரிவான பகுதிகள். இங்குத்தான் 'கோட்டிப்புள்' விளையாடுவோம். 'புள்'ளை வேகமாக அடிக்கும்போது யார் மேலாவது பட்டால் காயம் ஏற்படுத்தி விடும். ஆதலால் ஆள் நடமாட்டம் இல்லாத இந்த இடம் எங்களுக்கு வசதியாக இருக்கும். ஆட்டத்திற்கிடையே களைப்பு ஏற்பட்டால் மேலக்கரையில் உள்ள வன்னிமர நிழலில் ஓய்வெடுப்பதுண்டு. (அறுவடை முடிந்து பயறு, உளுந்து பிடுங்கிய பின் சித்திரை வைகாசி மாதங்களில் ஆட்டக்களம் வயலுக்கு மாறிவிடும்). ஏரிக்கரையில் ஆடும்போது குளத்தில் ஆழமற்ற கரையோரப் பகுதிகளில் கையகலப் பச்சை நிற இலைகளைக் கொண்ட செடிகள் நீரில் செழித்து வளர்ந்திருக்கும். ஒவ்வொரு செடியின் நடுவிலும் கடுகளவு வெள்ளை நிறப் பூக்கள் தெரியும். பூக்கள் இருக்கும் பகுதியைப் பிடித்து இழுத்தால், சிறு தண்டுடன் நுனியில் ஒரு காய் வெளிப்படும். அந்தக்காய் இலை மூடிய, சிறிய நீள் வடிவிலான, இரண்டு அங்குல அளவில் இருக்கும். இலை உறையை அகற்றிக் காயைப் பிளந்தால் உள்ளே உறைந்த நெய்போல் (மணல்போல்) இருக்கும். அதனால் அது 'நெய்சட்டி' என்று அழைக்கப்பட்டது. அது வெண்டைக்காயைப் போன்ற சுவையுடன் கொழகொழப்பாக இருக்கும். ஆட்டத்தின் நடுவே அதில் நான்கைந்தைப் பிடுங்கித் தின்பதுண்டு.

குளத்தில் தென்மேற்கு மூலை வழியே மணியன்குட்டை வாய்க்காலிலிருந்து நீர் குளத்திற்கு உள்ளே வரும். அதுபோல வடகிழக்கு மூலை வழியே குளத்திலுள்ள கூடுதல் நீர் வெளியேறி வயல்களில் பாயும். குளத்து நீர் எப்போதும் தெளிந்த நிலையில் பளிங்குபோல் இருக்கும். தரையில் கிடக்கும் கிளிஞ்சல்களும், நீந்திக்கொண்டிருக்கும் வரால், குரவை, கெண்டை போன்ற மீன் வகைகளும் பளிச்சென்று தெரியும். குளத்தில் வெள்ளையும் சிவப்புமாக அல்லியும் தாமரையும் பூத்துக் குலுங்கும். தண்ணீரின் மேல்பகுதி தாமரை இலைகளாலும், அல்லி இலைகளாலும் மூடப்பட்டிருக்கும். அதனால் குளத்து நீர் குளுகுளுவென்று குளிர்ச்சியாக இருக்கும். குடைத்தாமரை இலைகள் மட்டும் தண்ணீருக்கு மேலே தாமரை மலர்களுக்குக் குடை விரித்தாற்போல் இருக்கும். இடையே இலைகள்மீது கொக்கு நின்றுகொண்டு உகந்த மீனுக்காகக் காத்துக்கொண்டிருக்கும். நீர்க்கோழிகள் நீரில் மூழ்கி விளையாடும். இவையெல்லாம் கண்கொள்ளாக் காட்சிகள்.

அந்தக் குளத்து நீரில்தான் எங்களின் 'ஓரி' ஆட்டம் (நீர் விளையாட்டு) நடைபெறும். நீரின்மேல் கவிழ்ந்து படுத்து இரு கால்களாலும் மாறிமாறி

நீரிலடித்து முன்னேறும் 'தம்பட்டமடித்தல்', நீரின்மேல் அண்ணாந்து படுத்தவாறு கைகளால் துடுப்புப்போட்டுப் பின்னோக்கிச் செல்லும் 'காக்கா நீச்சல்' என்றிவ்வாறு பலவாறு பலவகை நீச்சல்கள் அடிப்போம். குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று திரும்பும் போட்டியும் நடைபெறும். ஒருவர் நீரில் மூழ்கிச்சென்று குழுவில் உள்ள ஒருவரைத் தொடும் விளையாட்டும் உண்டு. நேரம் போவதும் தெரியாது. தாமரைக் கொடிகள் பக்கம் நடந்தால் தரையோடு முளைத்தெழும்பும் தாமரைக்குருத்து காலில் மிதிபடும். நீரில் மூழ்கி குருத்தைப் பிடித்துச் சேற்றைத் தோண்டினால் தாமரைக்கிழங்கு கிடைக்கும். வெண்மையாக இருந்தால் இளங்கிழங்கு. மஞ்சள் நிறத்திற்கு மாறிக்கொண்டிருந்தால் சற்று முற்றிய கிழங்கு. சுவை சற்று மாறுபடும். நீண்ட நேரம் 'ஓரி' ஆடிய களைப்புக்குத் தாமரைக்கிழங்கு சுவையாகவே இருக்கும். தாமரை மலரின் நடுவிலுள்ள மஞ்சளான பகுதியும் உண்ணத்தக்கதே. துவர்ப்பு தொண்டையை அடைக்கும். ஒருவாய் தண்ணீர் குடித்தால் சரியாகிவிடும். இதழ்கள் உதிர்ந்து, காயாகி, நீருக்கு மேல் நீட்டிக்கொண்டிருக்கும் தாமரைக் காயை உடைத்தால், உள்ளே வெண்ணிறப் பருப்பு சற்று இனிப்பாக இருக்கும். அல்லி மலரின் உள்பகுதியும் சற்றுத் துவர்ப்பான சுவையுடன் எங்கள் வாயில் அரைபடும்.

நெடுஞ்சாலைக்குச் செல்லும் வழித்தடத்தின் இருபுறமும் வளர்ந்துள்ள காட்டாமணக்குச் செடிகளும் எங்கள் விளையாட்டுக்கு உதவக்கூடியவை. காட்டாமணக்குக் கிளையை ஒடிக்க வெளிவரும் திரவத்தைக் கொட்டாஞ்சியில் (தேங்காய் ஓடு) பிடித்து இருபுறமும் துளையிருக்குமாறு கிள்ளப்பட்ட வைக்கோலின் ஒரு புறத்தை அத்திரவத்தில் தொட்டு மறுபுறத்தில் வாய் வைத்து ஊத முட்டை முட்டையாக வெளியேறும் குமிழ்கள் பெருமகிழ்வளிக்கும். விளையாடிக்கொண்டே தடத்தின் ஓரத்திலிருக்கும் விளாமரத்தில் காய்த்துத் தொங்கும் பழங்களை நோக்கிக் கற்களை வீச, பழங்களும் காய்களுமாகக் கீழே விழும். செம்பழம், கடும் புளிப்பும் துவர்ப்புமாக இருக்கும். பழம், சற்று இனிப்பும் புளிப்புமாக இருக்கும். எங்களுக்கு அனைத்தும் சுவைதான்.

நெடுஞ்சாலைக்கு வந்தால் சாலையின் இருபுறமும் முதிர்ந்த புளிய மரங்கள் இருக்கும். வெள்ளைக்காரன் காலத்தில் வைக்கப்பட்டவையாக இருக்கலாம். அந்தச் சாலையோரப் புளிய மர நிழல்களும் எங்கள் விளையாட்டுக் களங்கள்தாம். அங்கே உள்ள இலந்தை மரம் காய்த்துக் குலுங்கும்போது அதன் பழங்களும், செங்காய்களும் எங்களுக்கு விருந்தாகும். கொத்துக்கொத்தாக இலந்தை முள் உள்ள மரத்தில் ஏற இயலாது. இலந்தை முள்ளை வெட்டி வீட்டிற்கும் சுவருக்கும் இடையிலுள்ள இடைவெளியை மறைத்துக் கட்டுவதுண்டு. வீட்டினுள் வௌவால் வருவதைத் தடுக்க இந்த ஏற்பாடு. இலந்தை முள் வௌவால் தடுப்பானாகப் பயன்படக்கூடியது. நீண்ட சுரடு வைத்திருப்பவர்கள் சுரடால் இலந்தை மரக் கிளைகளைப் பிடித்து உலுக்கினால்தான் உண்டு. இல்லையெனில் பழத்தைப் பறிக்க, கல்லெறிதல்தான் ஒரே வழி.

நெடுஞ்சாலை ஓரத்தில் ஒரு பாய் வீடு. வீட்டின் பின்புறம் கொடுக்காப்புளி மரங்கள் வரிசைகட்டி நிற்கும்.



காய்கள் நன்கு வளைந்து சுருட்டிக் கொண்டிருக்கும். (கொடு + காய் = வளைந்த காய்) பழுத்தால் மேல்தோல் சிவப்பாக மாறிவிடும். வெடித்து உள்ளே உள்ள வெள்ளையும் சிவப்புமான சுளைகளும் அவற்றினுள்ளே உள்ள கருநிறக் கொட்டைகளும் தெரியும். கல்லெறிந்து பழங்களை விழச்செய்து இனிப்பும் துவர்ப்புமான சுளைகளைச் சுவைப்போம்.

ஐயனார் கோயில் தோப்பு எங்களின் சொர்க்க பூமி. விடுமுறை நாட்களில் காலையில் சாப்பிட்டு விட்டுச் சென்றால் எப்போது வீடு திரும்புவோம் என்பது தெரியாது. எவ்வித இடையூறுமின்றி ஆட்டங்கள் தொடரும். புளிய மரங்கள், இலுப்பை மரங்கள், ஆல மரங்கள், நாவல் மரம், அத்தி மரம், வேப்ப மரங்கள் அடர்ந்த தோப்பு அது. ஒரு மரத்தின் கிளையிலிருந்து இன்னொரு மரத்தின் கிளைகளுக்குக் குரங்குகள்போல் சில சேக்காளிகள் தாவும் அளவுக்கு மரங்கள் அடர்த்தியாக இருக்கும். ஆங்காங்கே சப்பாத்திக் கள்ளிகளும், காரைச் செடிகளும், களாச் செடிகளும் இருக்கும். ஒரு காலத்தில் ஆடு மாடுகளை உள்ளே விட்டால் மேய்ந்துவிட்டு இரண்டு நாள் கழித்து வீட்டிற்கு வரும் என்று பெரியவர்கள் கூறக் கேட்டதாக அப்பா கூறுவதுண்டு. அப்பா கூறியதைப் பார்த்தால் 1900க்கு முற்பட்ட காலமாக இருத்தல் வேண்டும். அப்பாவின் கூற்றுப்படிப் பழைய காட்டின் எச்சம் அந்தத் தோப்பு என்று உணர முடியும்.

தோப்பினுள்ளே நாட்டு ஓடு வேய்ந்த கட்டடத்தில் ஐயனார் இருப்பார். கோயிலுக்குக் கிழக்குப் பக்கம் வீரன் சிலை இருக்கும். முறுக்கிய மீசையுடன் கண்களை விரித்துப் பார்த்தபடி, கையில் நீண்ட வாளுடன் ஒரு காலை மடித்து மற்றொரு காலைத் தொங்க விட்டுக்கொண்டு புலி மீது அமர்ந்திருப்பார் வீரன். வீரனுக்கு முன்னால் இருபுறமும் காவலர்கள் சீருடையுடன் துப்பாக்கி ஏந்தி நிற்பர். கோயிலுக்கு மேற்புறம் மாடம் போன்ற இடத்தில் பிள்ளையார் இருப்பார். மக்கள் வேண்டுதலுக்காக வைத்த சுடுமண் குதிரைகள் வரிசையாக இருக்கும். ஏணி வைத்தாற்போல் கோயிலுக்கு முன்னால் இலவம் பஞ்சு மரங்கள் இருக்கும். அவற்றை ஒட்டிச் செங்கல் சுதையால் உருவாக்கப்பட்ட பத்து அடி உயரமுள்ள நான்கு குதிரைகள் நிற்கும். கோயிலுக்கு நான்கு திசைகளிலும் நான்கு ஆலமரங்கள் விழுது பரப்பி நிற்கும். முன்பு அந்த இடங்களில் பிரம்மாண்டமான ஆலமரங்கள் இருந்ததாகவும், புயலின்போது அவை விழுந்து அந்த இடத்தில் முளைத்த மரங்களே இப்போது உள்ளவை

என்றும் அப்பா கூறுவார். தென்கிழக்கு மூலையில் உள்ள ஆலமர நிழலில் கரும்பு பிழிந்து வெல்லம் காய்ச்சுவர். மல்லாட்டை பிடுங்கும் காலத்தில், இன்னொரு ஆலமரத்தின் கீழே மல்லாட்டையைப் பரப்பி விடிகாலை நேரத்தில் வரிசையாக அமர்ந்து தடியால் தட்டித் தட்டி தோலை நீக்கி பயற்றைப் பிரிப்பர். இதுபோன்ற காலங்களில் தோப்பில் ஆள் நடமாட்டம் இருக்கும். ஏனைய காலங்களில் ஆடு மாடுகள் மேய்ப்பவர்கள் தவிர யாரும் தோப்பில் தென்பட மாட்டார்கள். சிறார்களுக்கு அச்சம் தரும் இடமாக இருக்கும் அந்தத் தோப்பு.

தோப்பினுள் நுழையும்போது ஒரு குட்டை இருக்கும். அதன் ஓரம் தழைத்து நிற்கும் நாவல் மரம். பூத்து, காய்த்து, பழுக்கும் வரை எங்கள் கவனம் அதில் இருக்கும். பழுத்து ஒன்றிரண்டு கீழே விழுந்து மண்பூசிக் கிடக்கும். எடுத்து ஊதி மண்ணை நீக்கி உண்போம். ‘சுட்ட பழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா’ என்று ஔவையிடம் முருகன் கேட்டதான கதையை வாத்தியார் கூறியது நினைவுக்கு வரும். நிறையப் பழுத்த பின் கூட்டாளிகள் மரத்தில் ஏறி உலுக்குவர். பழமும் செம்பழமும் விழும். வீட்டிற்கு எடுத்துச் சென்று, உப்பிட்டுக் குலுக்கி, சற்று நேரம் கழித்து உண்டால் நன்றாக இருக்கும்தான். அந்தப் பொறுமையெல்லாம் எங்களுக்குக் கிடையாது. தொண்டை கமறும். கவலைப்பட்டதில்லை.

கோடைக்காலத்தில் புளிய மரங்கள் இலைகளை உதிர்த்துவிடும். வயதான சிலர் அந்தப் புளியஞ் சருகுகளைக் கூட்டி மூட்டையாகக் கட்டி எடுத்துச் செல்வர். உவர் நிலங்களில் கொட்டி நீர் பாய்ச்சினால் நிலத்தின் உவர் தன்மை நீங்கும் என்பர். இலை உதிர்ந்த புளிய மரங்கள் உடனே துளிர்த்துத் தழைக்கவும் தொடங்கும். பூவும் பிஞ்சுமாக மாறும். பசுமஞ்சள் நிறத்திலான துளிர்களும், அவற்றோடு மஞ்சள் சிவப்பும் பச்சையுமான பூக்களும், சிறு பிஞ்சுகளும் எங்களைச் சுண்டியிழுக்கும். கைக்கெட்டும் கிளைகளை வளைத்துத் துளிர்கள், பூக்கள், பிஞ்சுகளோடு உருவி வாயிலிட்டு மெல்ல துவர்ப்பும் புளிப்பும் சிறு கசப்புமான சுவை எச்சிலூறச் செய்யும். சிறிது காலத்தில் புளியம் பூக்கள் உதிர்ந்து சிறுசிறு பிஞ்சுகள் இருக்கும். அவற்றைப் பறித்து வாயிலிட்டு மென்றால் சற்றுக் கொழகொழப்பாகவும் புளிப்பாகவும் இருக்கும். மேலும் முற்றிய புளியங்காயோ கடும் புளிப்பாக இருக்கும். வாயிலிட்டு மெல்லும்போது பல்லைக் கூசச்செய்யும். எனவே, காயைப் பறித்து புளியமரத்தின் அடிப்பாகத்தில் பெரிதாக உள்ள சொரசொரப்பான மரப்பட்டையில் தேய்த்து வழித்து வாயிலிட்டுச் சப்பி விழுங்குவோம். அடுத்துச் செம்பழம். ஓடும் பழமும் பிரியாத நிலை. அதுவும் சுவைதான். கடைசியாகப் புளியம்பழம். ஓடும் பழமும் பிரிந்த நிலை. பழுக்கும் காலத்தில் எங்கள் சேக்காளிகளுக்குத் ‘தித்திப்புப் புளியமரம்’ எது என்பது தெரியும். அம்மரத்துப் புளியம்பழம் அதிகப் புளிப்பில்லாமல் இருக்கும். சிறிது இனிப்பாகவும் இருக்கும். இப்படிப் புளிய மரம் துளிர்விட்டுப் பூப்பது தொடங்கி, பழுக்கும் காலம் வரை எங்கள் வேட்டை தொடரும்.

புளிய மரம் பற்றிக் கூறும்போது அம்மரத்தில் எடுத்த தேனடைகள் பற்றிக் கூறாமல் இருக்க இயலுமா? புளி பூத்துக் குலுங்கும் காலத்தில் தேனடைகள் அதிகம் காணப்படும். மரத்தில் துளிர்த்துப் பூத்து அடர்ந்திருக்குமிடத்தை உற்றுநோக்கினால் அடம்புக்குள் தேனடை காணப்படும். கோயில் தோப்பு, நெடுஞ் சாலையின் இருபுறமும் உள்ள மரங்களில் எங்களின் தேடுதல் வேட்டை இருக்கும். எங்கேனும், யாரேனும் ஒருவர் தேனடையைப் பார்த்துவிட்டால் மகிழ்ச்சிக் கூச்சலிடுவார். எல்லோரும் அங்கே ஓடுவர். என்னைத் தவிர ஏனைய அனைவரும் மரம் ஏறுவர் (சேக்காலிகளோடு நானும் மரமேற முயன்றதுண்டு. பத்தடி உயரம் ஏறியபின் கீழே பார்த்தால் தலை சுற்றத் தொடங்கும். அதனால் மரமேறும் முயற்சியைக் கைவிட்டுவிட்டேன்). சேக்காலிகளுள் ஒருவர் துண்டால் தலை, உடல் பகுதிகளை மறைத்துக்கொண்டு மரமேறி தேனடையைக் காயப்படுத்தாமல் கீழே எடுத்துவருவார். தேனடையின் கீழ்ப்பகுதி புழுவடை. தேனீக்களின் புழுப்பருவம். அதையொட்டி மஞ்சள்பொடி திணித்தாற் போன்ற ஒரு பகுதி. இனிப்பாக இருக்கும். கிளையை ஒட்டி உள்ள பகுதி தேன். அனைவருக்கும் பங்கு பிரித்துக் கொடுக்கும் பணி எனக்கு அளிக்கப்படும். நான் அனைவருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுப்பேன். ஆடையுடன் வாயிலிட்டுச் சப்புக்கொட்டி, தேனைச் சுவைப்போம். மறக்கமுடியாத இனிய அனுபவம் அது.

இலுப்பை மரங்கள் தோப்பில் மிகுதியாக இருக்கும். சில நேரங்களில் மரத்தில் ஏராளமான கூடுகள். சிலந்திகளால் கட்டப்பட்டவை போல இருக்கும். அதில் சிவப்பாக வெகுவேகமாக ஓடும் ஒருவகை எறும்பு இருக்கும். அது முசுடு எனப்படும். அதில் யாரும் ஏறப் பயப்படுவர். அதுகுறித்து இங்கு வேண்டாம். மாறாக, இலுப்பைப் பூ, இலுப்பைப் பழம் பற்றிப் பார்க்கலாம். இலுப்பைப் பூ பூத்திருக்கும்போது அந்த இடத்தில் வாசனை அருமையாக இருக்கும். பூக்கள் விழுந்து கிடப்பதைப் பார்ப்பதும் அழகுதான். குண்டு குண்டாக வெண்மையாக இருக்கும். சுவைத்தால் இனிப்பாக இருக்கும். ‘இல்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை’ என்பர். அதிகம் உண்ண முடியாது. அதனைப் பொறுக்கிச் சென்று உலர்த்தி மிளகாய், உப்பு எல்லாம் சேர்த்து உரலிலிட்டு இடித்து உருண்டையாக்கி உண்பர். பச்சையாக அதிகம் உண்ண முடியாது. ஆனால், எங்கள் சிற்றுணவுப் பட்டியலில் இலுப்பைப் பூவும் உண்டு. காய்த்துப் பழுக்கும்போது அந்தப் பழத்தின் உட்பகுதியைச் சிறிதளவு உண்பது உண்டு.

நுணா மரம் தெரியும்தானே! தமிழகத்தின் தென்பகுதிகளில் அதனை ‘மஞ்சனத்தி மரம்’ என்பர். அம்மரம் பூத்தால் மல்லிகைப்பூ மணம் வரும். நிறமும் வெண்மைதான். அம்மரத்தில் காய்க்கும் காய்களைப் பறித்துத் தென்னந்துடைப்பக் குச்சிகளைச் செருகித் தேர் தயார் செய்து விளையாடுவதுண்டு. காய்கள் பழுத்தால் பெருநெல்லிக்காய் அளவில் முடிச்சு முடிச்சாகக் கன்னங்கரேல் என்று இருக்கும் - நாவல் பழத்தின் நிறத்தில். பறித்து, வாயிலிட்டுச் சப்பி சதையை விழுங்கிவிட்டுக் கொட்டைகளைத் துப்பிவிடுவோம். பழத்தைத் தின்றபின் நாக்கெல்லாம் கருப்பாகிவிடும். சற்று இனிப்பும் உரைப்புமான சுவை.

அதிகம் சாப்பிட்டால் நாக்கு எரியும். சில நேரங்களில் வைக்கோல் போரின் அடிப்பகுதியில் வைக்கோலை நீக்கிவிட்டு நுணாக் காய்களை வைத்து வைக்கோலை மூடிப் பழுக்கவைப்போம். பழுத்துவிட்டதா என்று அவ்வப்போது பார்க்கவும் செய்வோம். ஒருவர் அறியாமல் ஒருவர் பார்ப்பதும் உண்டு. இப்போது நினைத்தால் சிரிப்பு வருகிறது.

ஐயனார் கோயில் முன்புறம் வரிசையாகப் பச்சைப்பசேல் என்ற நிறத்துடன் உயர்ந்து நிற்கும் இலவம்பஞ்சு மரத்தில் சரஞ்சரமாகக் காய்கள் தொங்கும். முற்றவிட்டால் நல்ல இலவம்பஞ்சு கிடைக்கும்தான். நாங்களோ கல்லெறிந்து இளங்காய்களை விழச்செய்து உடைத்து உள்ளிருக்கும் விதைகளை உண்போம். இலவு பழுத்திருக்குமென்று காத்திருக்க நாங்கள் கிளிகள் அல்லவே!

யாரையேனும் அபூர்வமாகப் பார்த்தால் ‘என்ன அத்தி பூத்த மாதிரி இந்தப் பக்கம்?’ என்போம். தோப்பிலும் அப்படித்தான். ஒரேயொரு அத்திமரம்தான். அபூர்வமாக. காய்க்கும் காலத்தில் மரத்தினடியிலிருந்து கிளைகள்தோறும் கொத்துக் கொத்தாகக் காய்க்கும். பழுத்தபின், பழத்தைப் பறித்து, பிட்டு, பூச்சியுள்ளதா என்று பரிசோதித்துவிட்டுத் தின்போம்.

சப்பாத்திக் கள்ளியின் முள்ளை நினைத்தால் பயம் வரும். மஞ்சள் நிறத்தில் இரும்புபோல் வலுவாக இருக்கும். அதில் பழம் பறிப்பது பெரும் போராட்டம்தான். பழம் பறித்து அடிப்பக்கத்திலிருந்து மேல்தோலைக் கவனமாகக் கிழித்து நுனிப்பகுதியில் சக்கரம்போல இருக்கும் ‘நா(ய்)முள்ளை’ அகற்றி, பழத்தை வாயிலிட்டுச் சுவைப்போம். ‘செக்கச்செவேல்’ என்று இருக்கும் பழத்தைச் சப்பி, கொட்டைகளைத் துப்பிவிடுவோம். லேசான இனிப்புச் சுவை இருக்கும். வாயெல்லாம் சிவப்பாக மாறிவிடும்.

புளிப்பும் துவர்ப்புமான கிளாக்காய். இனிப்பான கருப்பு நிறக் களாப்பழம். நாவல் பழம்போல் கருநிறத்திலான இனிப்பான காரைப்பழம். சிறிய கருநிற ஈச்சம் பழம் எல்லாம் எங்கள் காட்டுணவுப் பட்டியலில் இடம்பெறும்.

கோயில் தோப்பில் சடுகுடு ஆடிக் களைக்கும்போது பெரிய வாய்க்காலில் குளியல் - ஓரி எல்லாம் நடக்கும். வாய்க்காலைத் தாண்டிச் சென்றால் கரும்பு அல்லது கம்பு அல்லது கேவுரு அல்லது சோளம் அல்லது மல்லாட்டை அல்லது வள்ளிக்கிழங்கு அல்லது கரும்பு பயிர் வைக்கும் புஞ்சை வயல்கள். ‘வாழக்கொட்டான்’ என்பது அந்த நிலங்களின் ஒட்டுமொத்தப் பெயர். இப்பகுதியில் மேற்குறித்த பயிர்கள் மாறி மாறிப் பயிரிடப்படும். அறுவடைக்கு முன் அவரவர் வயலில் தேவையானதை எடுத்து உண்பர். வயல் இல்லாதவர்களுக்கு வயல் உள்ளவர்கள் கொடுப்பர். இதில் பெரிய சுவாரசியம் இருக்காது. கம்பு, கேவுரு, சோளம் அறுவடையின்போது கதிர்களை மட்டும் அறுத்துவிட்டுத் தட்டைகளை விட்டுவிடுவர். முற்றாத சில கதிர்களையும் விட்டுவிடுவர். அவை முற்றி, தப்புக் கதிர்களாக இருக்கும். அவற்றைத் தேடி எடுத்து வந்து துண்டை விரித்துக் கதிர்களை உமிட்டி, கொங்கை, தூசு போக ஊதி உண்போம். அதுபோல, கரும்பு வெட்டிய வயல்களில் குவிந்திருக்கும் கருப்பஞ்சோலைகளில் (கருப்புத் தோகைகளில்) மறைந்து கிடக்கும் தப்புக் கரும்பு எங்கள் கண்களுக்குத் தப்பாது. அந்தக் கரும்பு மிக இனிப்பாக இருக்கும். அதேநேரத்தில் வாயின் இருபுறத்தையும் கிழித்துவிடும். கரும்பு சாப்பிட்டபின் வீட்டிற்குச் சென்று காரமாக ஏதேனும் சாப்பிட்டால் நாக்கு எரியும். கண்களில் நீர் வரும். மல்லாட்டை பிடுங்கிய வயல்களில் பிடுங்கப்பட்ட குழிகளைக் குச்சியால் கிளறினால் நிச்சயம் தப்பு மல்லாட்டை கிடைக்கும். முயற்சிக்கேற்ப பலன் கிடைக்கும். வள்ளிக்கிழங்கு தோண்டிய இடங்களில் நிலத்தில் இத்துப்போன அல்லது தங்கிப்போன கிழங்குகள் லேசாகத் துளிர்விடத் தொடங்கி, தம் இருப்பை வெளிப்படுத்தும். குச்சியால் கிளறி, கிழங்கை எடுத்துக் கழுவினால் நிறம் வெளுத்த கிழங்கு அதிக இனிப்புள்ளதாக இருக்கும். இவ்வாறு விளையாட்டாகத் தேடி உண்பதுதான் எங்களுக்கு அதிக மகிழ்வளிக்கும்.

ஊருக்கு வடக்கே உள்ள நஞ்சை நிலப்பகுதி ‘வடக்குவெளி’ என்று சுட்டப்படும். கோடைக்காலத்தில் எங்கள் ஆட்டக்களம் அறுவடையான வடக்குவெளி வயல்கள்தாம். விளையாட்டு இடைவேளையில் பயறு, உளுந்து பிடுங்காத வயல்களில் முற்றிய பயத்தங்காய்களையும், உளுத்தங்காய்களையும் பறித்துக் கால் சட்டைப் பைகளில் நிரப்பிக் கொள்வோம். ஒவ்வொன்றாக எடுத்து நுனியைக் கிள்ளி முன்பற்களுக்கிடையே செருகி, பற்களைக் கடித்து லேசாக வெளியே இழுக்க, பயறு, உளுந்து வாயிலும் தோல் கையிலும் இருக்கும். முற்றாத பிஞ்சுக் காயாக இருந்தால் அப்படியே மென்று விழுங்குவோம். எள் வயல்களைக் கடக்கும்போது முற்றிய எள் காய்களும் பிளக்கப்பட்டு முன்பற்களில் செருகி இழுக்க எள் வாய்க்குள் தங்கும்.

இப்படியாக எங்கள் காட்டுணவு அனுபவங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

மேலே குறித்தவை எல்லாம் என் ஐந்து வயது தொடங்கி பதினாறு வயது வரை அதாவது 1955 முதல் 1966 வரை உள்ள காலக்கட்ட அனுபவங்கள்.

இதேபோன்ற அனுபவங்கள் கிராமத்தில் பிறந்து வளர்ந்த பெரும்பாலானவர்களுக்குக் கிடைத்திருக்கும். நிலவியல் தன்மைகளுக்கேற்ப, காட்டுணவுகளில் மாறுபாடுகள் காணப்படும். அவ்வளவே.

மனித இனம் தோன்றிய தொடக்கக் காலத்தில் மனிதர்கள் காடுகளிலும் மலைக்குகைகளிலும் வாழ்ந்தார்கள். விலங்குகளை வேட்டையாடி அவற்றின் இறைச்சியை உண்டார்கள். விலங்குகள் கிடைக்காத நிலையில் காய்கனிகளையும், இலை கிழங்குகளையும் தேடி உண்டார்கள். அன்றாட உணவு தேடும் குழுக்களாக (Food gathering groups) வாழ்ந்தார்கள். கால்நடை வளர்க்கவோ, நிலையாக ஓரிடத்தில் தங்கி வாழவோ, விவசாயம் செய்யவோ, சமைக்கவோ அறியாதவர்களாக இருந்தனர். பின்னர், படிப்படியாகக் கால்நடை வளர்ப்புச் சமுதாயமாகவும், வேளாண் சமுதாயமாகவும், நிலைக்குழுக்களாகவும் வாழத் தொடங்கினர். இந்தப் படிநிலைகளைத் தொல்லியல் சான்றுகள் வழியாகவும், பழங்குடி மக்களின்

வாழ்க்கையிலிருந்தும் அறிந்துகொள்ளலாம். இதுகுறித்து வரலாற்றாய்வாளர்களும், மானிடவியலாளர்களும் விரிவாக ஆராய்ந்து பதிவு செய்துள்ளனர். சமுதாயம் இவ்வாறு வளர்ச்சி பெற்று வந்தாலும், தொல்பழங்கால வாழ்க்கை முறையின் மிச்ச சொச்சங்கள் மக்களிடையே காணப்படுகின்றன. காட்டு வாழ்க்கையில் எவற்றை உண்ணலாம்? எவற்றை உண்ணக்கூடாது? என்று அனுபவத்தின் அடிப்படையில் அறிந்த மனிதர்கள் தாம் அறிந்தவற்றைக் காலங்காலமாகத் தலைமுறைகளுக்குக் கடத்தி வந்துள்ளனர். அத்தகைய வாழ்க்கையின் மிச்ச சொச்சமாகவே எங்களுடைய காட்டுணவு அனுபவம் உள்ளது என்பதை உணர முடிகிறது. எங்கள் முன்னோர்கள் எவற்றை உண்ணலாம் என்று எங்களுக்குச் சொல்லித் தந்தார்களோ அவற்றை உண்டுள்ளோம். எங்களுள் விதைக்கப்பட்ட மரபறிவு எங்களுக்கு உதவியுள்ளது.

மேற்குறித்த காட்டுணவுகளைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கூறலாம்.

தாவரங்களின் இலை, பூ, காய், கனி, கொட்டை முதலியன.

கிழங்குகள், தேன், பருப்புகள், தானியங்கள்.

எங்களால் சிறு வயதில் உண்ணப்பட்ட இவையெல்லாம் உடலுக்கு நன்மை செய்யக்கூடியவையா என்ற ஐயம் இப்பொழுது எழுகிறது. தாவரங்களின் மருத்துவ குணங்கள் குறித்து அறிந்துகொள்ளும் நோக்கில் கூகுளில் தேடியபோது தாழஞ்சோறு, நெய்சட்டி போன்ற ஒருசில தாவரங்கள் பற்றிய விவரங்களை அறிய முடியவில்லை. அவற்றின் தாவரவியல் பெயர்கள் தெரிந்து தேடினால் அவற்றின் பயன்களையும் அறியக்கூடும். அவற்றைத்தவிர ஏனைய அனைத்துத் தாவரங்களும் மருத்துவக் குணங்களுடையவை என்பதை அறிய முடிந்தது. அவற்றுள் பலரால் அறிய முடியாத அருகிய சில தாவரங்கள் குறித்து மட்டும் சுருக்கமாகக் கீழே தரப்படுகிறது.

செம்பருத்திப்பூ - இதயத்திற்கு நன்மை செய்யக்கூடியது.

மணத்தக்காளி - பல்வலி நிவாரணி, காசநோயைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டது.

முசுமுசுக்கை - முசு - குரங்கு; முசுமுசு - இருகுரங்கு - இரு குரங்கின் கை என்று சித்த மருத்துவர்களால் சுட்டப்படும் மூலிகை. நுரையீரல் மற்றும் சுவாசக் கோளாறுகளுக்கு மருந்து. சளி, இருமலைப் போக்கும்.

கோவைப்பழம் - இரத்த சர்க்கரை அளவைக் குறைக்க உதவுகிறது.

அம்மான் பச்சரிசி - மிகுந்த மருத்துவப் பயன் கொண்டது. காய், சிறு பிள்ளைகளின் வயிற்றுப் பூச்சியை அழிக்க உதவும். (இதுகுறித்து மேலும் விவரமறிய என்னுடைய 'தமிழர் கலை இலக்கிய மரபுகள்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரையைக் காண்க)

அரசம்பழம் - காய்ச்சல், ஆஸ்துமா நோய்களுக்கு மருந்து. வாயிலுள்ள பாக்டீரியாக்களையும் பற்கறைகளையும் நீக்கும். செரிமானத்துக்கு உதவும். இரத்த சர்க்கரையைக் குறைக்கும். மஞ்சள் காமாலைக்கு மருந்து. கருப்பைக் கிருமிகளை அழிக்கும்.

ஆலம்பழம் - இப்பழத்தில் உள்ள செரசானின் என்னும் பொருள் மன அழுத்தத்தையும், மனச்சோர்வையும் நீக்கும்.

பனம்பழம் - உடலிலுள்ள கழிவுகளை அகற்றும்.

தாமரைக்கிழங்கு - நெஞ்சில் கபம், காச நோய்களுக்கு மருந்து. தோல் நோய்களைக் குணப்படுத்தும்.

தாமரைக்காய் விதை - பொரியாகக் கடைகளில் கிடைக்கும். மெக்னீசியம், பொட்டாசியம், பாஸ்பரஸ், புரோட்டீன் நிறைந்தது. நார்ச்சத்து அதிகம்.

கொடுக்காப்புளிப்பழம் - கொடு - வளைந்த, கொடுக்காப்புளி - வளைந்த காய்களைக் கொண்டது - எலும்புகளை வலுவாக்கும், உள்காயங்களைக் குணப்படுத்தும். கீழ்வாதம், மூட்டு வலி, மூட்டு தேய்மானம் இவற்றைக் குணப்படுத்தும். கால்சியம் அதிகம்.

இலுப்பைப்பூ, பழம் - பூ, உடல் வெப்பத்தை அதிகரிக்கும். பசி உண்டாக்கும். மதுமேகத்தைக் குணமாக்கும். விந்தணுக்களின் அடர்த்தியை அதிகரிக்கும். இலுப்பைப்பூ, பழத்தின் சதைப்பகுதியை நொதிக்கச் செய்து மது தயாரித்தனர் தமிழர். இந்தியப் பழங்குடிகள் இன்றும் மது தயாரித்து வருகின்றனர். ஒரு டன் பூவில் 700 கிலோ சர்க்கரையும், 300 கிலோ எரிசாராயமும் கிடைக்கும்.

நுணாப்பழம் - உடல் வெப்பத்தைக் குறைக்கும். மாந்தம், மண்ணீரல், கல்லீரல் நோய்களைக் குணப்படுத்தும். சர்க்கரை நோயைக் குணப்படுத்தும். இரும்புச் சத்தை அதிகரிக்கும். வயிற்றுப் புண்ணைக் குணமாக்கும். மூட்டு வலியைப் போக்கும். புற்றுநோய் வராமல் தடுக்கும்.

சப்பாத்திக்கள்ளிப் பழம் - தொடர்ந்து சாப்பிட இதயத்துடிப்பு சீராகும். சருமத்தைப் பாதுகாக்கும். பார்வைத் திறனை மேம்படுத்தும்.

காரைப்பழம் - இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சியைப் போக்கும்.

களாக்காய், பழம் - விட்டமின் ஏ, சி சத்துகள் உள்ள இப்பழங்களில் இரும்பு, தாது சத்துகள் அதிகம். இரத்தக்கொதிப்பு, சர்க்கரை நோய்களைக் குறைக்கும். கண் பார்வையைத் தெளிவாக்கும். பித்த மயக்கத்தால் அவதிப்படுவோருக்குக் களாக்காய் நல்லது.

இவையெல்லாம் கூகுளில் கண்ட விவரங்களில் சில சுருக்கமான செய்திகள் மட்டுமே. மேலும் அறிய விரும்புவோர் கூகுள் மற்றும் சித்த மருத்துவ நூல்களையும், அகராதிகளையும் பார்த்து அறியலாம்.

தாவரங்கள் தவிர, கிழங்குகள், தேன், பருப்புகள், தானியங்கள் குறித்து ஓரளவு அனைவரும் அறிவோமென்பதால் அவற்றைப் பற்றி இங்கு எதுவும் கூறவில்லை.

அடுத்த ஐயம், இந்தக் கூட்டுணவு பற்றிய மரபறிவு அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கடத்தப்படுமா? மஞ்சக்கொல்லையில் தற்போது உள்ள நிலை என்ன?

ஊரில் கடந்த அரை நூற்றாண்டுகளாக நிலவியல் சூழல் வெகுவாக மாறியுள்ளது. எங்களின் ஆட்டக்களங்கள் பல இப்போது இல்லை. அதுகுறித்துச்

சுருக்கமாகக் காணலாம்.

முருகன் கோயில் நந்தவனத்தின் தெற்குக் கடைசியில் குடில் இருந்த இடம் இலவச மனைப் பட்டாவிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எஞ்சிய இடத்தில் மேல்மருவத்தூர் சக்திபீடக் கோயில் ஒன்று சிறிதாகக் கட்டப்பட்டுள்ளது. நந்தவனத்தின் எஞ்சிய பகுதிகள் வேலியின்றிப் புதர்கள் மண்டிய பகுதியாகக் காணப்படுகின்றன. மருந்துக்குக்கூட ஒரு பூச்செடி இல்லை. இன்றைய தலைமுறையினர் நந்தவனம் பற்றி ஏதும் அறிந்திருக்க மாட்டார்கள். சாமியார் யாரும் கோயிலில் இல்லை.

குளத்தங்கரை அரசமரம் காற்றில் விழுந்துவிட்டது. பிள்ளையார் இடம் மாறிவிட்டார். அந்த இடம் இலவச மனைப்பட்டாவிற்கு அளிக்கப்பட்டு வீடாக மாறிவிட்டது.

ஆண்கள், பெண்கள் குளிக்கும் படித்துறைகள் இடிந்து பாழ்பட்டுக் கிடக்கின்றன. ஆலமரம் தன் பொலிவை இழந்து கடைசிக்காலத்தை எதிர்நோக்கி உள்ளது. ஏரிக்கரைப் பனை மரங்கள் வெட்டப்பட்டுவிட்டன. தெற்கு மற்றும் வடக்குக் கரைகள் முழுதும் இலவச மனைப் பட்டாவாக அளிக்கப்பட்டதால் வீடுகளாகிவிட்டன. வன்னிமரம் அங்கு இல்லை. ஏரிக்கரை விளையாட்டுக் களமும் இல்லை.

குளத்திற்கு நீர் வரும் வழியும், வெளியேறும் வழியும் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டதால் நீர் தேங்கி, குளம் குட்டையாகிவிட்டது. தாமரை, அல்லி ஆகியவை அழிந்து விட்டன. தெளிந்த பளிங்கு நீர், பாசி பிடித்த கழிவு நீராகிவிட்டது. உயிரினங்கள் வாழவும், கால் நனைக்கவும் தகுதியற்றதாகக் குளம் சாகடிக்கப்பட்டுவிட்டது.

நெடுஞ்சாலைக்குச் செல்லும் வழித்தடத்தின் இருபுறமும் தூர்க்கப்பட்டு வயல்கள் வீடுகளாகிவிட்டன. விளா மரம் இல்லை. நொச்சி, காட்டாமணக்கு காணாமல் போய்விட்டன. ஒருபக்கம் சீமைக்கருவேல மரங்கள் வளர்ந்திருக்கின்றன.

நெடுஞ்சாலையை அகலப்படுத்த இருபுறமும் இருந்த புளிய மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டன. இலந்தை மரம் வெட்டப்பட்டுவிட்டது. கொடுக்காப்புளி மரங்கள் அங்கு இல்லை.

ஐயனார் கோயில் தோப்பு மேல்நிலைப் பள்ளிக்குத் தரப்பட்டுவிட்டதால் தோப்பில் பல மரங்கள் வெட்டப்பட்டுவிட்டன. நாவல், அத்தி மரங்கள் இல்லை.

கரும்பு பிழிந்து காய்ச்சிய ஆலமரம் இருந்த இடத்தில் மாணவர் விடுதி கட்டப்பட்டுள்ளது. ஆல மரங்கள் இல்லை. வீரன் சிலை உருமாறிவிட்டது. இலவம் பஞ்சு மரங்களும், சப்பாத்திக் கள்ளியும், களாச்செடி, காரைச்செடிகளும் இப்போது இல்லை. கோயில் மட்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

கம்பு, கேவுரு முதலியவை விளைவிக்கும் புஞ்சை நிலங்களில் ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு நெல் மட்டுமே பயிரிடப்படுகின்றன. சில நேரங்களில், மிளகாய், வெண்டை, கத்தரி முதலியன பயிரிடப்படுகின்றன. பழைய புஞ்சைப் பயிர்கள் பயிரிடப்படுவதில்லை.

அறுவடை இயந்திரங்களின் பயன்பாடுகள் மிகுதியால் பயறு, உளுந்து பயிரிடுவது வெகுவாகக் குறைந்துவிட்டது.

இதுபோன்ற நிலவியல் மாற்றங்கள் காரணமாக விளையாட்டுக் களங்களும், விளையாட்டுகளும் மாறிவிட்டன. காட்டுணவு கிடைக்குமிடங்கள் சுருங்கிவிட்டன.

முன்பு ஒவ்வொரு வீட்டிலும் நான்கு, ஐந்து பிள்ளைகள் இருந்தனர். அவர்களை வெளியே சென்று விளையாடப் பெற்றோர் அனுமதித்தனர்.

தற்போது குடும்பக்கட்டுப்பாடு காரணமாக ஒவ்வொரு வீட்டிலும் ஒன்றிரண்டு பிள்ளைகள் மட்டுமே உள்ளனர். அவர்களைச் சுதந்திரமாக வெளியில் சென்று விளையாடப் பெற்றோர் அனுமதிப்பதில்லை.

மண் தெருக்களும், வழித்தடங்களும் தார்ச்சாலைகளாக மாறிவிட்டன. மாட்டு வண்டிகளும், சைக்கிள்களும் ஓடிக்கொண்டிருந்த சாலைகளில் இருசக்கர வாகனங்களும், நான்கு சக்கர வாகனங்களும் அதிகமாக ஓடத் தொடங்கி விட்டன. பிள்ளைகளை வெளியே விளையாட அனுப்புவது பாதுகாப்பாக இருக்காது என்று பெற்றோர் கருதுகின்றனர்.

ஆங்கிலக் கல்வி மோகம் அதிகமாக உள்ளது. மேல்நிலைப் பள்ளி வரை அரசுப் பள்ளிகள் இருந்தாலும் வெளியூரில் உள்ள ஆங்கிலப் பள்ளிகளுக்கே தங்கள் பிள்ளைகளைப் படிக்க அனுப்புகின்றனர். எனவே, காலையிலேயே பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிடுகின்றனர். பிள்ளைகள் வெளியில் சென்று விளையாட வாய்ப்பில்லை.

பூச்சிக்கொல்லி மருந்துகளை வயல்களில் அதிகம் பயன்படுத்துவதாலும், வயல் நீர் வாய்க்கால்களில் கலப்பதாலும், வயல் வரப்புகளில் உள்ள தாவரங்களை உண்பதும், வாய்க்கால் நீரைக் குடிப்பதும் பாதுகாப்பானதாக இல்லை. எனவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் அவற்றை உண்பதைத் தடுக்கவே செய்வர்.

இதுபோன்ற பல்வேறு காரணங்களால் காட்டுணவு குறித்த மரபறிவு அடுத்தடுத்த தலைமுறைகளுக்குப் பரவுவது குறைகிறது. விளையாட்டினால் கிடைத்த உடற்பயிற்சியும், காட்டுணவுகளால் கிடைத்த நன்மைகளும் இளந்தலைமுறையினருக்குக் கிடைக்காமல் போய்விட்டன.

தொடக்கக் கல்வியில் நம்மைச் சுற்றியுள்ள தாவரங்கள் பற்றியும், அவற்றின் பயன்பாடுகள் பற்றியும் சொல்லித்தரப்பட வேண்டும். களத்திற்கு அழைத்துச் சென்று இயற்கைத் தாவரங்கள், தானியப் பயிர்களின் வேளாண்மை குறித்துச் சிறார்களுக்குக் கற்றுத் தருதல் வேண்டும். இளைய தலைமுறை அறிய வேண்டிய செய்திகள் இவை.

●

கட்டுரையாளர், எழுத்தாளர்,
ஓய்வுபெற்ற நாட்டுப்புறவியல்துறைப் பேராசிரியர்.

அஞ்சலி





# கொங்குநாட்டின் கல்ஹணர்

**செ.இளவேனில்**

பழந்தமிழகத்தை சேர, சோழ, பாண்டியர்கள் எனும் முப்பெரும் பேரரசுகளாகக் காண்பதே மரபு. ஆனால், தொண்டை நாட்டையும் கொங்கு நாட்டையும் உள்ளடக்கிய ஐந்நிலமாகவே பழந்தமிழ்நாடு இருந்தது என்கிறார் புலவர் செ.இராசு. தொண்டை நாடு, பல்லவப் பேரரசின் கீழ் இருந்தது. கொங்குநாட்டில் அப்படி எந்தப் பேரரசும் உருவாகவில்லை. எனினும் நில அமைப்பில், நிர்வாக அமைப்பில், பண்பாட்டுத் தனித்துவத்தில் கொங்கு தனிநாடாகச் சிறப்புற்று விளங்கியது என்பதை அவர் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்தார்.

தொல்லியல், கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடி எனப் பல்வகைப்பட்ட வரலாற்று ஆதாரங்களையும் ஆவணங்களையும் ஆய்வு செய்யும் திறன் கொண்ட, மிகவும் அரிதான வரலாற்றாசிரியர் செ.இராசு. எனவேதான் கொங்குநாட்டின் விரிவான காலநிரல் ஒன்றை அவரால் தனிநபராகவே எழுத முடிந்தது.




புலவர் செ.இராசு தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் - கல்வெட்டியல் துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். அவரது ஆய்வுப் பணிகள் அவரது மாணவப் பருவத்திலிருந்தே தொடங்கிவிட்டன. அப்பணிகளை ஓய்வுபெற்ற பின்னும் தொடர்ந்துகொண்டிருந்தார்.

பள்ளி நாள்களில் மகாவித்துவான் வே.ரா.தெய்வசிகாமணியிடம் தமிழ் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றவர். செ.இராசு.கொங்குநாட்டுப் புலவரென அழைக்கப்படும் தெய்வசிகாமணியோடு சேர்ந்து ஓலைச்சுவடி தேடப்போன அவரது மாணவர் இராசுவையும் ஆய்வுலகம் தன்வசமாக்கிக் கொண்டது.

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் புலவர் பட்டம் பெற்று ஈரோட்டில் பள்ளித் தமிழாசிரியராகப் பணியாற்றிய இராசுவை தமிழ்ப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆக்கியவர் வ.அய்.சுப்பிரமணியம். காவிரிக் கரையில் அமைந்திருந்த கொடுமணல் நாகரிகத்தின் அகழாய்வுப் பணிகளில் செ.இராசுவின் பங்களிப்பு முக்கியமானது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த காலகட்டத்தில் அவரது ஆய்வெல்லை கொங்குப் பகுதியைத் தாண்டி விரிந்து பரவியது. தஞ்சை மராட்டியர்கள், ராமநாதபுரம் சேதுபதிகள், புதுக்கோட்டை தொண்டைமான்கள், சிவகங்கை மன்னர்கள், பாளையக்காரர்கள் பற்றிய கல்வெட்டுகளையும் செப்பேடுகளையும் அப்போது தொகுத்து வெளியிட்டார். எனினும் கொங்குப் பகுதியே இராசுவின் முக்கிய ஆய்வுக்களம். அதிலும் குறிப்பாக, 'கொங்கும் சமணமும்' (2005) என்கிற நூல் அவரது ஆய்வுகளில் மிக முக்கியமானது. இந்நூலை ஒரு தவமாகவும் வேள்வியாகவும் கருதி 25 ஆண்டுகள் உழைத்து உருவாக்கியதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பொ.ஆ.மு. (கி.மு.) 3ஆம் நூற்றாண்டில் சந்திரகுப்த மௌரியர் காலத்தில் கர்நாடகத்தின் வழியாகக் கொங்கு நாட்டில் சமணம் பரவியது. பின்பு, பாண்டிய நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்டபோது சமணர்கள் கொங்கு நாட்டிலேயே தஞ்சமடைந்தனர். எனவே, கொங்குப் பகுதிக்கும் சமணத்துக்கும் நெருங்கிய பிணைப்பு உண்டு. அப்பகுதியில் உள்ள சமணர் குகைகள், கோயில்கள், சிற்பங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், சமணர்களின் தமிழ்ப் பணிகள் என மிக விரிவான ஆராய்ச்சி நூலாக 'கொங்கும் சமணமும்' அமைந்திருந்தது.

கொங்கு மண்ணுக்கு வளம் சேர்க்கும் முக்கியமான பாசனத் திட்டங்களில் ஒன்று காலிங்கராயன் கால்வாய். பவானியாறு காவிரியுடன் கலக்கும் இடத்தில் 5612 மைல் நீளத்துக்கு வெட்டப்பட்ட கால்வாய் அது. 3ஆம் நூற்றாண்டில் 2 ஆண்டுகள் முயன்று அணையும் கால்வாயும் கட்டப்பட்டன. பாண்டியரின் அமைச்சராக இருந்த லிங்கையன் அதைக் கட்டிமுடித்தார். 'காலிங்கராயன் கால்வாய்' என்கிற அந்த நூலை உருவாக்கவும் செ.இராசு பல ஆண்டுகள் உழைத்திருக்கிறார்.

புலவர் செ.இராசு எழுதிய ஈரோடு மாவட்ட வரலாறு (2007), ஆங்கிலேயர் காலத்தில் வெளிவந்த மாவட்ட விவரச் சுவடிகளுக்கு இணையாக எழுதப்பட்டது. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் கீழ் இயங்கும் விவரச் சுவடித் துறை செய்ய வேண்டிய பணியைத் தனியொரு நபராக அவர் செய்திருக்கிறார். 'கொங்கு ஆய்வு மையம்' என்கிற பெயரில் பலரின் பொருளுதவி பெற்று அவர் நூல்களைப் பதிப்பித்தார். அரசு செய்ய வேண்டிய பணிகளை, செ.இராசு தன் முயற்சியில் எந்தப் பொருளாதார ஆதரவுமின்றிச் செய்தார் என்பது அவருக்கு பெருமை.

பேராசிரியர்கள் உரிய வயது வந்ததும் பணி நிறைவுற்று ஓய்வெடுக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். ஆய்வாளர்களுக்கோ ஓய்வு என்பதே இல்லை. வயதும் தடையல்ல. புலவர் செ.இராசு அதற்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்தார்.

●

*நன்றி: இந்து தமிழ் திசை 13.08.2023*

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளையின் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சிகள்




18.08.2023 அன்று மார்த்தாண்டத்தில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளை நடத்திய 38வது தேசிய புத்தகக் கண்காட்சியை குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.ஜி.பிரின்ஸ் அவர்கள் திறந்து வைத்தார். இதில் குழித்துறை நகராட்சி சேர்மன் பொன். ஆசைத்தம்பி, பெங்களூர் அரசு முதல் நிலைக் கல்லூரி முன்னாள் முதல்வர் டாக்டர் சங்கரி, கர்நாடகா பிளாகி அரசு முதல்நிலைக் கல்லூரி முன்னாள் முதல்வர் டாக்டர் ஸ்ரீநிவாசன், குமரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் மகேஷ் லாசர், கன்னியாகுமரி மாவட்ட கல்வி அலுவலர் (தொ.க) தாம்சன், மா.வி. அரசு நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் சசிக்குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் சுரேஸ் மேசியதாஸ், தோழர் இசக்கிமுத்து, வரலாற்றறிஞர் அ.கா.பெருமாள், எழுத்தாளர் குறும்பனை சி. பெர்லின், சமூக ஆர்வலர் சச்சின், சமூக சேவகர் குளச்சல் முகம்மது சபீர், என்சிபிஎச் மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.




11.08.2023 அன்று நாகர்கோவிலில் பிஷப் ரெமிஜியஸ் பள்ளி (சிபிஎஸ்இ) மற்றும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியை பள்ளியின் தாளாளர் அருட்பணி குணபால் அவர்கள் திறந்து வைத்தார். இதில் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் கலந்துகொண்டார்.



நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்
இருண்ட காலங்களில் பாடுவதும் இருக்குமா?
எஸ்.வி. ராஜதுரை
₹ 540/-
தமிழ் மக்கள் வரலாறு
தமிழ்நாட்டின் வியப்பான தொழில்நுட்பமும் வெறும் உள்ளூர்க் கலைஞர்களும்: ஐரோப்பியர்களின் பார்வையில்
₹ 370/-
தமிழ் மக்கள் வரலாறு
தமிழ் நிலப்பரப்பில் நிகழ்ந்த தட்பவெப்ப நிலை மாற்றங்கள், இயற்கைப் பேரிடர்கள், மக்கள் பட்ட இன்னல்கள்
₹ 240/-
பழந்தமிழ்ச் சமுதாயமும் வரலாறும்
புத்தகம் - 1
₹ 2650/-
இரண்டு புத்தகங்களும் சேர்த்து
உயிராயுதமே
மது ஒழிப்புப் போராளி
சசிபெருமாள்
யா.அருள்தாஸ்
₹ 330/-
பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி
(வாழ்வும் பணியும்)
எம்.ஆர்.ரகுநாதன்
₹ 200/-
மரண வீட்டின் நினைவுக் குறிப்புகள்
₹ 825/-
FREDERICK ENGELS
DIALECTICS OF NATURE
E = MC²
ப.கு.ராஜன்
புரட்சியில் பகுத்தறிவு
மார்க்சிய தத்துவமும் நவீன அறிவியலும்
₹ 1200/-
பெரியாரை எப்படிப் புரிந்துகொள்வது?
மு.இராமசுவாமி
₹ 180/-
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in

கட்டுரை



# இசைத்தமிழ் இயக்க முன்னோடி
# ஆபிரகாம் பண்டிதர்

த.ஜான்சிபால்ராஜ்

நம் தமிழ் மொழியாம் செம்மொழி, இயல்,இசை,நாடகம் என்னும் முப்பெரும் கூறுகளை உள்ளடக்கி முத்தமிழ் எனும் பெயர் பெற்றது. இம்முத்தமிழின் கண் அமைந்த இசைத்தமிழ், இயற்றமிழோடும், நாடகத் தமிழோடும், இணைந்து தமிழை மென்மேலும் செழுமைப் படுத்திவருகிறது.

எதையும் செவிமடுக்க விரும்பா தோரையும் இசை, தன் வலிமையால் தன்பால் ஈர்க்கும் சக்திவாய்ந்தது. அத்தகைய இசை இவ்வுலகின் ஒவ்வொரு அசைவிற்குள்ளும் நீக்கமற நிறைந்து கிடக்கின்றது.

ஆனால், அத்தகைய இசையை இசையிலக்கண முறைமைகளால் நெறிப்படுத்தி, வார்த்தைகளுக்குள் தக்கவாறு பொதிந்து இசைக்கப்படும் போது இன்னிசை எனும் அரிய வடிவமாகிறது

தமிழர்களின் வாழ்வில் சுமார் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இசையானது, மிக நேர்த்தியான வடிவம் பெற்று இசைக்கப்பட்டு வந்திருப்பதற்கான சான்றாதாரங்கள் இலக்கியங்களிலும் பழந்தமிழர்களின் தொன்று தொட்டு வழங்கிவரும் வாய்மொழிப் பாடல்களிலும் நிரம்பக் கிடைக்கின்றன.

கி.மு ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி மூன்றாம் நூற்றாண்டு வரையிலான சங்க காலகட்டத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் தமிழிசையைப் பற்றின விரிவான குறிப்புகள் உள்ளன. சிலப்பதிகாரத்திற்கான உரைகளின் மூலம் இதை நாம் எளிதில் அறிய முடிகிறது.

அதன் பிறகு சங்கம் மருவிய காலகட்டம். அதில் சமணர்களின் ஆதிக்கத்தினால் தமிழிசை கண்டு கொள்ளப்படாமல் போனது. அதன் பின்னர் பக்தி இயக்கங்களின் தாக்கங்களால் தேவாரங்கள், பிரபந்தங்கள் போன்றன தமிழிசையை உயிர்ப்பித்தன.

14 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தெலுங்கு விசயநகர ஆட்சியினால் தெலுங்கு மொழி, இசையில் தன் முழு ஆக்கிரமிப்பையும் செலுத்தி தமிழிசை மரபினை மறக்கடித்தது.

இசையரங்குகளில் தெலுங்கு மொழிப் பாடல்களே முதன்மை பெற்றன. தமிழுக்கு இசைமரபென்பதே இல்லை என்ற ஆதாரமற்ற கூற்றுகளை அன்றைய இசையுலகம் ஏற்கும்படியான செயல்களை சிலர் திட்டமிட்டு ஏற்படுத்தியிருக்கின்றனர்.

இந்நிலையை அகற்ற இயற்கையின் பெருஞ் சக்தியாய் 1859 ஆம் ஆண்டு அன்றைய ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்தில் சாம்பூர் வடகரை என்ற ஊரில் ஆகஸ்டு மாதம் இரண்டாம் தேதி ஆபிரகாம் பண்டிதர் என்ற இசைஞானி பிறந்தார். இவரது பெற்றோர் முத்துச்சாமி மற்றும் அன்னம்மாள்.

இவர் தனது தொடக்கக் கல்வியை பங்களாச் சுரண்டையில் பயின்றார். 1874 ஆம் ஆண்டு திண்டுக்கலில் அமைந்திருந்த நார்மல் என்ற ஆங்கிலப் பள்ளியில் ஆசிரியர் பயிற்சிப் படிப்பை முடித்து அங்கேயே ஆசிரியராகவும் பணியாற்றினார்.

இளம் வயதிலேயே எதையும் ஆராய்ந்துணரும் அறிவாற்றலும் எளிதில் கற்றறியும் மதிநுட்பமும் உடையவராக விளங்கிய ஆபிரகாம்பண்டிதர் இயல்பாகவே இசையறிவாற்றல் மிக்கவராகவும் விளங்கியுள்ளார்.

இவர் ஆசிரியர் பயிற்சி பெற்ற நார்மல் பள்ளியை நிர்வகித்த அருட்திரு யார்க் துரை என்பவரும் சிறந்த இசையார்வலர். இவர் 1879 ஆம் ஆண்டு தனது நாடான இங்கிலாந்திற்கு செல்ல நேர்ந்தபோது அவருக்கு அளிக்கப்பட்ட பிரிவு உபச்சார விழாவில் அப்பயிற்சிப்பள்ளி மாணவர்களை பாடல்கள் பாட பயிற்றுவித்து தானும் பாடிக் காட்டினார் ஆபிரகாம் பண்டிதர். அப்போது அவரது சங்கீத புலமையைக் கண்டு வியந்த யார்க் துரை அவருக்கு ஒரு வயலினை அன்பளிப்பாகக் கொடுத்துச்சென்றார். இந்நிகழ்வு பண்டிதரின் இசையார்வத்தை மேலும் அதிகரிக்கவும் அதில் தீராத பற்றை ஏற்படுத்தவும் அடித்தளமானது.

1882இல் ஆபிரகாம் பண்டிதர் நஞ்சங்குளம் என்ற ஊரைச் சேர்ந்த ஞானவடிவு பொன்னம்மாள் என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். 1890இல் தஞ்சைக்குச் சென்று சித்தமருத்துவத்தைக் கற்று, சித்த மருத்துவராகவும் திகழ்ந்தார்.

இதனைத் தொடர்ந்து இசையின் மீதிருந்த தணியா காதலால் இசையைப்பற்றின ஆராய்ச்சியில் தனது காலத்தைப் பெருமளவில் செலவிட்டார்.

திண்டுக்கல் சடையாண்டி பட்டரிடம் இசைப் பயிற்சியை முறையாகப் பயின்ற இவர் தஞ்சையில் ஒரு நாதஸ்வர வித்வானிடமும் இசை கற்றார். ஆர்மோனியம், ஆர்கன், வீணை, பிடில் முதலிய இசைக்கருவிகளை வாசிக்கவும் கற்றுத் தேர்ந்தார்.

அத்தோடு ஐரோப்பிய இசை வல்லுநரான பேராசிரியர் தஞ்சை ஏ.ஜி. பிச்சைமுத்து என்பவரிடம் மேற்கத்திய இசையையும் கற்றுத் தேர்ந்தார்.

இந்நிலையில் இசையோடு ஒன்றிப் போன ஆபிரகாம் பண்டிதர் எதையும் நுணுகி ஆராயும் இவரது இயல்பான அறிவாற்றலால் தெலுங்கு மொழியில் பாடப்படும் கர்நாடக சங்கீத இசைமரபு பழமை வாய்ந்த தமிழ் இசை மரபிலிருந்து தோன்றியது தான் என்ற உண்மையை அறிந்தார். எனவே மேலும் மேலும் அதற்கான ஆதாரங்களையும் அனுமானங்களையும் தேடியலைந்தார். இந்தியாவின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று இசை ஆய்வாளர்களையும் பாடகர்களையும் சந்தித்து இசைக் குறிப்புகள் இருந்த நூல்களையெல்லாம் சேகரித்து ஆய்வுகள் மேற்கொண்டார்.

தமிழ் இலக்கியங்களான தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், அதன் உரைகள், நிகண்டுகள், காப்பியங்கள், தேவாரம், திருவாசகம், திவ்வியப்பிரபந்தம் ஆகிய நூல்களில் கிடைக்கப்பெற்ற இசைக் குறிப்புகளை ஒன்று திரட்டி தனது ஆய்வின் கருதுகோளை நிரூபிக்க அரும்பாடுபட்ட முதல் இசைப் பெருங்கடல் ஆபிரகாம் பண்டிதரே.

இதன் பொருட்டு 1912 ஆம் ஆண்டு முதல் 1916 வரையிலான ஐந்து ஆண்டுகளில் சங்கீத வித்தியா மகாஜன சங்கம் என்ற பெயரில் ஏழு இசை மாநாடுகளை தஞ்சையில் தனது சொந்த செலவில் நடத்தினார்.

அம்மாநாடுகளில் இந்தியாவின் அன்றைய இசை வல்லுனர்களையும் பாடகர்களையும்,

இசைநிபுணர்களையும், மேற்கத்திய இசை வல்லுநர்களையும் அழைத்து தமிழ் இசையின் வேர்களைத் தேடிய தனது ஆய்வை அயராது நிகழ்த்தினார்.

தமிழிசையில் நுட்ப சுருதிகள் 22 அல்ல என்றும் 24_48_96 என்ற எண் விரிவானதென்றும், தமிழிசை மேல்நாட்டு சங்கீதம் கண்டறியாத இசை நுணுக்கம் வாய்ந்தவை என்றும் நிலைநாட்ட முயன்றார்.

சுருதிகள் பற்றிய தனது இக்கருத்துக்களை, 1916ல் பரோடாவில் நடைபெற்ற அகில இந்திய இசைமாநாட்டில் விரிவுரையாற்றும் போது அவரது மகள்கள் திருமதி மரகதவல்லி துரைப்பாண்டியன் சுருதிகளின் நுட்பங்களை அழகாகப் பாடியும்,திருமதி கனகவல்லி நவமணி வீணையில் வாசித்தும் காட்டினர்.

இசையில் புதிய இராகங்களையும் உருவாக்க இயலும் என்ற இசைவெளிச்சத்தை இசையுலகத்திற்குள் புகுத்தி, தனது இசைப்படைப்பாற்றலை ஏனைய இசைக்கலைஞர்களுக்குள்ளும் ஏற்படுத்தியவர், ஆபிரகாம் பண்டிதர்.

தமிழிசையில் ஆயப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப்பாலை, சதுரப்பாலை, என்ற நான்கு இசைமுறைகள் இருந்தன என்பதை வகைப்படுத்தி சூத்திரங்களின் ஆதாரத்தோடு முதன்முதலாக நிலைநிறுத்திய பெருமை இவரையே சாரும்.

தமிழிசையை முறைப்படி பயிலும் மாணாக்கர்களும் அன்றைய வடமொழிப் பாடல்கள் வழியாகவே கற்கும் நிலைதான் இருந்து வந்தது. தமிழில் பாண்டித்துவம் பெற்று இலக்கண முறைமை தவறாமல் செய்யுள் இயற்றும் ஆற்றல் பெற்றிருந்த ஆபிரகாம் பண்டிதரால் இதனை சகிக்க இயலவில்லை.

இக்குறையைப் போக்க 96 தமிழ்ப் பாடல்களைக் கொண்ட கருணாமிர்த சாகரத் திரட்டு என்ற நூலை 1907-இல் எழுதி வெளியிட்டார்.


இன்றுவரை இதிலுள்ள பாடல்கள் சமய விழாக்கள், திருமணச் சடங்குகள் போன்ற விழாக்களில் பாடப்படுகின்றன.

**கண்டேனென் கண்குளிர**
**கர்த்தனையின்று கண்டேனென் கண்குளிர**

என்ற கீர்த்தனைப் பாடல், பிலகரி இராக சுரஜதியினால் அமைந்த,

**வாரும் தேவ தேவா இங்கு வாரும்**
**உமதடிமை மனமகிழ**

என்ற பாடல், "மங்களம் செழிக்க கிருபையருளும் மங்கள நாதனே" என்ற திருமணப் பாடல் போன்றன இன்றும் ஆபிரகாம் பண்டிதரின் தமிழ்ப் பற்றையும் கீர்த்தனைகள் இயற்றும் மெய்யாற்றலையும் பறைசாற்றிக் கொண்டே இருக்கின்றன. முதன் முதலில் தமிழ் கீர்த்தனைகளுக்கு இசையமைத்துப் பாடும் நெறிமுறைகளை வகுத்தளித்தப் பெருமை இம்மகானையே சாரும்.



கர்நாடக இசைக்கலைக்கான மூலம் வடமொழியில்தான் உள்ளன, என்ற ஆதாரமற்ற கருத்துக்களைத் தனது ஆய்வினடிப்படையில் தமிழிசையே அதற்கான மூலமாக இருப்பதை நிரூபித்து, ஆரிய பார்ப்பனியமாக்கப்பட்ட தமிழ் இசைக் கலையை மீட்டெடுக்க தன் வாழ்நாளெல்லாம் அதுசார்ந்த ஆய்வுகளைச் செய்து தமிழிசைக்கு அரும் பணியாற்றியவர் தமிழிசை அறிஞர் ஆபிரகாம் பண்டிதர்.

தனது இசை ஆய்வின் முடிவுகளை கருணாமிர்த சாகரம் என்ற இசை நூலாக 1917 ஆம் ஆண்டு தமிழுக்கு இணையில்லா இசைப் பொக்கிஷமாக படைத்தளித்தார். 1395 பக்கங்களை உடைய இந்நூல் இன்று வரை தமிழிசை ஆய்வுகளுக்கான முதன்மை நூலாக விளங்கி வருகிறது.

இசைக்காகவே தனது உடல், பொருள் ,ஆவி அனைத்தையும் தத்தம் செயத இப்பேராசான் 1919 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31 ஆம் தேதி இவ்வுலகைவிட்டு மறைந்தாலும் அவரது மகன் டாக்டர்.ஆ.வரகுணபாண்டியன் பாணர்கைவழி யாழ் என்ற ஆய்வு நூலை வெளியிட்டுள்ளார். இவரது பெயரன் பேராசிரியர் து.ஆ.தனபாண்டியன் இசைத் தமிழ் வரலாற்றுத் தொகுதிகளையும் புதிய இராகங்கள், இராகங்களின் நுண்ணலகுகள் போன்ற நூல்களை இயற்றி தமிழிசைக்கு பெருந்தொண்டாற்றினார்.

அவரது வாரிசுகளோடு நில்லாமல் தமிழிசை இயக்கம் ஒரு மாபெரும் பண்பாட்டியக்கமாகத் தொடர்ந்தது. சுவாமி விபுலானந்தர், எஸ்.இராமநாதன், கு.கோதண்டபாணி, அ.இராகவன், வரகுண பாண்டியன், வீ.ப.க.சுந்தரம், குடந்தை சுந்தரேசனார், சேலம் ஜெயலட்சுமி, நா.மம்மது போன்ற தமிழிசை ஆய்வாளர்கள் தமிழிசைக்கு பெரும் பங்காற்றினர்.

1941 ஆம் ஆண்டு இசையில் தமிழ்மொழியிலான பாடல்களை வலியுறுத்தி தொடங்கப்பட்ட தமிழிசை மாநாட்டிற்கான மூலமும் ஆபிரகாம் பண்டிதரின் தமிழ்ப் பற்றின் தாக்கம்தான் என்றால் அது மிகையாகாது.

ஆபிரகாம் பண்டிதரின் தமிழிசை ஆய்வு, இப்பேருலகத்திற்கு அளிக்கப்பட்ட பெரும் பேறு; இசைக் கலைஞர்களின் இசைப்பயணத்தை கூர்மையாக்கும் இசையுளி; புதுப்புது இசைப் பரிமாணங்களைப் படைக்கத் தூண்டும் இசைப் பேராண்மை. இவரது செயற்கரிய இப்பணி இவ்வுலகின் சுவாசம் உள்ளவரை இசையாய் எங்கும் வியாபித்திருக்கும்.

●

கட்டுரையாளர், எழுத்தாளர், பண்பாட்டு ஆய்வாளர்.




கட்டுரை



# திரிதரும், இழிதரும்

## பழந்தமிழில் கூட்டு வினைகள்

ஆ.கார்த்திகேயன்

1) சங்க இலக்கியம் வரவர சாமான்ய மனிதருக்கு அருகிய வழக்காக (archaic) மாறி வருகிறது. இன்னும் இருபது முப்பது ஆண்டுகள் கடந்தால் நிலைமை எப்படி இருக்கும் என்று சொல்ல முடியாது. சங்ககால மொழி நாம் தற்போது பேசும் மொழியின் அனுபவ வட்டத்திற்கு வெளியே இருப்பதால் அதனைப் புரிந்து கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது. சொற்கள், இலக்கணக் கூறுகள்,தொடர்கள் யாவும் வேறுபட்டவை. சொற்களின் அமைப்பை ஆராய்வது உருபனியல் (Morphology) எனப்படும். தொடர்களின் அமைப்பை ஆய்வது தொடரியல் (Syntax) என்பர். சொற்களுக்கு மேலே தொடர்களுக்குக் கீழே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் சேர்ந்து கூட்டுச் சொற்களாக விளங்குகின்றன.தனிச் சொற்களின் பண்புகளையும் தொடர்களின் பண்புகளையும் கூட்டுச்சொற்கள் கொண்டு இருக்கும். *(The boundry between word and phrase is not discrete)* தொகுத்து வரும் சொற்களைத் தொகைச் சொற்கள் என்றும் கூறுவர் இலக்கணக்காரர். நாம் கூட்டுச் சொல் என்பதை இக்கட்டுரையில் கையாள்வோம்.

2) இழிதரும்: வாக்கியத்தில் தனிச்சொல் செயல் படுவதைப் போலவே கூட்டுச் சொல்லும் செயல்படும். ஒரு சொல் நீர்மைத்தாய் அவை செயல் படும்.கூட்டுச் சொல்லைப் புரிந்து கொண்டால்தான் வாக்கியத்தின் பொருளை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.ஓர் எடுத்துக்காட்டு : "கலை தொட இழுக்கிய பூநாறு பலவுக் கனி/ வரை இழிஅருவி உண்துறைத் தரும்"(குறுந்தொகை:31) மலையிலிருந்து வீழ்கின்ற(இழி) அருவி நீர் பலாக்கனியை ஊர்மக்கள் உண்ணுமாறு தரும். மேற்கண்ட பாடலில் 'இழி' என்ற வினைச்சொல் இழிதல்- வீழ்தல் என்ற பொருளில் தனிச்சொல்லாக வந்துள்ளது. தரும்' என்ற வினையும் தனி வினையாக (Simple Verb) கடைசியில் வந்துள்ளது. அடுத்து வரும் பாடல் வரிகளைக் கவனிக்கவும்.

"மால்வரை இழிதரும் தூவெள் அருவி/கல்முகைத் ததும்பும் பல் மலர் சாரல்" (குறுந்தொகை-32) இப் பாடல் வரியில் 'இழிதரும்' என்ற சொல் வீழ்தல் என்ற பொருள் கொண்டுதான் வருகிறது. ஆனால் இதில் இரு சொற்கள் உள்ளன. (இழி+தரு) எனவே இதனைக் கூட்டுச் சொல் (Compound word / Verb) என்கிறோம். இதுபோன்ற பல வினைச்சொற்கள் பழந்தமிழில் பயின்று வருகின்றன.திருமுருகாற்றுப்படை இறுதி வரியில் "இழுமென இழிதரும் அருவி பழமுதிர்ச் சோலை மலைகிழவோனே" இழிதரும் இங்கும் வந்துள்ளது.

இழும் எனும் ஓசையுடன் வீழ்கின்ற அருவிக்குச் சொந்தமான பழமுதிர்ச் சோலைக்கு உரியவனே என்பது பொருள். இழிதருதல் வீழ்தல் என்று பொருள். இழிதரு - இதில் இரு சொற்கள் இருப்பதால் இதுவும் கூட்டுச் சொல் ஆகும். குறுந்தொகையில் "பெருவரை மிசையது நெடு வெள்ளருவி /முதுவாய்க் கோடியர் முழவின் ததும்பி/சிலம்பின் இழிதரும் இலங்கு மலை வெற்ப"(78) என வரும் பாடலிலும் "இழிதரும்" வந்துள்ளது.'பெரிய மலையின் உச்சியில் உள்ளதாகிய அருவியானது கூத்தரது முழவைப் போல ஒலித்து விழுகின்ற நாட்டுக்குத் தலைவனே'.இங்கும் இழிதரும் என்ற சொல் விழுகின்ற என்ற பொருளைக் கொண்டுள்ளது.

3) திரிதரு: இன்னொரு எடுத்துக் காட்டு காண்போம். இதுவும் திருமுருகாற்றுப்படையில் வருகிறது. "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு"- உலகத்தில் உள்ள உயிர்கள் மகிழ்ச்சி அடையும்படி மேருவை வலப்பக்கமாகச் எழுந்து சுற்றுகின்ற சூரியன் கடலிடத்தே காணப்பட்டாற் போல' இதன்படி திரிதரு என்ற கூட்டுவினைக்குத் திரிகின்ற அல்லது சுற்றுகிற என்பதுதான் பொருள்.பொருநராற்றுப்படையில் திரிதரு என்ற கூட்டுவினை இருமுறை அடுத்தடுத்து வருகின்றன.

"வெந்தெறல் கனலியொடு

மதிவலம் திரிதரும். கல்லென் சுற்றமொடு
கால்கிளர்ந்து திரிதரும்"–

'ஞாயிறும் திங்களும் வலம் வருதலை யுடைய
கடல் சூழ்ந்த இவ்வுலகு'


...'அழுகை ஒலியையுடைய சுற்றத்தோடே ஓடித்
திரியும் பாணர்'

(பொரு. 7,11). இங்கு 'திரிதரு' கூட்டுச்
சொல்லாகச் செயல்படுகிறது.

4) எழுதரு: தற்போது 'எழுதரு' என்ற இன்னொரு வினைச்சொல்லைப் பார்ப்போம். "மழை சேர்ந்து எழுதரு மாரிக் குன்றத்து/அருவி ஆர்ந்த தண் நறுங் காந்தள்" இதன் பொருள் : மேகங்கள் சேர்ந்து எழுந்த மழையை உடைய மலையினிடத்திலே அருவிக்கு அருகிலுள்ள தண்ணிய நறிய காந்தள்,' என்பதாகும்.எழுதரு என்பதற்கு எழுந்த என்று பொருள்.(குறுந்- 159).எழுதரும் மற்றோர் உதாரணம் : "கழை விரிந்து எழுதரும் மழைதவழ் நெடுங்கோட்டு" (பதி-73-14)' மூங்கில்கள் பரந்து உயர்ந்து வளர்தற்கு இடமாயிருப்பதும் மேகங்கள் படிவதுமான நெடிய உச்சிகளையுடைய' இங்கு எழுதரும் என்பதற்கு வளரும் என்று பொருள்.

5) பாய்: பாய்தரு "கெண்டை பாய்தர அவிழ்ந்த வண்டு பிணி யாம்பல் நாடுகிழ வோனே "(ஐங்-40-4). கெண்டை மீன்கள் பாய்வதால் மலர்ந்த வண்டு விரும்பும் ஆம்பல் மிக்க நாட்டுக்கு உரியவனே' பாய்தர என்பது பாய்வதனால் என்று பொருள் கொள்ளப்படுகிறது. 'பாய்தர என்புழித் தருதலைத் துணைவினை என்ப' என்று துரைசாமி பிள்ளையவர்கள் குறிப்பிடுகிறார்.பாய் என்பது முதன்மை வினை என்று சொல்லாமலே பெறப்படுகிறது.

6) புகு: புகுதரு கன்றை அழைக்கும் குரலினவாய் மன்று நிறையும்படி பசுக்கள் புகுகின்ற மாலைக் காலத்தும் எம்மை நினைந்து நம் தலைவர் வாராராயின் எனது தன்மை என்னவாகும் "கன்றுபயிர் குரல மன்றுநிரை புகுதரு/மாலையும் உள்ளா ராயின் காலை/ யாங்காதுவங் கொல் பாண! " (அகம்-14;பக் ,104,105) "மாநிதிக் கிழவனும் போன்மென் மகனொடு/ தானே புகுதந்தோனே "(அகம்-66) 'பெரும் செல்வந்தன் என்று கூறத் தகுந்த மகனோடு மனைவாயிற்



புகுந்தான்' "தெருவில்/புனிற்றாப் பாய்தெனக் கலங்கி யாழிட்/டெம்மனைப் புகுதந்தோனே அதுகண்டு"(அகம்-56). 'தெருவிடத்தே ஈன்றணிமையுடைய பசு பாய்ந்தாற் போல கலங்கி யாழை ஒலித்து என் மனையிடத்தே புகுந்தான்.' புகுதலும் புகுதருதலும் ஒத்த பொருளைத் தருவன ( *synonym*).

*7)* படர்: படர்தரு "தாஅவல் அஞ்சிறை நொப்பறை வாவல்/ பழுமரம் படரும் பையுள் மாலை"(குறுந்தொகை *-359*) துன்பம் தரும் மாலை படர்ந்து வந்துவிட்டது; வாவல் மரத்திற்குத் திரும்பி விட்டன.இங்குப் 'படரும்' தனி வினையாகும்.இதற்கு இணையாகப் படர்தரும் என்ற கூட்டுவினையும் கிடைக்கிறது. திரைபயில் அழுவம் வழங்கி உரனழிந்து/நிரைதிமில் மருங்கில் படர்தருந் துறைவன்" *(அகம்-210-5,6).* இதன் பொருள்:

(மீன்கள் )திரை வீசுகின்ற கடலைக் கலக்கி வலிகெட்டு கட்டுமரங்களின் பக்கத்தே கிடக்கும். இவ்வகையான துறையை உடையவனே! இங்கு படரும் என்பதும் படர்தரும் என்பதும் ஒரே பொருள்தான்.மேலும் சில எடுத்துக்காட்டுக்கள்:

**உகுதரும் (குறு.251)**

**புலம்புதரு (குறு.79)**

**உடைதரும் (குறு.361)**

**ஊர்தரும். (குறு.205)**

**எறிதரும் (குறு.110)**

**ஏர்தரும் (நற். 30)**

**நெறி தர( குறு.66)**

**நிகழ்தரும் (பதிற்று.48) திகழ்தரும் (பதிற்று.52) உறைதரு (ஐங்.105)**

விரிவஞ்சி எடுத்துக்காட்டுகளை இத்துடன் நிறுத்திக் கொள்ளலாம்.

*8)* மேற்கண்ட கூட்டு வினைகளுக்கு அதே பொருள் கொண்ட எளிய வினைகள் *(simple verb)* இருப்பதைக் காண்கிறோம். இதுமொழிக்கு ஆடம்பரம் தானே! *(Laxury).* ஆடம்பரமாக இல்லாவிட்டால் வேறேதாவது பணி *(new function)* இருக்கவேண்டும்.நடை-யியல் பணியாக இருக்கலாம். *(Expressive function)* புது மொழி வளர்ச்சிக்குத் தொடக்கமாக இருக்கலாம். சங்ககால மொழியில் நிகழ் காலமும் எதிர்காலமும் இல்லை. இறப்பு,

இறப்பல்லா காலம் (past and non-past) தான் உண்டு.இடைக்காலத்தில் நிகழ், எதிர்காலங்கள் தோன்றி விடுகின்றன. இவற்றின் தோற்றம் எப்படி ஏற்பட்டது?தற்போதைக்கு இவற்றை நடையியல் (expressive) கூட்டுவினைகள் என்று எடுத்துக் கொள்வோம்

9) தற்காலத்தில் வழங்கும் வேறு சில கூட்டு வினைகளையும் காண்போம்:

கற்றுக் கொள் : 'learn'

தட்டிக் கொடு : 'encourage'

கண்டுபிடி : 'discover, invent'

இத்தகைய கூட்டு வினைகளிலும் இரண்டு வினைச்சொற்கள் சேர்ந்து கூட்டாகப் பொருள் உணர்த்துவதைக் காணலாம். பொருளுக்கு இரு சொல்லுமே அவசியம்.' கற்றுக் கொடு' இதில் எந்தச் சொல்லை நீக்கினாலும் teach ' என்ற பொருள் வராது.இங்கே இரு உறுப்புகளும் "Constituents" புதுப் பொருளுக்கு அத்தியாவசியம் ஆகின்றன. இவை போன்ற கூட்டுச் சொற்கள் நூற்றுக் கணக்கில் உருவாக்கிப் இன்று பயன்படுத்தப்படுகின்றன. இவை புதுப் பொருள் கொண்டு படைக்கப்படுகின்றன. கூட்டு வினை குறைந்தது இரு சொற்களுக்கு மேல் உள்ளவை. Lexeme 1+Lexeme 2=Compound Verb

தட்டிக்கொடு 'to encourage" போன்ற கூட்டு வினைகளில் இரு சொற்களுமே மொத்த பொருண்மைக்குக் காரணமாகின்றன. (To the sum total of meaning).

10)ஆனால் பழந்தமிழில் முதலில் வரும் வினை முக்கிய வினையாக (main verb) வருகின்றன. வினைப்பொருண்மையைத் தாங்கி வருவது (base) அவையே. இரண்டாவது வரும் வினை துணை வினை என்று ஔவை துரைசாமி பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.துணை வினை என்ற கலைச்சொல் சில பொருள்களில் பயன் படுத்தப்படுகின்றன.எனவே இவ்வினையை (Vector verb) இலக்கணக் கூறுகளைத் தாங்கிச் செல்லும் (carriers) வினைகள் எனலாம்.

பழையவடிவம் - புதியது புகுதர- புகுந்ததினால்

| | |
|---|---|
| புகு தரும் | - புகும்/ புகுகின்ற |
| புகுத | - புக |
| புகு தரின் | - புகுந்தால் |
| புகு தராக்கால் | - புகாவிட்டால் |
| புகு தர்வாய் | - புகுவாய் |
| புகு தந்த | - புகுந்த |
| புகு தந்தோன் | - புகுந்தோன் |
| புகு தந்தார் | - புகுந்தார் |
| புகு தந்தான் | - புகுந்தான் |

கூட்டு வினைகள் பழையனவா எளிய வினைகள் பழையனவா என்ற வினாவிற்கு என்ன பதில் சொல்வது?போதரும்' என்ற வடிவம் (கலி.105,அகம்,52) பழந்தமிழில் வருகின்றது. 'போதரின்' என்ற வடிவம் (கலித்.145) கலித்தொகையில் வந்துள்ளது. பரிபாடலில் (10-5) 'போந்தது' என்று சுருங்கி வந்துள்ளது.ஆண்டாள் பாசுரத்தில்" போய பிழையும் புகு தருவான் நின்றனவும்" என்றும் 'ஒல்லை நீ போதாய்" என்றும் 'போதராய்' என்றும் வருகிறது. "போந்தார் போந்து எண்ணிக் கொள்"என்று வரும் வரியிலும் 'போ தந்தார்' என்பது 'போந்தார்' என்று சுருங்கி விட்டது. நெல்லைத் தமிழில் (தகரம்)

வரு-த்-ஆன் சொல்லு-த்-ஆன் ஓடுத்-ஆன்

நிகழ்காலத்தைக் குறிக்கும் பழைய வடிவங்களின் எச்சமோ? தற்காலத்தில் -த்- இறந்த காலமாக வழங்குகிறது. இன்னொன்று பழந்தமிழ் கூட்டு வினைகள் செயல் வினைகளாக (Action Verbs) இருக்கக் காணலாம் காண்க: சொரிதரு இழிதரு,பாய்தரு,எழுதரு,போதரு, ஊர்தரும்,ஏர்தரு போன்றவை செயல் வினைகளாகும்.புலம்புதரு- அனுபவ (experiencer) வினை போல உள்ளது.சங்க காலத்துக்கு முன்பு கூட்டு வினைகளாக இருந்து பின்னர் துணை வினைகள் இடை நிலைகளாக வளர்ச்சி பெற்றிருக்கலாம்.

இத்தகைய வினைச்சொற்களை இடைக்காலம் வரை செய்யுட்களில் காணமுடிகின்றது."செற்றிலேன் இன்னும் திரிதருகின்றேன்" (திருவா- செத்திலாப்பத்து) தற்காலத்தில் இவை வழக்கொழிந்து விட்டன.

**துணை நூல்கள்:**

1) சங்க இலக்கியக் கருவூலம், (தொகுதி-15) தமிழ்மண் அறக்கட்டளை, பதிப்பாளர் இளவழகன் (2005). சென்னை-17.

2) மாதையன்,பெ. சங்க இலக்கியச் சொல்லடைவு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

3) திருவாசகம், கா.சு.பிள்ளை உரை,சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.

●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர்.



# பெயருக்கேற்ப வாழ்ந்தவர்

**இரா. காமராசு**

கவிஞர் வாய்மைநாதன் *(19.05.1937 - 11.08.2023)* நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் வட்டம் வாய்மேட்டில் பிறந்தார். இவரின் இயற்பெயர் மு.இராமநாதன். இளம் பருவத்திலேயே இலக்கிய ஈடுபாடு கொண்டார். பல நூல்களைத் தானே கற்றார். தொடக்கப் பள்ளியில் இளநிலை ஆசிரியராகப் பணியைத் தொடங்கி மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் வரை தன் பணிநிலையை உயர்த்திக் கொண்டார்.

வேதாரண்யம் வட்டாரம் தமிழ் மொழி மீதும் இலக்கியங்கள் மீதும் அதீதப் பிடிப்பு கொண்டவர்கள் வாழும் பகுதி. இங்கு ஏராளம் தமிழ் அமைப்புகள் உண்டு. தமிழறிஞர் இலக்குவனார் தோன்றிய இடமும் வாய்மேடுதான். அவர் திராவிட இயக்கச் சார்புடன் மொழியுரிமைப் போராளியாகவும் அறிஞராகவும் திகழ்ந்தார்.

இச்சூழலில்தான் இராமநாதன் இலக்கிய உலகுக்குள் காலடி வைக்கிறார். ஆழ்ந்த இலக்கண இலக்கியப்புலமை மிக்கவராக உருவாகிறார். தொடக்கத்தில் தமிழார்வலராக இருந்து அவர் எழுதத் தொடங்கியதும் தன் ஊரின் பெயரை முன் ஒட்டாக வைத்து வாய்மைநாதன் ஆனார்.

திராவிடத் தமிழ் இயக்கங்கள் பரவி இருந்த பகுதியில் இவர் பேராசான் ஜீவாவின் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் எனும் பண்பாட்டு அமைப்பில் 1962 லேயே இணைகிறார். மார்க்சிய நூல்களைப் பயின்று பொதுவுடமை இயக்கத்திலும் பயணிக்கத் தொடங்குகிறார். இவரோடு பஞ்சநதிக்குளம் புலவர் வை. பழனிச்சாமி, புலவர் கு.வெற்றியழகனார், ஆசிரியர் ஆ.வீராச்சாமி, ஆசிரியர் வை.முத்து போன்றவர்களும் இயக்க, இலக்கியப் பணிகளில் இணைகின்றனர். கருத்தியல் சார்ந்து பொதுவுடமை இயக்கத்துக்கு இவர்கள் வந்தது இப்பகுதியில் புதிய முயற்சி; வளர்ச்சி.

அடிப்படையில் இவர் ஓர் நல்லாசிரியர். பள்ளியில் மட்டுமல்ல வெளியிலும் நல் வழிகாட்டியாக விளங்கினார். இவர் முத்துப்பேட்டை அரசுப் பள்ளியில் தமிழாசிரியராக இருந்த காலம் பொற்காலம். இன்றைய பாரதியியல் அறிஞர் ய.மணிகண்டன், மருத்துவ நிபுணர் ச.மருதுதுரை, அரசியல் தலைவர் டி. லெனின், எஸ்.ஜி.எம்.லெனின், எழுத்தாளர்கள் மோகன்ராஜ், சண்முகசுந்தரம் போன்ற பலர் இவரின் மாணவர்கள்.

வாய்மையார் தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் புலமை மிக்கவர். தினமும் தி இந்து ஆங்கில இதழைப் படிப்பார். தனிப்பட்ட முறையில் தன்னிடம் வரும் சிறுவர்களுக்கு ஆங்கிலமும் கற்பிப்பார். மொழி பெயர்க்கவும் செய்வார். நா.வானமாமலை குறித்த ஆய்வுக்காக அவரின் நூலை தமிழாக்கம் செய்து உதவியது மறக்க முடியாது. குப்பகோணம் பந்தநல்லூரில் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியராக இருந்து ஓய்வு பெற்றார். பணி நிறைவுக் காலத்திலும் அவ்வூரில் உள்ள வெளிநாட்டில் வசிப்பவர்களைக் கொண்டு பல லட்சம் மதிப்பில் கட்டட வசதிகளை ஏற்படுத்தினார். பள்ளிப் பணியை கல்விக் கற்பித்தலோடு சமூகப் பணியாகவும் அவர் கருதினார். மரபுக் கவிதைகளை இசைப் பாடல்கள் போல எழுதும் ஆற்றல் மிக்கவர். 'சிந்துக் கவிஞர்' என்பது இவருக்கு மிகவும் பொருந்தும்.

இவர் எழுதிய நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லும் 'நேதாஜி காவியம்' (1986), விடுதலைப் போராட்ட வீரர் வ.உ.சி. குறித்த 'கப்பலுக்கொரு காவியம்' (2008), பகத்சிங் பற்றிய 'பகத்சிங் புரட்சிக் காப்பியம்' (2013), வெண்மணித் துயரை மையமிட்ட 'வெண்மணிக் காப்பியம்' (2020) ஆகியவை இவரின் அசுர உழைப்பில் விளைந்தவை. தற்காலத்தில் மரபுக் கவிதையில் சமூக நிகழ்வுகளை, வரலாற்று நாயகர்களைப் பற்றி எழுதப்பட்ட இக்காவியங்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டியவை. நேதாஜி காவியம் ஹிந்தியில் 'வங்க் காசிங்' எனும் பெயரில் மொழியாக்கம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வாய்மையார் உரைநடையிலும் தடம் பதித்தவர். இவர் 1977 இல் 'அலைமகள்' எனும் புதினத்தை எழுதினார். பின்னர் புகையிலை பற்றி ஒரு நாவலைத் தொடராக எழுதி பாதியில் நின்று போனது. 2008 ல் இவர் எழுதிய 'நாலி' எனும் புதினம் புதுமையானது. வேதாரண்யம் வட்டாரத்தில் முளைத்து மண்ணை மலடாக்கிச் சுற்றுச் சூழலையும் பாதித்த இறால் பண்ணைகள் குறித்த நாவல் இது. உள்ளாட்சி நிர்வாகத்தில் பெண்கள் பொறுப்புக்கு வந்தாலும் அவர்களை ஆணாதிக்கம் படுத்தும் பாட்டையும் நுட்பமாக இந்நூலில் சித்திரித்திருப்பார்.

புதிய மனிதன் (2003), உயிரின் விலை (2013) ஆகிய இரு சிறுகதைத் தொகுதிகளையும் எழுதி உள்ளார். இவர் இலக்கிய நடையில் எழுதக்கூடியவர் என்றாலும் படைப்பில் அது நெருடல் இல்லாமல் பார்த்துக் கொள்வார்.

ஒடுக்குதலுக்கும் ஒதுக்குதலுக்கும் எதிராகத் தொடர்ந்து தன் எழுத்தாயுதத்தை ஏந்தினார். மதுரை வீரன் கவிதை நாடகம் (2001), நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள் பற்றிய ஆய்வு போன்றவை முக்கியமானவை.

கீழத் தஞ்சையின் உழைக்கும் மக்களின் நாயகர்களாக விளங்கிய தியாகி களப்பால் குப்பு (1998) பற்றிய நூலும் தியாகி எஸ். ஜி. முருகையன் நூலுக்கான அடித்தளமும் இவரின் கொள்கைப் பற்றுக்குச் சான்றுகள்.

பேராசிரியர் நா. வானமாமலையுடன் ஏற்பட்ட தொடர்புறவால் நாட்டுப்புறவியலிலும் ஈடுபாடு கொண்டார். இவர் தொகுத்து வெளியிட்ட 'தஞ்சை நாட்டுப்புறப் பாடல்கள்' (2009), சின்ன சின்ன திண்ணைக் கதைகள் (2010) ஆகியன இத்தளத்தில் முக்கியமானவை.










வாய்மைநாதன் தொடர்ந்து எழுத்தியக்கமாக விளங்கினார். மூச்சிரைப்பு நோயினால் இளம் வயதிலிருந்தே பாதிக்கப்பட்ட நிலையிலும் இயக்கப் பணியிலும் இலக்கியப் பணியிலும் கல்விப் பணியிலும் தொடர்ந்து பயணித்தார்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தில் வேதாரண்யம் வட்டம் தொடங்கி, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத் தலைவர், செயலாளர் எனத் தொடர்ந்து, மாநிலச் செயலாளராகவும் பல்லாண்டுகள் பணி செய்தார். ஜீவா. பாலன், நா.வா., தொ.மு.சி, கே.சி.எஸ், பொன்னீலன், தனுஷ்கோடி ராமசாமி, ஆ.சிவசுப்பிரமணியன், சி.சொக்கலிங்கம், இரவீந்திரபாரதி எனப் பலரிடமும் அன்பும் தோழமையும் கொண்டவராகத் திகழ்ந்தார்.

புலவர் அ.ப.பாலையனும் வாய்மையாரும் இரட்டைப் புலவர்கள் போல இருப்பார்கள். இருவரும் சந்திப்பதும், பேசுவதும், பழகுவதும் குதூகலமிக்கவை. வாய்மைநாதன் சென்ற தலைமுறை கம்யூனிஸ்ட். எதிலும் கறாராக இருப்பார். உண்மையும் நேர்மையும் அவருக்கு முக்கியம். அதீதக் கோபப் படுவார். பொது ஒழுக்கமும், தன் ஒழுங்கும் பேணி நின்றார். இக்குணங்களால் அவருக்கு நட்பு சுருக்கமானதாக ஆனது. அதைப்பற்றி அவர் கவலைப்பட மாட்டார்.

காலம் தவறாமையை மிகத் துல்லியமாகக் கடைபிடிப்பார். தமிழ்நாட்டின் ஒரு மூளையில் எவ்வித வசதியற்ற சிற்றூரில் வசித்தாலும் குறித்த நேரத்துக்கு முன்பாக அவர் இருப்பார். விருந்தோம்பலில் அவருக்கு நிகர் அவரே. அறிவு, கல்வி நிலையில் பலருக்கும் ஊக்கம் தந்து வாழ்வில் உயரச் செய்தார்.

என்னை அவரின் இயக்க, இலக்கிய, கொள்கை வழித் தோன்றலாக உருவாக்கினார். என்னை மட்டுமல்ல கே.பி.அம்பிகாபதி, சி.த.கருணாநிதி, இராம. இளங்கோவன், புயல் குமார், ஞா.பழனி வேலு, ப.பார்த்தசாரதி போன்ற பலருக்கும் அவரே தோழமை ஆசான்!

தமிழ்நாடு அரசின் சிறந்த நூலுக்கானப் பரிசு, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் வாழ்நாள் சாதனையாளருக்கான விருது போன்ற அங்கீகாரங்களைப் பெற்றார். என்றாலும் அவரின் உழைப்புக்கு தமிழ்ச் சமூகம் உரிய மரியாதை செய்யாதது குறையாகவே உள்ளது.

அவரின் துணைவியார் காலமாகிவிட்டார். மூத்த மகன் ஜீவானந்தம் வேளாண்மைத் துறையில் பணி செய்கிறார். இளைய மகன் முருகபாரதி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக உள்ளார். மகள் தமிழ்க்கோதை நல்ல நிலையில் உள்ளார். வாய்மையார் குடும்பக் கடமையையும் சரிவரச் செய்தவர்.

மக்களுக்காக உழைப்பவர்கள், சிந்திப்பவர்கள், மக்கள் இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கு மக்களின் ஏற்பே பெரிய விருது என்பதை அவரின் புகழஞ்சலி நிகழ்வில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கையும் உரையாற்றியவர்களின் உணர்வும் மெய்ப்பித்தன.

பெயர் விளங்க வாழ வேண்டும் என்பார்கள். பெயரைப் போலவே வாழ்ந்தவர் அவர்!

●

கட்டுரையாளர், பேராசிரியர், நாட்டுப்புறவியல் துறைத் தலைவர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்.

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் திண்டுக்கல் கிளையின் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சிகள்



19.08.2023 அன்று திண்டுக்கல்லில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இணைந்து நடத்திய செய்தொழில் நேசி! (இங்கிதம் ஐம்பது)– ஆசிரியர் சுந்தரசோமன் அவர்களின் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் என்சிபிஎச் மேலாண்மை இயக்குநர் க.சந்தானம், எழுத்தாளர் மா.கமலவேலன், திருநெல்வேலி என்சிபிஎச் மேலாளர் ஜோ.ஏசுதாஸ், மாவட்டக் கல்வி அலுவலர் *K.C.*சுதாகர், தமிழ்நாடு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் சங்க மாநிலத் தலைவர், பொ.அன்பரசன், கொடைக்கானல், அ.மே.நி.ப. முதுகலை ஆசிரியர் திருமதி. ரெ.விமலாதேவி, என்சிபிஎச் மதுரை மண்டல மேலாளர் அ. கிருஷ்ணமூர்த்தி, என்சிபிஎச் திண்டுக்கல், மேலாளர் எஸ்.அய்யப்பன்; கவிஞர் விகுரா, தகஇபெ மாவட்டச் செயலாளர் சு.பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



23.08.2023 திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை *HNUPR* பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் சார்பில் சிறப்பு புத்தகக் கண்காட்சியினை பள்ளியின் தலைமையாசிரியர். திருமதி. சேவியர் லீலா ரோஸ்லின் அவர்கள் திறந்து வைத்தார். இதில் என்சிபிஎச் திண்டுக்கல் விற்பனையாளர் ச.நடராஜன் கலந்துகொண்டார்.



28.08.2023 திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை நாடார் உயர்நிலைப்பள்ளியில், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் சார்பில் சிறப்பு புத்தகக் கண்காட்சியினை பள்ளியின் தலைமையாசிரியர் திருமதி.கு.சீத்தாலெட்சுமி அவர்கள் திறந்து வைத்தார். இதில் என்சிபிஎச் திண்டுக்கல் விற்பனையாளர் ச.நடராஜன் கலந்துகொண்டார்



கட்டுரை

# இன்றைய டிஜிட்டல் யுகக் குழந்தைகள்

மருத்துவர் ப.வைத்திலிங்கம்

**மூளையின் நெகிழும் தன்மை**

நாலாபுறமும் இருந்து வரும் உள்ளீடுகளுக்கு ஏற்றவாறு குழந்தையின் மூளை தன்னை மாற்றிக் கொண்டே வளரும் தன்மையுடையது. இதை மூளையின் *PLASTICITY* அல்லது நெகிழும் தன்மை என்கிறோம். முதல் மூன்று வருடங்களில் குழந்தையின் மூளை ஒவ்வொரு நொடியும் பத்து லட்சம் புது கனெக்‌ஷன்களை உருவாக்குவதாக ஒரு புள்ளி விபரம் சொல்லுகிறது. அனைத்தும் குழந்தைகளின் கேட்டல், கற்றல், மற்றும் அறிவு வளர்ச்சிக்குத் தேவைப்படுகிறது.

தகவல் தொழில் நுட்பமும் எலெக்ட்ரானிக் சாதனங்களும் இன்றைய குழந்தைகளின் மூளை, உள்ளீடுகளைப் பகுத்தறிந்து சிந்தித்து செயலாற்றும் முறையையே மாற்றிவிட்டது என்று சொல்லலாம். இன்றைய இளைஞர்கள் இணையம் வழியாக வந்து கொட்டும் தகவல்களை உள்வாங்கி பிறரின் உதவியின்றி முடிவு எடுத்து செயலாற்றும் சமூகமாக

மாறிவிட்டார்கள். நாம் குழந்தைகளாக இருந்தபோது சென்ற உள்ளீடுகளுக்கும் இன்றைய குழந்தைகளுக்கு செல்லும் உள்ளீடுகளுக்கும் இமாலய வேறுபாடுகள். இன்றைய குழந்தைகளின் மூளையைத் தூண்டும் காரணிகளுக்கு ஏற்ப மூளையின் புதுப்பகுதிகள் வளர, நாமும் நம் முன்னோர்களும் உபயோகித்த மூளையின் சில பகுதிகளுக்கு வேலை குறைந்து நாளடைவில் அந்தந்தப் பகுதிகள் சிறியதாகப் போய்விடும் என்று சொல்லுகிறார்கள். கண்ணுக்குத் தெரியாமல் அடுத்த பரிணாம வளர்ச்சி நடக்கிறது!

### டிஜிட்டல் யுகக் குழந்தை

இன்றைய தகவல் தொழில் நுட்ப உலகில் பிறக்கும் குழந்தைகள் அனைவரையும் *DIGITAL NATIVES* என்று அமெரிக்க எழுத்தாளர் மற்றும் கல்வியாளரான மார்க் பிரென்ஸ்கி *(MARC PRENSKY)* அழைக்கிறார். இந்த டிஜிட்டல் நேடிவ்களுக்கு இணையமும் சோஷியல் மீடியாவும், கணிணியும், மொபைலும் உமிழும் தகவல்களை உள்வாங்கிக் கிரகித்து திறமையுடன் வாழத் தெரியும்.

இவர்கள் முந்தைய தலைமுறையினரின் படிப்புக்கு உதவிய கரும்பலகையையும், புத்தகத்தையும் காலாவதியாகிவிட்டதாக நினைக்கிறார்கள். ஸ்மார்ட் போர்டும், டேபும், கணிணியும் முப்பரிமாணத்தில் மிகவும் சிக்கலான கருத்தைக்கூட இவர்களுக்கு எளிதில் புரியவைத்து விடுகிறது. ஆசிரியர்களும் அதற்குத் தகுந்தாற்போல் டிஜிட்டல் யுகத்திற்கு மாறினால்தான் இன்றைய குழந்தைகளின் மூளைக்குள் எந்த கருத்தையும் கொண்டு செல்ல முடியும் என்ற நிலை வந்து விட்டது.

இண்டர்னெட் வருவதற்கும் முன்னர் பிரிண்ட் மீடியா யுகத்தில் பிறந்த நாம் இப்போதுதான் மெல்ல மெல்ல இந்த டிஜிட்டல் யுகத்திற்குக் குடியேறிக் கொண்டிருக்கிறோம். நம்மால் இந்த புதுயுக தகவல் தொழில் நுட்பப் புரட்சியில் கலந்து கொண்டு அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டத் தெரியவில்லை, முடியவும் இல்லை. நமக்கு புதியதைக் கண்டு தயக்கமும் பயமும் வேறு.

வயது வித்தியாசத்தை வைத்து தலைமுறை இடைவெளி என்று சொல்லி வருகிறோம். இப்போது உள்ள தகவல் தொழில் நுட்ப அறிவை வைத்து சொல்வோமானால் நம் குழந்தைகள் நவீன டிஜிட்டல் உலகத்திலும் நாம் அங்கே செல்ல முடியாமல் தவிக்கும் பழைய உலகத்திலும் இருந்துகொண்டு ஒரு வகையான தலைமுறை இடைவெளியில்தான் பிரிந்து நிற்கிறோம்.

### தற்போது குழந்தை வளர்ப்பது எளிதா?

இன்று பெரும்பாலான சிறுவயதுக் குழந்தைகள் நடக்கவும் பேசவும் கற்றுக்கொள்வதற்கு முன்னரே தொலைக்காட்சிக்கும், ஸ்மார்ட் ஃபோனுக்கும் பரிச்சயம் ஆகி விடுகிறார்கள். கழிப்பறை உபயோகிக்கத் தெரிந்து கொள்வதற்குள் ஸ்மார்ட் ஃபோனில் யூடியூப் வீடியோவை சரியாகக் கண்டுபிடித்துப் பார்க்கிறார்கள். பள்ளிக்கூடத்தில் சேர்ந்து புத்தகங்களுக்கு அறிமுகம் ஆவதற்கு முன்னரே காட்ஜெட்டுக்கு அறிமுகம் ஆகி விடுகிறார்கள்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விடவும் தற்போது குழந்தை வளர்ப்பது மிகவும் சிரமமாக இருப்பதாக மூன்றில் இரண்டு பங்கு அமெரிக்கப் பெற்றோர்கள் கூறுவதாக ஒரு ஆய்வறிக்கை சொல்லுகிறது. காரணம் இன்றைய டெக்னாலஜி முன்னேற்றத்தினால் உண்டாக்கப்பட்டுள்ள எலெக்டிரானிக் கருவிகளுக்கு மத்தியில் குழந்தை வளர்க்க மிகவும் சிரமப்படுவதாகச் சொல்லுகிறார்கள்.

எலக்டிரானிக் கருவிகளின் செயற்கைச் சத்தங்களும், தொலைக்காட்சியும், தொடுதிரைக் கைபேசிகளும் மனிதனின் பேச்சுக்களையும், உணர்வுகளின் வெளிப்பாடுகளையும் ஓரம் தள்ளிவிட்டு மையத்திற்கு வந்து குழந்தை வளர்ப்பில் பெற்றோர்களுக்கு உதவ ஆரம்பித்து பல வருடங்கள் ஆகிவிட்டன. அழுகிற குழந்தைக்கு அம்மாவின் தாலாட்டிற்குப் பதில் தொட்டிலை ஆட்டவும் தாலாட்டுப் பாடவும் காட்ஜெட்டுகள் நிறைய வந்து விட்டன.

### டிஜிட்டல் பிரிவினைகள்

இந்த டிஜிட்டல் யுகத்தில் வசதியுள்ளவர்களின் குழந்தைகளுக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் அனைத்தும் வசதியற்றவர்களின் குழந்தைகளுக்குக் கிடைப்பதில்லை. ஒரு சாராருக்கு இணையம், தகவல் பரிமாற்றம், காட்ஜெட்டுகள் என அனைத்தும் எளிதாகக் கிடைக்கும்போது, வசதியற்றவர்கள் மற்றும் கிராமப்புறங்களில் இருப்பவர்களின் குழந்தைகளுக்கு இந்த டிஜிட்டல் தகவல் தொழில்நுட்பம் குழந்தை வளர்ச்சியில் ஒரு பிரிவினையை ஏற்படுத்துகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. நம் நாட்டில் சமீபத்திய *ELEMENTARY EDUCATION IN RURAL INDIA* என்ற கணக்கெடுப்பின்படி, கிராமங்களில் 49.3 சதவீதம் குழந்தைகளுக்குதான் ஸ்மார்ட்ஃபோன் வசதி இருக்கிறது என்றும், அதை அவர்கள் பெரும்பாலும் (76.7 சதவீதம்) வீடியோ கேம்ஸ் விளையாடுவதற்கும் சினிமா பார்ப்பதற்கும் உபயோகப்படுத்துகிறார்கள் என்றும் தெரிகிறது. மீதம் உள்ள 34 சதவீதம் குழந்தைகள்தான் அதைப் படிப்புக்கு உபயோகப் படுத்துகிறார்கள். அதே சர்வேயில் 40 சதவீதம் கிராமத்துக் குடும்பங்களில்தான் குழந்தைகளுக்கு, பாடப்புத்தகங்களைத் தவிர மற்ற பொது அறிவு, கதைப் புத்தகங்களைப் படிப்பதற்கு வசதி உள்ளது எனவும், மேலும் தினம் 40 சதவீதம் பெற்றோர்களுக்குத்தான் தங்கள் குழந்தைகளிடம் இன்று பள்ளிக்கூடத்தில்



*இன்று பெரும்பாலான சிறுவயதுக் குழந்தைகள் நடக்கவும் பேசவும் கற்றுக்கொள்வதற்கு முன்னரே தொலைக்காட்சிக்கும், ஸ்மார்ட்ஃபோனுக்கும் பரிச்சயம் ஆகி விடுகிறார்கள். கழிப்பறை உபயோகிக்கத் தெரிந்து கொள்வதற்குள் ஸ்மார்ட்ஃபோனில் யூடியூப் வீடியோவை சரியாகக் கண்டுபிடித்துப் பார்க்கிறார்கள்.*

என்ன நடந்தது என்று கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் உள்ளதாகவும் கூறுகிறார்கள்.

**டிஜிட்டல் சாதனங்கள்**

யூ டியூப் மீடியாக்களில் பலவகை இருந்தாலும் குழந்தைகளின் விருப்பம் யூ டியூப்தான். உலகம் முழுவதிலும் இருந்து ஒவ்வொரு நிமிடமும் சுமார் 400 மணி நேரத்திற்கான வீடியோவை யூடியூபில் பதிவேற்றம் செய்துகொண்டு இருக்கின்றார்கள். இவைகளில் இருந்து குழந்தைகளுக்கு ஏற்ற வீடியோக்களை மட்டும் தனியாகப் பிரித்து யூடியூப் கிட்ஸில் போடுவதே பெரிய வேலை. அதில் உள்ள வீடியோக்கள் அனைத்தும் குழந்தைகளுக்கு ஏற்றவையா என்றும் சொல்லமுடியாது. அதிலும் சில கிரிமினல்கள் ஆபாசம், வன்முறை கலந்த வீடியோ காட்சிகளைச் செருகி குழந்தைகள் மீது பாயும் வல்லூறுகளாக இருக்கிறார்கள்.

இம்மாதிரி வீடியோக்களை குழந்தைகள் பயமும், பதட்டமும் கலந்து பார்க்கும்போது வளர வேண்டிய வயதில் மூளையின் தேவையில்லாத பகுதிகள் தூண்டப்பட்டு, மனவியல் அளவில் பாதிப்படைகின்றனர். பெரும்பாலான குழந்தைகள் வயதுக்குப் பொருந்தாத படங்களையும் வீடியோக்களையும் பார்த்து பிஞ்சிலேயே பழுக்கவும் ஆரம்பித்து விடுகிறார்கள்.

**ஸ்மார்ட் ஃபோன்**

ஸ்மார்ட்ஃபோனை ஒரு ஆராய்ச்சியாளர் *DIGITAL HEROIN* என்று சொல்லுகிறார். அவ்வளவு போதையைக் கொடுக்கிறதாம். ஒவ்வொரு முறை ஃபோனைக் கையில் எடுக்கும்போதெல்லாம் மூளையில் ஆக்சிடோசின் என்னும் சந்தோஷ உணர்வைத் தூண்டும் ஹார்மோன் சுரந்து விடுகிறது. நமது நாட்டில் உள்ள குழந்தைகள் 2 மாதத்திலேயே ஃபோனுக்கு பரிச்சயமாகி விடுகிறார்கள்.

### வீடியோ கேம்ஸ்

உலக சுகாதார நிறுவனம் 2018 ல் INTERNATIONAL CLASSIFICATION OF DISEASE ல் GAMING DISORDER என்ற மனவியாதியைச் சேர்த்துள்ளது. தொடர்ந்து வீடியோ கேம்கள் விளையாடி அதுவே போதையாகி வாழ்பவர்களை கேமிங் வியாதியால் பாதிக்கப்பட்டவராகச் சொல்லலாம். விபத்துக்கள், வன்முறைகள் அனைத்தையும் திரையில் பார்த்துப் பார்த்து மரத்துப்போன மனம் கொண்ட இவர்கள் நிஜ வாழ்க்கையில் அவைகளைப் பார்க்கும்போது உதவும் எண்ணம் கூட வராமல் மனம் இறுகிப்போய் நிற்கிறார்கள். உலகத்தோடு சேர்ந்து வாழத் தெரியாமல் தனிமை விரும்பிகளாக ஆகி விடுகிறார்கள்.

### எலெக்டிரானிக் திரை

எலெக்டிரானிக் திரைகளில் இருந்து வரும் நீலக்கலர் வெளிச்சம் கண்களைப் பாதிப்பதாக நிருபிக்கப்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனம் 2 வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு எலெக்டிரானிக் திரை தேவையில்லை என்றும், இரண்டிலிருந்து 4 வயது வரையிலும் ஒரு நாளைக்கு 1 மணி நேரம் மட்டுமே போதும் என்று சொல்லுகிறது. ஆனால் யாராலும் நடைமுறைப்படுத்த முடியவில்லை.

குழந்தைகள் அதிக நேரம் எலெக்டிரானிக் திரையைப் பார்க்கும்போது கீழே கொடுத்துள்ள கோளாறுகள் வந்து விடுகின்றன.

1. கண் இமைக்காமல் திரையைப் பார்க்கும்போது கருவிழி உலர்ந்து போய் கண் எரிச்சல், தலைவலி,கண் சோர்வு என உண்டாகின்றன.

2. வளரும் குழந்தைகள் அவ்வப்போது தூரத்தில் உள்ள பொருள்களையும் பார்த்து பழகும்போதுதான் கண்ணின் பாப்பா விரிந்து சுருங்கி பார்வைக்கோளாறுகள் வராமல் கண்ணின் வளர்ச்சி இருக்கும். திரையை அருகிலேயே வைத்துக்கொண்டு பழகும் குழந்தைக்கு சிறுவயதிலேயே கிட்டப்பார்வை வந்து விடுகிறது. எலெக்டிரானிக் திரை வந்தபின் கடந்த 30 ஆண்டுகளாக குழந்தைகளுக்கு அதிகமான அளவில் கிட்டப்பார்வை வருவதாக ஒரு ஆய்வறிக்கை கூறுகிறது.

3. எலெக்டிரானிக் திரையை இரவிலும் தொடர்ந்து பார்க்கும்போது அதிலிருந்து வரும் கதிர்களின் தாக்கத்தால் நம் உடலில் இயல்பிலேயே இருக்கும் இரவு பகல் மாற்றங்களை உணரும் சக்தி குறைந்து விடுகிறது. அதனால் தூக்கத்தைத் தூண்டும் ஹார்மோனும் நேரம் தெரியாமல் வேலை செய்ய, குழந்தைகளுக்கு ஆரோக்கியமான தூக்கம் இல்லை. டிஜிட்டல் யுக நன்மைகள்.

இந்த டிஜிட்டலிலேயே பிறந்து வளர்ந்து கொண்டிருக்கும் இன்றைய குழந்தைகளும் இளைஞர்களும் மிகவும் தன்னம்பிக்கையோடு இந்த உலகை எதிர்நோக்குகிறார்கள். அவர்களின் வாழ்க்கையின் ஒரு அங்கமாகவே இந்த டிஜிட்டல் உலகம் ஆகி விட்டது. பெற்றவர்களுக்கு தங்கள் குழந்தைகள் இந்த சாதனங்களையெல்லாம் கையாளும் விதத்தைப் பார்த்து மிகவும் பெருமிதம்!

காட்ஜெட்டுகளை உபயோகிக்கத் தெரியும் குழந்தைகளின் லாஜிக்கல் திறனும் படைப்பாற்றலும் திறம்பட இருப்பதாகச் சொல்லுகிறார்கள். மேலும் அவர்களுக்கு மற்றவர்களுடன் சேர்ந்து ஒத்துழைத்து எடுத்த காரியத்தை முடிக்கும் திறமை அதிகமாக இருக்கும். அதனால் புதுப்புது தளங்களில் தங்களின் திறமைகளினால் சாதிக்கிறார்கள்.

### குழந்தைகளுக்கு உண்டாகும் பிரச்சினைகள்

இணையத்தின் வழியாக வந்து கொட்டும் தகவல்களில் பெரும்பாலானவை குழந்தைநேயத் தன்மையற்றும், வயதுக்கு ஏற்ற தகவல்களாக இல்லாமலும் இருக்கின்றன. நல்லொழுக்கத்தைக் கற்க உதவுவதில்லை.

ஒரு சில இணையவழி செயலிகள் குழந்தைகளைக் கண்காணித்து வக்கிர எண்னங்களைச் செயலாக்கவும் உபயயோகப்படுத்தப்படுகின்றன. அனைத்து சாதனங்களின் மூலமும் குழந்தைகளைத் தொடர்ந்து கண்காணிக்கலாம் என்ற வசதி இருக்கும்போது அவர்களைப் பின் தொடர்ந்து வன்முறை, பலாத்காரம் என ஆபத்துக்கள் பல.

தொடர்ந்து எலெக்டிரானிக் சாதனங்களை உபயோகிக்கும் குழந்தைகளிடம், புரிந்து கொள்ளும் திறனும் அறிவு வளர்ச்சியும் குறைவாக இருப்பதாகக் கூறுகிறார்கள். காது கேட்கும் திறன் குறைந்து, நிறைய குழந்தைகள் தாமதமாகப் பேச ஆரம்பிக்கிறார்கள். எலெக்டிரானிக் காட்ஜெட்டுகள் வந்த பிறகு குழந்தைகளுக்கு, அழகிய கையெழுத்தும் வரவில்லை: கடிதம் எழுதும் பழக்கமும் வரவில்லை.

சில பெற்றோர்கள் எலெக்டிரானிக் சாதனங்களை குழந்தைகள் அடம் செய்யும்போது ஆறப்படுத்தும் சாதனமாகப் பயன்படுத்துகிறார்கள். இதனால் ஒரு பயனும் ஏற்படாமல் மேலும் அடம்தான் அதிகமாகிறது. உட்கார்ந்த இடத்திலேயே குழந்தையின் விளையாட்டுகள் எல்லாம் திரையிலேயே போவதால் உடல் பருமனும் வந்து விடுகிறது. தலைவலி, கழுத்து வலி, கூன் முதுகு என ஏற்பட்டு விடுகிறது.

### பெற்றோர்கள் என்ன செய்யலாம்?

அனைத்து வகையான எலெக்டிரானிக் சாதனங்களும் மனித மனத்திற்கு ஒருவகையான மகிழ்ச்சியை, கிளர்ச்சியை உண்டு பண்ணி போதை போன்ற உணர்வைத் தூண்டுவனதான். பெற்றோர்களின் அனுமதியோடு குழந்தைகளை

காட்ஜெட்டுகளுக்கு அனுமதிக்கும்போது வரும் பாதிப்புகளை ஓரளவு குறைக்கலாம். பெற்றோர்களின் அனுமதி தேவையில்லாமல் தொடர்ந்து உபயோகிக்கும்போதுதான் குழந்தைகள் தடம் மாறிவிடுகிறார்கள்.

எப்படி ஆன்லைனில் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று ஒவ்வொரு குழந்தைக்கும் வயதுக்கு ஏற்றவாறு பெற்றோர்கள் சொல்லிக் கொடுத்து, அவர்களின் செயல்பாடுகளை அவ்வப்போது கவனிக்கவும் வேண்டும்.

குழந்தைகளை சிறுவயதில் இருந்தே வெளியில் போய் விளையாட அனுமதிக்கும்போது அவர்களின் உடல் ஆரோக்கியம், பிறருடன் பழகும் திறன், நல்ல தூக்கம் முதலியன கிடைக்கின்றன. அவர்களும் திரையிலும் வீடியோ கேம்ஸிலும் பொழுதைக் கழிப்பதைக் குறைத்துக் கொள்வார்கள்.

**கண்களுக்குப் பாதுகாப்பு எப்படி?**

அறிவியல் முன்னேற்றத்தில் எலெக்டிரானிக் உபகரணங்களும் தொடு திரைகளும் இல்லாமல் இனி வாழ்க்கை இல்லை என்றாகி விட்டது. கூடியவரையிலும் அவைகளின் உபயோகத்தைக் குறைத்துக்கொண்டு வாழ்ந்தால் நல்லது. இதற்கு அமெரிக்க பிலடெல்ஃபியாவில் உள்ள குழந்தைகள் மருத்துவமனை என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்போம். அவர்கள் 20 நிமிடங்களுக்கு ஒருமுறை திரையைப் பார்ப்பதை நிறுத்திவிட்டு, 20 அடிகளுக்கு மேல் தூரமாக உள்ள ஒரு பொருளின் மீது ஒரு 20 செகண்டுகளுக்கு பார்வையைச் செலுத்து என்கிறார்கள். மேலும் அடிக்கடி கண்ணை இமைக்கச் செய்யுங்கள் என்கிறார்கள்.

அடுத்து குறைந்தது ஒரு ஐந்து வயதிலிருந்தாவது பாடப் புத்தகங்கள் இல்லாமல் மற்ற, குழந்தைகளுக்கான பொது அறிவு, கதைப்புத்தகங்கள் என படிக்கும் பழக்கத்தை உண்டுபண்ண வேண்டும். புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளும் குழந்தைக்கு நாளடைவில் ஸ்கிரீன் டைமும் குறைந்துவிடும்.

●

கட்டுரையாளர் குழந்தை மருத்துவ நிபுணர்

## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!



**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**செப்டம்பர் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6851, | 4060 | 7913 | 3068 | 3080 | 3059 | 2818 | 2435 | 3053 |
| 3054 | 4061 | 8956 | 3069 | 3081 | 3060 | 2425 | 6853 | 5459 |
| 5600 | 2426 | 8957 | 3071 | 3082 | 3061 | 2423 | 7970 | |
| 1902 | 2427 | 6852 | 3073 | 3083 | 3062 | 2429 | 890 | |
| 2424 | 1514 | 5682 | 3074 | 3084 | 3063 | 2430 | 3066 | |
| 2817 | 1515 | 2969 | 3075 | 3085 | 3076 | 2431 | 1508 | |
| 2968 | 1516 | 2793 | 3077 | 3056 | 3072 | 2432 | 5588 | |
| 889 | 1517 | 3065 | 3078 | 3058 | 3070 | 2433 | 2793 | |
| 4059 | 7912 | 3067 | 3079 | 3057 | 3064 | 2434 | 3055 | |

தனி இதழ் ₹ 45.00
ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00,
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00
*சந்தாத் தொகையை*
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch, Chennai - 600 050
A/c.No. 1035249018
IFSC Code : CBIN0282161
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஒசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் விரைவில் வெளிவரவுள்ள வெளியீடுகள்




## மார்க்ஸியக் கலைச்சொற்கள்

மார்க்ஸ் – எங்கெல்ஸ்

**- எஸ்.வி. ராஜதுரை -**

தமிழில் முதல் முயற்சியாக வெளிவரும் இந்த நூலில் மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் முக்கியக் கருத்தாக்கங்கள், அவர்களுடைய முக்கியமான நூல்கள் - குறிப்பாக தமிழில் இதுவரை மொழியாக்கம் செய்யப்படாமலோ அல்லது பெரிதும் அறியப்படாமலோ உள்ள அவர்களது இளமைக்கால, முதுமைக்காலப் படைப்புகள் - பற்றிய சுருக்கமான குறிப்புரைகள், அவர்களிருவருடன் தொடர்புகொண்டிருந்த முக்கிய நண்பர்கள், அரசியல் பகைவர்கள், நிகழ்வுகள், அமைப்புகள் பற்றிய விவரங்கள் ஆகியன எளிய தமிழ் நடையில் வழங்கப்படுகின்றன. மார்க்ஸியத்தை அறிந்துகொள்ள விரும்புபவர்கள், அதை ஏற்கெனவே ஓரளவு கற்றறிந்தவர்கள் ஆகிய இரு சாராருக்கும் பயன்படும் இது முக்கியத்துவம் வாய்ந்த கலைக்களஞ்சியம்.

## ஓ! கனடா!!

**(யாவரும் கேளிர்)**

பொ.முத்துக்குமரன்
ம.சாலமன் பெர்னாட்ஷா

விரல்விட்டு எண்ணிடக்கூடிய கனேடிய அரசியல் தலைவர்களின் முயற்சியினால் 1867இல் டொமினியர் ஆஃப் கனடா பிறந்தது. அப்பொழுது ஆண்டாரியோ, கொபெக், நோவாஸ்கோசா, நியூபிரன்ஸ்வெக் மட்டுமே இணைந்திருந்தன. பரிணாம வளர்ச்சியின் காரணமாக இன்றைக்கு கனடாவின் பரந்த எல்லைகள் என தெற்கே அமெரிக்க ஒன்றியமும், கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடலும், வடக்கே வடமுனையும், மேற்கே பசிபிக் பெருங்கடலும் அமெரிக்க ஒன்றியத்தின் அலாஸ்காவும் உள்ளன. இந்தப் பரிணாம வரலாற்றைத் தொடக்கம் முதல் இந்நூல் எடுத்துரைக்கிறது.






# சிலுவையாய் சுமக்கும் அனுபவங்கள்

சுப்ரபாரதிமணியன்

என் "சிலுவை" நாவல், என் நாவல்களின் பட்டியலில் இருபத்தைந்தாவது என்றும் புத்தகங்களின் எண்ணிக்கையில் நூறாவது என்றும் எதேச்சையாக அமைந்திருக்கிறது. பத்து ஆண்டுகளின் கனவுகளாக இருந்து இப்போது இந்த நாவல் வெளியாகி இருக்கிறது.

இன்று வெளியாகி இருக்கிற மற்ற நூல்கள் பல ஆய்வுகள், ஆராய்ச்சிகள் என்ற ரீதியில் அமைந்திருக்கின்றன. இந்த ஆய்வுகள் பொதுமக்களிடம் சென்று சேர வேண்டும் என்று ஸ்டாலின் குணசேகரன் அவர்களும் ஓடைத்துரையரசன் அவர்களும். சொன்னார்கள்.

பொதுவாக இத்தகைய ஆய்வுகள் கல்வித்துறை சார்ந்தவர்களுக்கும் மாணவர்களுக்கும் என்று இருப்பதாகும். இது பொது மக்களிடம் சென்று சேர வேண்டும் என்ற ஆசைப்படுவது வினோதமாகத் தான் இருக்கிறது. ஆனால் எல்லா படைப்புகளும் இதுபோல் பொதுமக்களிடம் சென்று அடைய வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசையாகக் கூட இருக்கிறது.

கிறிஸ்துவ பாதிரியாக இருந்த எபிரேம் என்ற முதியவரை பனிரெண்டு ஆண்டுகளுக்கு முன் சேவூர் புளியம்பட்டி சாலையில் உள்ள ஒரு தேவாலயத்தில் சந்தித்தேன். பைபிளில் வரும் பல நிகழ்ச்சிகள் அந்த தேவாலயத்தின் உள்ளேயிருந்த சுவர்களில் சித்திரங்களாக வரையப்பட்டும் தூண்களாக அமைக்கப்பட்டும் இருந்தன. அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போது அவர் அறிமுகமானார். அவர் ஒரு ஆய்வாளர் என்று சொல்லிக் கொண்டார். அவர் சோமனூர் என்ற பகுதியைச் சார்ந்தவர் என்ற வகையில் அவருடைய ஆய்வைப் பற்றி சொன்னார். நான் அவரின் சொந்த ஊரான சோமனூர் பக்கத்தில் உள்ள செகடந்தாளி என்ற கிராமத்தை சார்ந்தவன் என்ற வகையில் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு நானும் பேசினேன். அவர் ஆய்வாளர் என்ற வகையில் சோமனூர் பற்றி செய்திருக்கிற ஆய்வுகளையும் அவை கிறிஸ்துவ பத்திரிகைகளில் வந்திருப்பது பற்றியும் நிறைய சொன்னார். எனக்கு பெரிய நாவல்கள் எழுத வேண்டிய ஆசை இருந்தது. ஆனால் அதற்கான களம் என் மனதில் இல்லை. என் நாவல்கள் எல்லாம் 300 பக்கங்களுக்குள் அடங்கிப் போகும் அளவில் இருந்திருக்கின்றன. இந்த சூழலில் ஒரு பெரிய நாவலை சோமனூரைக் களனாகக் கொண்டு கடந்து போன 300 ஆண்டு சரித்திரத்தை எழுத வேண்டும் என்ற எண்ணம் வந்தது.

நான் வாழ்ந்த மக்கள், நிலம் பற்றி நான் அதிகம் எழுதவில்லை. என்னுடைய மூதாதையர்களின் தொழில் சார்ந்தும் என்னுடைய பரம்பரை சார்ந்தும் அவர்களுடைய வாழ்க்கை பற்றியும் நான் பெரிதாக எதுவும் எழுதவில்லை. எனவே சோமனூரைப் பற்றி

எழுதுவது என்பது என் மூதாதையர் நிலம் சார்ந்தும், என் மூதாதையர் தொழில் மற்றும் வாழ்க்கை முறை சார்ந்தும் நினைவுகளைப் பகிர்ந்து கொள்வது என்று பட்டது. அந்த கிறிஸ்துவ பாதிரியார் ஏறத்தாழ ஒரு முதுமை இல்லத்தில்தான் இருந்தார். அவரிடம் இருந்து சேகரித்துக்கொண்ட தகவல்கள் நாவல்கள் எழுத உதவின. பின்னால் அவர் வால்பாறைக்கு சென்று விட்டதாக சொன்னார்கள். ஆனால் எந்த தொடர்பும் இல்லாமல் தான் இருந்தேன். அவரைத் தேடிச் சென்ற ஒரு முறை அவர் இறந்து போய்விட்டார் என்று சொன்னார்கள். ஆனாலும் அவர் சொன்னபடி இந்த ஆய்வுகள் பொதுமக்களிடம் சென்று சேர வேண்டும் என்பதால் நான் அதை ஒரு நாவலாக்கும் பணியில் உட்படுத்திக் கொண்டு இந்த நாவலை எழுதினேன்.

இந்த நாவல் நீண்ட காலத்திற்குப் பிறகு இப்போது அச்சிலும் புத்தகமாகவும் வருவது எனக்கு ஆறுதலாக இருக்கிறது. நீண்ட நெடுங்காலமாக இதை எதிர்பார்த்து இருந்தேன். இடையில் வந்த கொரோனா காலம் இந்த தாமதத்தை அதிகப்படுத்தி விட்டது. அந்த வகையில் இந்த நாவல் என்னுடைய நூறாவது புத்தகமாகவும் அமைந்துவிட்டது.

கலாச்சார சரித்திரம் என்பது அரசியல் சரித்திரம் மற்றும் கடந்து போகும் ஆண்டுகளின் நிகழ்வுகளின் தொகுப்புகள் என்றபடி இருக்கும். இந்த கலாச்சார சரித்திர நிகழ்வுகளை ஒரு நாவலுக்குள் கொண்டு வருவது, அந்த மனிதர்கள் வாழ்க்கையை இதற்குள் வைத்துப் பார்ப்பது எனக்கு தேவையானதாக இருந்தது. சோமனூர் என்ற பகுதியில் திப்பு சுல்தான் போன்றவரின் வருகை கிறிஸ்தவர்களின் முக்கிய இடமாக இருந்த சத்தியமங்கலம், கொடிவேரி போன்று சோமனூர் விளங்கிய விதம், நெசவாளர் குடும்பங்களின் நிலை, பஞ்ச காலங்கள், மக்கள் கிறிஸ்துவத்திற்கு மாறிய வித்தைகள் என்று தொடர்ந்தது. என் நாவல் பின்னால் இரண்டாவது பாகமாக சோமனூர் மற்றும் கோவை பகுதிகளில் தொழிற்சங்க வரலாற்றுப் பதிவுகளாவும் மாறிவிட்டது. இன்னொரு பகுதியாக நான் அவர்களை திருப்பூருக்குக் கொண்டு போனேன்.

காரணம் 10 வயது வரை தான் அந்த செகடந்தாளி கிராமத்தில் நான் வசித்து வந்தேன். தண்ணீர் பிரச்சினை, மேல் சாதி ஆதிக்கவாதிகளின் வன்முறை காரணமாக திருப்பூருக்கு குடி பெயர்ந்த நெசவாளர் குடும்பங்களில் என் குடும்பமும் ஒன்றாகிவிட்டது. எனவே என் நாவலை அங்கு நகர்த்துவதும் தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபட்டு வந்த அந்த நெசவாளி குடும்பத்தைச் சார்ந்த ஒருவனின் பொதுவுடமை இயக்கம் சார்ந்த நடவடிக்கைகளும் தலைமறை வாழ்க்கையும் என்று தொடர்ந்தது. பின்னால் திருப்பூரில் பின்னலாடை வளர்ச்சியும் நவீன யுகத்தில் மற்றும் உலகமயமாக்கலில் தொழிலாளர்கள் நிலைமை என்று தொடர்ந்தது.

என் வாழ்க்கை அனுபவங்களையும் உள்வாங்கிக் கொண்டவற்றையும் சோமனூர், திருப்பூர், திருப்பத்தூர் என்று விரிவாக்கிக் கொண்டேன். நினைவுகளை, கலாச்சாரப் பதிவுகளை பகிர்ந்து கொள்கிற அனுபவத்தில் இந்த நாவலை வடிவமைத்தேன். எனது பல படைப்புகளுக்குள் அமைந்திருந்த பின்னல் தொழிலும் விசைத்தறித் தொழிலும் நெசவுத் தொழிலும் இயல்பாகவே சமீப காலம் வரை இந்த நாவலுக்குள்ளும் வந்துவிட்டன. நீண்ட கடல் பயணத்தில் அலைக்கழிக்கப்படுகிற படகு வாசிகள், படகுப் பயணவாதிகள் போல இருத்தலியல் சிக்கல்களும் வாழ்க்கை மீதான நம்பிக்கையும் மாறி மாறி செயல்பட என் கதாபாத்திரங்கள் அமைந்து விட்டார்கள். அந்த வகையில் நினைவுகளையும் சரித்திரம் சொல்லும் மக்களின் வாழ்க்கை அனுபவங்களையும் நினைவுகளாகப் பகிர்ந்து கொள்கிற வாய்ப்பும் இந்த நாவல் மூலம் ஏற்பட்டது.

இந்த நாவல் அனுபவங்கள் போல் பல அனுபவங்களும் வாழ்க்கையை கடந்து போகச் செய்திருந்தாலும் ஒரு பெரிய நாவலையே பதிப்பித்தலில் இருக்கும் சிரமங்களால் இன்னும் ஒரு பெரிய நாவலை எழுதுகிற ஆசையும் இப்போதைக்கு இல்லாமல் ஆக்கப்பட்டு இருக்கிறது. ஆனாலும் வாழ்க்கை பற்றி எழுதிக் கொண்டே இருக்கலாம். அதை அடுத்த தலைமுறைக்கு கடத்திக் கொண்டே இருக்கலாம். அது கலாச்சார இயல்புகளும் மொழியும் மாறிக்கொண்டிருக்கும் தன்மையில் அதைச் செய்து கொண்டே இருக்கலாம் என்றுதான் எனக்கு இந்த நாவல் வெளியீட்டில் தோன்றுகிறது.

300 ஆண்டுகளுக்கு மேலான கொங்குப் பகுதியின் சரித்திர, கலாச்சார வாழ்வைக் காட்டும் நாவல் இது. திப்பு சுல்தான் வருகை, கிறிஸ்தவர்களின் குடியேற்றம் தொடங்கி ஒரு கிறிஸ்துவக் குடும்பத்தின் நீண்ட வாழ்க்கை இதில் இடம் பெற்றிருக்கிறது.

சோமனூர் வாழ் நெசவாளர் வாழ்வியல், மில் தொழிற்சங்க இயக்கச் செயல்பாடுகள் என்று தொடங்கி நவீனப் பின்னலாடை தொழில் சார்ந்த வாழ்க்கை முறை என்று சமீப காலம் வரை நீள்கிறது.

அந்தக் கிறிஸ்தவ குடும்பத்தின் முழு உலகமும் தனித்து ஒரு தீவாய் தள்ளப்பட்டாலும் சமூக மனிதர்களின் தொடர்புடன் அடிவானத்தை நோக்கிப் பயணப்படுகிற கப்பலைப் போல் ஆழ்கடல் நடுவில் கரை எதுவும் காணாதபடி இருத்தலியல் சிக்கல்களுடன் சென்று கொங்கு பகுதி மக்களின் வாழ்க்கையின் உண்மைத் தன்மையையும் மதிப்பீடுகளையும் சொல்கிறது இந்த நாவல். நாவலை வெளியிட்ட நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்திற்கு நன்றி.

*ஈரோடு புத்தகக் கண்காட்சியில் நடைபெற்ற நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் 25 நூல்கள் வெளியீட்டு விழாவில் நிகழ்த்திய உரை.*

●



# இசையாகும் தமிழும் தமிழாகும் இசையும்

**நிழல் ப.திருநாவுக்கரசுவின் "திரை இசையும் தமிழிசையும்"**

**ஜமாலன்**

இசை மனிதனின் ஒழுங்குபடுத்தப்பட்ட ஓசையான மொழியறியா ஒரு தளத்தில் உடலை, மனதை ஒழுங்கமைப்பது. மந்திரங்களே இசையின் ஆரம்பமாக இருந்திருக்கலாம். காரணம் மந்திரம் மனித உடலை சடங்குவயப் படுத்தும் ஓர் ஓசைத் தொகுப்பு. மந்திரங்கள் ஒரே ஓசையை திரும்பத் திரும்ப உச்சரிப்பதன் வழியாக எழுப்பப்படும் ஓசை மனித உடலை ஒரு குறிப்பிட்ட லயத்திற்கு வயப்படுத்திவிடுகிறது. அதாவது ஒரு உடலை ஓசைகளின் அடிப்படையில் ஒரு ஒழுங்கைமைப்பிற்குள், ஒரு சூழலுக்குள் தகவமைப்பது. காரணம், ஓசைக்கும் மூளைக்கும் உள்ள உறவே தவிர, அந்த ஓசைக்குள் எந்த மாயமும், இறைசார் அருளும் இல்லை. அடிப்படையில் மனித மூளையுடன் உறவு கொள்ளக்கூடிய ஒலியானது, ஓசையாக பதிவுறுகிறது. இவ்வோசைக்கு மனித மூளை எதிர்வினையாற்றுவதே உடல் மொழியாகிறது. அதாவது ஒரு ஒலி, மூளையில் ஓசையாகப் பதிவுற்று அதனால் மூளை உடலின் இயக்கத்திற்கான கட்டளைகளை

கற்பிக்கிறது. இவ்வோசை அடிப்படையில் ஒரு இயக்க ஆற்றலாக மாற்றம் பெறுகிறது. இந்த ஆற்றலை உள்வாங்கும் மூளையானது, அதற்கான அதிர்வுகளால் தூண்டப்பட்டு அதற்கேற்ப உடல் மொழியாக வெளிப்படுகிறது. ஒரு இடிச்சத்தம் உடல் அதிர்வையும் அதனால் அச்சத்தையும், ஒரு குயிலின் சத்தம் உடலின் இசைவுத் தன்மையையும் அதனால் இனிமையான உணர்வையும் பரப்புவதாக அமைகிறது. இடியை ஓசையாகவும், குயிலோசையை இசையாகவும் மூளை ஒழுங்குபடுத்திக் கொள்கிறது. அதனால்தான் அனைத்து ஒலிகளையும் ஓசைகளாகவும், இசையாகவும், மொழியாகவும் பாகுபடுத்திக் கொள்வதாக மனிதமூளை வடிவமைகிறது. மனிதமூளையின் பரிணாம வளர்ச்சியில் ஓசைகளின் பங்கு மிக முக்கியமானது. பாவ்லோவின் மறிவினைச் சோதனைகளில் மணி ஒலித்ததும் நாயின் வாயில் பசியால் உமிழ்நீர் சுரப்பதை, பள்ளிநிலை அறிவியலில் படித்திருப்போம். ஓசைகள் உடலியங்கியலுடன் உறவுபடுத்தப்படுவதன் வழியாக, அவை தொடர் பழக்கத்தில் இச்சை செயல்கள், அனிச்சை செயல்களாக மாறுகின்றன. இசையின் அறிவியலும் இதைதான் செய்கிறது. உடலின் ஒவ்வொரு செயலும் இத்தகைய பழக்கத்தின் வழி உருவாகி தன்னிச்சையாக மாறியதே.

ஆகையினால், ஒலி, ஓசை, மொழி என்ற மூன்றையும் பிரித்தறியும் புள்ளிகள் முக்கியமானவை. ஒலி இயற்கையானது. அதனை ஓசையாக உள்வாங்குவது மனித மூளை. அந்த ஓசையை ஒழுங்குபடுத்த முனையும் மனித மூளை, அதனை சொற்களாக மாற்றும் போது மொழியாகிறது. வெறும் ஓசைகளின் இசைவு ஒழுங்காக மாறும்போது இசையாகிறது. 'இசை' என்ற சொல்லே தமிழின் அழகியலை, அறிவியலை வெளிப்படுத்தும் ஒரு சொல். மனித மூளைக்கும், உடலுக்கும் இசைந்த ஒரு ஓசைத் தொகுப்பே இசை எனக் குறிக்கப்படுகிறது. இசை மனித உடலை இயைபு, இசைவுபடுத்தும் தன்மை கொண்டது. ஓசைகளின் தொகுப்பை பெயர்களாக மாற்றி, அவற்றை பொருள்கொள்ளும் ஒன்றே மொழி. இசை ஒரு பொருளற்ற நிலைக்கு மனித உடலை இசைவு படுத்துகிறது. இரண்டுமே ஓசைகளை அடிப்படையாகக் கொண்டவைதான். மொழி ஓசையின் பொருளாக்கம் என்றால், இசை ஓசையின் இசைவாக்கம் அதாவது, பொருளின்மை அல்லது மௌனத்தின் அதிர்வுகள் என்று கூறலாம். அவ்வகையில் இசை ஓசையின் முதல்நிலை *(first order)* ஒழுங்கமைத்தலாகவும், மொழி ஓசையின் இரண்டாம்நிலை *(second order)* ஒழுங்கமைத்தலாகவும் உள்ளது. ஆதி மனிதர்கள் ஓசைகளை இசை வடிவங்களாக மாற்றினார்கள். இசை இயற்கை நிலையான ஆதிநிலைக்கு மனித உடலை இயைபுபடுத்தும் தன்மை கொண்டிருப்பதால்தான், மொழியற்ற ஆதி மனிதக்குலம்கூட இசையற்று இருப்பதில்லை. இசை நம்மை ஒரு இனிய உலகிற்கு எடுத்துச் செல்வது என்பதன் அறிவியல் அதன் இயற்கை சார்ந்த ஆதிநிலையான மொழியற்ற நிலைக்கு ஒரு உடலை எடுத்துச் செல்வதே. பின்நவீன மொழியில் சொன்னால் பழமையேக்கம் *(nostalgia)* என்பதே அதன் அடிப்படை. அல்லது ஆதிநிலை ஏக்கம் என்றும் கூறலாம். இந்த விரிவான விளக்கம் இசை என்பது என்ன என்பதை கோட்பாட்டு அடிப்படையில் புரிந்துகொள்ளவே.

“மொழி உருவாகாத காலகட்டம்; மலைகளிலும், காடுகளிலும் உணவுதேடி வேட்டைச் சமூகமாக வாழ்ந்த காலத்தில், அவனைச் சுற்றி இருந்த மலைகளிலிருந்து ஆறு சலசலத்து ஓடுவதையும், அருவி பேரோசையுடன் விழுவதையும், காற்றின் ஓசைகளையும், விலங்குகளின் முழக்கங்களை, பறவைகளின் இனிய ஒலிகளையும் உன்னிப்பாகக் கேட்கப் பழகி இருந்தான். இயற்கையோடு இயைந்து வாழக் கற்றுக் கொண்டிருந்தான். ஓசை-ஒலி இரண்டிற்குமான வேறுபாடுகளை புரிந்து கொண்டிருந்தான்” என்று தனது “திரை இசையில் தமிழிசை” நூலைத் துவக்குகிறார் நிழல் ப. திருநாவுக்கரசு. இசையின் தோற்றம் முக்கியத்துவம் குறித்து துவங்கும் இந்நூல் தமிழ்த் திரை இசை குறித்து ஒரு கலைக்களஞ்சியமாக வெளிவந்துள்ளது. 1000 தமிழ்த் திரைப்படங்களில் இருந்து 3000 பாடல்களின் இசையமைப்பை ஆராய்ந்து அவற்றின் 212 இராகங்களைக் கண்டுபிடித்து தொகுத்துள்ளார். இத்துடன் நின்றிருந்தால் வெறும் விபரக் குறிப்புகளாக அல்லது தரவுகளாக மட்டுமே கொண்டதாக இருந்திருக்கும். ஆனால், இத்துடன் தமிழ் இசை வரலாற்றை சுமார் 200 பக்கங்களில் விவரிக்கிறார்.

இந்நூலை மூன்று பகுதிகளாக பிரித்திருந்திருக்கலாம். ஆனால், பகுதிகளாக இல்லாவிட்டாலும், உள்ளடக்கம் அதன் அமைப்பில் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. முதல் பகுதி தமிழிசை வரலாறு, வரையறை, விளக்கம் என்பதாக உள்ளது. அதில் தமிழரின் தொல் இசை துவங்கி, திணை இசை, அதற்கான பறை, யாழ், பண் என்ற அட்டவணை, தமிழர்களின் இசைக்கருவிகள், தமிழிசைத் தோற்றம், இசை பிறக்கும் இடங்கள் என பண் மற்றும் அதன் பிரிவுகள், பாலைகள், ஏழிசையின் பிறப்பு, 'பஞ்ச மரபு' என்ற பழந்தமிழ் இசைநூல் முன்வைக்கும் 10 இசை அறிதல்கள் பரிபாடலின் இசையமைப்பும் வரலாறும் எனத் தொடர்ந்து விவரிக்கிறார். இதில் ஒரு முக்கியமான அட்டவணையை முன்வைக்கிறார். அதில் சங்கப்பாடல்களில் பண்கள்


அதைப் பாடிய புலவர்கள், இசையமைத்தவர்கள் என்ற ஒரு வரிசை நிரல் தரப்பட்டுள்ளது. சங்ககாலத்திலேயே இசையமைத்துப் பாடும் முறை பற்றிய தகவல் ஆச்சர்யம் தரும் ஒன்று. அதன்பின் தமிழர்கள் கண்ட இசைக்கருவிகள் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. அவற்றை நான்காக வகைப்படுத்தியுள்ளார். 1.தோல் கருவிகள் 2.துளைக்கருவிகள் 3.நரம்புக் கருவிகள் 4.கஞ்சக் கருவிகள் (உலோகம்) என்று. பறை, துடி, கஞ்சிரா, உடுக்கு, இடக்கா, திமிலா, குடமுழா (தமிழகத்தில் மட்டுமே காணப்படும் வாத்தியம் என்கிறார்), சிறுபறை, முரசு, கிரிகட்டி, குந்தளம், தவில், செண்டை, கட சிங்காரி, டக்கி, டக்கா, நாகசுரம், மகுடி, சங்கு, யாழ் (பல்வேறு யாழ் வகைகள்), வீணை (வகைகள் துந்தனா, தம்புரா, சுரமண்டலி), குழித்தாளம், கைத்தாளம், சலங்கை, சேகண்டி, திருச்சின்னம், கொம்பு என படங்களுடன் இவ்வாத்தியங்களின் பாகங்கள், பயன்பாடு ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

அதன்பின் தமிழிசைக் கலைஞர்கள் என பாணர்கள், பாடினிகள், நாகசுரக்காரர்கள், ஓதுவார்கள், தேவரடியார், நட்டுவனார்கள் ஆகியோர் பற்றிய குறிப்புகள் தரப்பட்டுள்ளன. அத்துடன் தமிழிசை குறித்த கல்வெட்டு ஆதாரங்கள், தமிழிசை குறித்த நூல்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. காலந்தோறும் தமிழிசை மாற்றங்கள் பரிபாடல் துவங்கி பாரதிதாசன் காலம்வரை தொகுக்கப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம், தேவாரம், பிரபந்தங்கள், பிற்கால பக்தி இயக்கவாதியான அருணகிரிநாதர், சித்தர்கள், சிற்றிலக்கியப் பண்கள் என ஒரு நீண்ட வரலாறு இசை வரலாற்றுக்குத் தேவையான வகையில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது. தமிழிசை முன்னோடிகள் முத்துத்தாண்டவர் துவங்கி ராமலிங்க வள்ளலார், பாரதியார் வரை ஒரு நீண்ட பட்டியலை அவர்களது பங்களிப்புடன் விளக்கிச் செல்கிறார். அதன்பின் தமிழிசை கிரேக்கம், அரேபியா, யவன தேசங்களில் பரவியதைப் பற்றிய குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

இரண்டாவது பகுதி திரையிசை பற்றியது. இது தமிழ்த் திரையிசை முன்னோடிகள், நாட்டுப்புறப் பாடல்கள், தமிழ் இலக்கியம் சார்ந்த பாடல்கள் என திரையிசைப் பாடல்களின் பல்வேறு வகைகளைப் பற்றி விரிவாகப் பேசுகிறது. நாடகத்திலிருந்து வந்த பாடல்கள், திரை இசைமேதைகள், திரைஇசைப் பாடகர்கள், திரை இசைக் கவிஞர்கள் என சுமார் 130 பக்கங்கள் குறிப்புகளுடன் ஆய்வுச் செய்திகள் என விரிவாகத் தரப்பட்டுள்ளது. பல அரிய புகைப்படங்கள், தமிழ்த் திரையிசையில் பல அறியாத நிகழ்வுகள், வரலாற்றுக் குறிப்புகள், வாழ்க்கைக் குறிப்புகள் துல்லியமாக நுண்மான் நுழைபுலத்துடன் இந்த ஆய்வுப் பகுதி அமைந்துள்ளது. தமிழ்த்திரை இசை வரலாற்றை யாரும் இத்தனை குறிப்புகளுடன் விரிவாக எழுதியதாக இதுவரை தெரியவில்லை. கானா பாடல்கள் துவங்கி கருநாடக இசை விற்பன்னர்கள் வரை இதில் தொகுக்கப்பட்டுள்ளனர். திரையிசையில் பாடல்கள் எப்படி எழுதப்படுகிறது என்கிற குறிப்பும் இதில் உள்ளது. ‘தொல் தமிழனின் இசை’ அறிமுகம் துவங்கி ‘திரையிசைப் பாடகர்கள்’ என 34 அத்தியாயங்களில் விரிவாக தகுந்த ஆதாரங்களுடன், உரிய அரிய படங்களுடன் விளக்கி உள்ளார். மூன்றாவது பகுதி ‘திரையிசையில் தமிழிசை’. இது முழுக்க 212 இராகங்கள் அதை ஒட்டிய பாடல்களின் குறிப்புகள் என நீள்கிறது.

தமிழிசை குறித்த ஆய்விற்கான அடிப்படைத் தரவுகள், விபரங்களுடன் ஒரு ஆவணமாக விளக்கப்பட்டுள்ளன. இந்நூலை பக்கத்திற்கு பக்கம் உரிய படங்களுடன் அழகுற உருவாக்கியுள்ளனர். தமிழர்களின் இசை, இசைக்கருவிகள், தமிழிசையின் தோற்றம், தமிழன் கண்ட இசைக்கருவிகள் உரிய படங்களுடன், முதல் ஏழிசைகள் என “தமிழிசையின் சிறப்பே ‘பண்’கள்தான்” என்பதை சுருக்கமாக அறிமுகப்படுத்துகிறார். பண்கள் என்றால் என்ன? பண்ணின் பிரிவு, பாலைகள், பண்ணு பெயர்த்தல், ஏழிசைகளின் பிறப்பு, ஏழிசைகள் என்று இன்று வடமொழி சாஸ்திரிய சங்கீதத்தில் கூறப்படும் ஏழு இராகங்கள் தமிழின் பண்டைய காலங்களில் எப்படி தோற்றம் கொண்டது, தமிழ் ஓசைகளுடன் அவற்றிற்கு உள்ள தொடர்பு ஆகியவை பேசப்பட்டுள்ளன. கருணாமிருத சாகரம் நூல் எழுதிய ஆப்ரகாம் பண்டிதரின் ஆய்வுகள் வழி எப்படி இத்தமிழிசை நிறுவப்பட்டுள்ளது என்பதை “வட்டப்பாலை” எனப்படும் தமிழ் இசை எப்படி வானவியலோடு தொடர்பு கொண்டது, அதை எப்படி பண்ணு பிரிக்கமுடியும் என்பதையும் வரைபடத்துடன் விவரித்துள்ளார்.

தமிழின் முதல் இசை நூலான சங்ககால “பஞ்ச மரபு” கூறும் 103 பண்கள், பண்களின் பெயர்கள் ஆகியவற்றை பட்டியலிட்டுள்ளார். இப்பெயர்கள் மலர்கள், நிலம், தெய்வம், மன்னர், வினை, சிறுபொழுது ஆகியவற்றை கொண்டு அழைக்கப்பட்டதை கூறுகிறார். மனிதர்கள் ஒன்றை புதிதாக எதிர்கொள்ளும்போது அதனை தனக்கு பரிச்சயமான ஒன்றுடன் ஒப்பிட்டு அதற்கு ஒரு பெயரை சூட்டுவார்கள். அந்த ஒப்பிடல் என்பது நான்குவகையாக அமைகிறது என்கிறார் பிரஞ்சு சிந்தனையாளர் மிஷல் பூஃக்கோ. மனிதர்களின் அறிவுத் தோற்றம் குறித்த இக்கருத்துடன் ஒப்பிடுவதற்கான சங்ககாலத் தமிழ் அறிவுத் தோற்றத்திற்கான சான்றாக இது அமைந்திருப்பதை அறியமுடிகிறது.




திரை இசையில் தமிழிசை (இசை-வரலாறு-ஆய்வு)
நிழல் ப.திருநாவுக்கரசு / பக்கம்: 414 / விலை: ரூ.500
வெளியீடு: நிழல் பதிப்பகம் / ஆண்டு: 2022

சாஸ்திரிய சங்கீதம் எனப்படும் இராகங்கள் அடிப்படையிலான சங்கீதம் உயர் வகுப்பினருக்கானதாக, மேட்டிமைவாதிகளுக்கானதாக கருதப்பட்டது. ஆனால், அது தமிழிசையின் அடிப்படையில் உருவமைக்கப்பட்டது என்பதாக, இந்நூலின் தமிழிசை வரலாற்றைப் படிக்கும்போது உணர முடிகிறது. தமிழியம் சார்ந்த கோட்பாட்டாக்கத்திற்கு இசைத்தமிழ் சார்ந்த வரலாற்றிற்கு இந்நூல் பல திறப்புகளைத் தருவதாக அமைந்துள்ளது. தமிழிசை என்பது வடமொழி சாஸ்திரிய உயர்சாதி இசைக்கு எதிராக மக்கள் இசையாக மாறியது திரையிசையில்தான் என்பதை இந்நூலில் சுட்டிக்காட்டப்பட்ட பல இராகங்கள், பண்கள் வழி அறிய முடிகிறது. நாம் ‘டப்பாங்குத்து’ என்று கீழமைப் பண்பாடாக ஒதுக்கிய பல பாடல்களின் இராகங்கள் இதில் பட்டியலிடப்பட்டுள்ளது. உண்மையில் தமிழிசை தழைத்தோங்கியது திரையிசை வழியில்தான் என்பதை நுட்பமாகவும், ஆதாரத்துடனும் முன்வைக்கிறது இந்நூல்.

சங்க காலத்திலேயே இன்றைக்கான திரையிசை இலக்கணங்களை எழுதியிருப்பதை சுட்டிக்காட்டுகிறார் ஆசிரியர். “ஒரு பாடலை இசையமைப்பாளன் இசை அமைப்பதற்கு முன், அது என்ன வகையான “பா” என்பதை அறிய வேண்டும்; அதிலுள்ள சொற்களின் புணர்ப்பை அறிய வேண்டும்; பாடலின் பொருளை உணர வேண்டும். அப்போதுதான் அதற்கொப்ப இசையமைக்க முடியும். இதுபோல அந்தப்பாடல் என்ன காலத்தில் / நேரத்தில் பாடப்படுகிறது என்பதை அறிந்து, அதற்கு ஏற்றாற்போல ராகங்களை தேர்வு செய்யலாம். அந்தப்பாடலை பாடப்போகிறவனுடைய இயல்பை அறிந்திருத்தல்; அந்தப்பாடலுக்கான நிலையும், தாளத்தையும் தேர்வு செய்வது, அதன் பிறகு பாடலுக்கேற்ற பண் - ராகம் நிறம் போன்றவற்றை தேர்வு செய்ய வேண்டும் என்கிறது பஞ்சமரபு.” என்று சங்ககாலத்தில் அறிவனார் என்பவரால் எழுதப்பட்ட தமிழ் இசைநூலில் இருந்து எடுத்துக் காட்டுகிறார். இது தற்போது திரையிசையை அமைப்பதற்கான இலக்கணத்தை அப்படியே அடிபிறழாமல் சொல்வதைக் காணலாம்.

தமிழ் மக்களின் காதுகளை, கேட்புத்திறனை இசைவுபட தகவமைத்ததில் திரையிசைக்கு பெரும் பங்கு உண்டு. திரையிசை தமிழ் மக்களின் வாழ்வில் பல விழாக் கொண்டாட்டங்களை, மன உணர்வுகளை, சிறப்பான தருணங்களை, காதலை, காமத்தை, பாசத்தை, அன்பை, தாய்மையை, சகோதரத்துவத்தை, நட்பை பகிர்ந்துகொண்டுள்ளதை யாரும் மறுக்க முடியாது. ஒருகாலத்தில் திரையிசை என்பது உயர்சாதிகளால், மேட்டிமையினரால் ஒதுக்கப்பட்டது. ஆனால், தமிழில் ஒரு தலைமுறையினரின் சுகதுக்கங்களை பகிர்ந்துகொண்டது திரையிசையே. பல ஹாலிவுட் ஆங்கிலப்பட இயக்குநர்கள், இந்திய ஒன்றிய சினிமாவின் திரையிசைப் பாடல்கள் குறித்து யதார்த்தமற்றது என்ற விமர்சனங்களை வைத்துள்ளார்கள். ஆனால் இந்திய ஒன்றிய சினிமாக்கள் தோன்றிய புராண, இதிகாச, பழங்கதைகள், நாட்டார் கதைகள் நாடகங்களை அடியொற்றி வந்ததால், இந்திய ஒன்றிய திரை யதார்த்தம் என்பதுடன் பாடல்கள் பிரிக்க முடியாததாக அமைந்துவிட்டது.

ஆனாலும், பாடல்கள் பெரும்பாலும், திரைக்கதையில் ஒரு அதிர்வை, ஒரு பெரிய மாற்றத்தை, கால உறைவை (time freeze) ஏற்படுத்தவே பயன்படுத்தப் படுவதை நுட்பமான சினிமா திறனாய்வில் உணரலாம். சான்றாக, ஒரு பாடல் முடிந்தவுடன் திரைக்கதையில் ஒரு அதிர்ச்சி, ஒரு முடிச்சு, ஒரு திறப்பு, ஒரு கதை மாற்றம், ஒரு கால மாற்றம் நிகழ்வதைக் காணமுடியும். இரண்டு காட்சிகளுக்கு இடையில் உள்ள அந்த பெரும் மாற்றத்தை அடுத்தடுத்து காட்சியாக வைத்தால் பார்வையாளர்கள் ஏற்பது கடினம் என்பதால், ஒரு கால, இட, நிகழ்வு உறைவை உருவாக்கக் கூடியதாக

இருக்கிறது. பார்வையாளர்களின் உணர்வு மாற்றத்தை, ஒரு உணர்ச்சி நிலையை (mood) உருவாக்கவும் திரையிசைப் பாடல்கள் முக்கியமானவை. இப்பாடல்களின் இராகங்கள் உருவாக்கும் உணர்வு நிலையை அறிய, இத்தொகுப்பில் உள்ள பாடல்களின் பட்டியல் முக்கியமானது. இது சினிமா இசையமைப்பாளர்களுக்கும், துறை சார்ந்தவர்களுக்கும் மட்டுமின்றி பொது வாசகர்களுக்கும் இராகத்தை அறிந்து கொள்வதற்கான ஒரு கையேடாக உருவாக்கப் பட்டுள்ளது.

முன்னுரையில் ஆசிரியர் ப. திருநாவுக்கரசு கூறுகிறார், "திரைப்படப் பாடல்கள் மூலம் ராகங்களை எளிமையான முறையில் எப்படி அறிந்து கொள்வது என்ற பயிற்சியையும் மேற்கொள்வதற்கான வழியையும் சொல்லி இருக்கிறேன்" என்று. அப்படி பயிற்சி எடுப்பது எப்படி என்ற வழிமுறையையும் ஓரிடத்தில் விளக்கியுள்ளார். அவர் தொகுத்துள்ள 3000 தமிழ் பாடல்களில் ஒவ்வொன்றையும் எப்படி கேட்டு இராகங்களை கண்டுபிடிப்பது என்பதையும் கூறியுள்ளார்.

தமிழிசை குறித்த சங்ககாலம் துவங்கி இன்றுவரை இதுவரை வந்துள்ள பல ஆய்வறிஞர்களை வாசித்து தனது ஆய்விற்கு ஏற்ப அவற்றைப் பயன்படுத்தி திரையிசையில் தமிழிசை எப்படி பயின்று வந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். சில இடங்களில் இராகங்களின் தமிழ்ப் பண் பெயர்களையும், கருநாடக இராகங்களுக்கு சமமான பெயர்களையும் தந்துள்ளதால், ஒரேநேரத்தில் இரண்டு துறைகளிலும் அறிவதற்கான ஒரு வழிகாட்டுதலைத் தருவதாக அமைத்துள்ளார். "திரையிசையில் தமிழிசை" என்ற பகுதியில் 212 இராகங்களின் தலைப்பில் 3000 பாடல்களைப் பட்டியலிட்டுள்ளார். பாடியவர்கள், படம், ஆண்டு, இசையமைப்பாளர் விபரங்களுடன் ஒவ்வொரு இராகத்திற்கும் ஒரு சிறிய முன்னுரையையும் புகழ்பெற்ற பாடலின் திரைக்காட்சிப் படத்துடன் வெளியிட்டுள்ளார். அத்துடன் அதன் சரளிவரிசை எனப்படும் ஆரோசை மற்றும் அமரோசை (ஆரோகணம், அவரோகணம் என்பார்கள் கருநாடக சங்கீதத்தில்) ஆகியவற்றையும் தந்துள்ளார். அதோடுகூட அந்த இராகம் தமிழில் முதலில் பயன்படுத்திய இலக்கிய வகைகள் (சான்றாக தேவாரம், பரிபாடல், திருவாசகம், பிரபந்தம், நாட்டார், சித்தர் போன்றவை) குறித்த குறிப்பும், அதில் அமைந்த கீர்த்தனைகள் குறித்தும் குறிப்பிட்டுள்ளார்.

அணிந்துரையில் அமெரிக்க மிச்சிகன் பல்கலையில் சினிமா ஆய்வுத்துறையின் பேராசிரியராக உள்ள சொர்ணவேல் அவர்கள் கூறுகிறார், "சினிமாவில் சங்க இலக்கிய அழகியலின் தாக்கம் போன்ற இலக்கியத்தைக்



கொண்டு அல்லது அதன் நீட்சியாக சினிமாவை வாசிப்பதைப்போல சினிமாவின் தனித்துவத்தை கருத்தில்கொண்டு அதன் மொழியுடன் இணைத்தே இலக்கியத்தை வாசிக்கக்கூடிய பிலிம் ஸ்டடீஸ் சார்ந்த பல்கலைச்சூழல் சமீப ஆண்டுகளில்தான் கைகூடி-யிருக்கிறது. அத்தகைய ஆய்வுகளுக்கு இன்றியமையாதது இத்தகையதொரு என்சைக்ளோபீடியா கலைக்களஞ்சியம். பல்கலைக்கழகங்கள் மற்றும் இசைக்கல்லூரிகள் செய்யவேண்டிய, காலத்தையும் காசையும் உடலுழைப்பையும் கோரும் இத்தகைய அறிவுத்தொகுப்பை, நமக்கு அளித்துள்ள நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் என்றும் என் நன்றிக்கு உரித்தானவர்" என்று. 414 பக்கங்கள் கொண்ட பள்ளிப் பாடநூல் சைஸில் அமைந்துள்ள இந்நூலை வாசித்தபோது, நண்பர் சொர்ணவேல் கூறியது எத்தனை உண்மையான சொற்கள் என்பதை உணர முடிந்தது. ஒரு பல்கலைக்கழகப் பணியை 30 ஆண்டுகள் உழைத்து சேகரித்து இதனை ஒரு தனிமனிதராகச் சாத்தியப்படுத்தியுள்ளார் நண்பர் திருநாவுக்கரசு. ஆச்சர்யமாக உள்ளது. 1000 படங்களில் இருந்து 3000 பாடல்களை அவரே கூறுவதைப்போல ஒன்றுக்கு நூறுமுறைக் கேட்டு அதன் இராகத்தை எட்டிப்பிடித்து அதன் விபரங்களைத் தொகுத்து எழுதுவதற்கான நேரம், உழைப்பு, செலவு என்பது அசாத்தியமானது. அவரது 40 ஆண்டுகால கனவாக இந்நூலை உருவாக்கியுள்ளார் என்றே தோன்றுகிறது.

அவரது 40 ஆண்டுகால சினிமா சார்ந்த ஈடுபாடுகள் (குடந்தைக் கல்லூரியில் அவர் படித்த காலங்களில் எங்கள் அனைவருக்கும் சினிமாக் கனவுகள் இருந்தது. ஆனால், அவர் மட்டுமே அதை தொடர்ந்து வந்துள்ளார்), தமிழில் தொடர்ந்து வரும் சீரிய சினிமா

குறித்த இதழான நிழல் ஆசிரியராக இருந்துவரும் அனுபவங்கள், சினிமா குறித்து அவர் எழுதிய நூல்கள், குறிப்பாக இசைத்துறைச் சார்ந்த விற்பன்னர்கள், தமிழிசை உருவாக்கிய ஆசான்கள் குறித்து வாழ்க்கை வரலாற்று நூல் எழுதிய அனுபவங்கள், குறும்பட, ஆவணப்படப் பயிற்சிப் பட்டறைகள், சினிமா குறித்த பல பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் சிறப்பு வகுப்புகள் எடுத்த அனுபவம் ஆகியவற்றுடன் திரைப்படக் கல்லூரி ஒன்றை தன்னந்தனியராக நடத்தி வரும் அனுபவங்கள், மாணவர்களுக்கு தரும் பயிற்சிகள் ஆகியவை தந்த அனுபவம் மற்றும் அறிவுடன் இந்த நூல் எழுதப்பட்டுள்ளதே இதன் சிறப்பு. இவை எல்லாவற்றையும்விட அவரது இளமைக்கால திராவிட இயக்க, இடதுசாரி இயக்க அனுபவங்களின் அரசியல் மற்றும் தமிழ் மீது அவரது ஆர்வம், தமிழ் இலக்கியங்களை படித்து, அதன் வரலாற்றை அறிந்து தமிழ் அறிவின் கூர்மை ஆகியவற்றை பறை சாற்றுவதாக அமைந்துள்ளது இந்நூல்.

தமிழிசை பற்றியும், திரை இசை பற்றியும் அவரது ஆழங்கால் பட்ட அறிவை இந்நூலை வாசிக்கும்போது உணர முடிகிறது. ''நூல் முழுவதுமே 'ரசனை முறை'யை தவிர்த்துவிட்டு வரலாற்று நோக்கு ஒன்றையே முதன்மையாக கொள்ளப்பட்டிருக்கிறது'' என்று தனது முன்னுரையில் கூறியுள்ளதை கவனம் பிசகாமல் பின்பற்றியுள்ளார். திரையிசை குறித்து வெளிவந்துள்ள தமிழ் நூல்கள் பெரும்பாலும் ரசனை சார்ந்ததாகவே அமைந்துள்ளது. விதந்தோதுதல் அல்லது விமர்சித்து ஒதுக்குதல் என்பதாகவே அமைந்திருக்கும். மாறாக, இந்நூல் திரை இசையின் வரலாற்றுடன், தமிழிசையின் வரலாற்றையும் வளர்ச்சியையும் ஒருசேரப் பேசுகிறது. வழக்கமாக ஒரு சிறந்த பாடலை எடுத்துக் கொண்டு அதன் இசைநயம், அதன் கருத்து, காட்சியமைப்பு, கவித்துவ செறிவு எனப் பேசும் வழக்கமான ரசனைவாதத் திறனாய்வை தவிர்த்துவிட்டு, அப்பாடலின் இராகம், அந்த இராகத்தைக் கண்டுபிடிக்கும் பயிற்சிமுறை என்பதை விளக்கிச் செல்கிறது இந்நூல்.

கருநாடக இசை என்று இன்று பேசப்படும் ஏழிசை இராகங்கள் எப்படி தமிழ்ப் பண்களிலிருந்து பெறப்பட்டு வளர்ந்து, பிற்காலத்தில் கருநாடக இசை உயர்ந்தது என்று தமிழிசை புறந்தள்ளப்பட்டது என்பதை நுட்பமாக வாசிப்பில் உணரும் வண்ணம் வரலாற்று உணர்வுடன் எழுதப்பட்டுள்ளதே இந்நூலின் சிறப்பு. மேலும், ஆசிரியரின் இக்கூற்று முக்கியமானது. ''தமிழிசையின் சிறப்பே 'பண்'கள் தான்''. அதற்குத் தக பண்ணிசை குறித்த விரிவான வரலாற்றுடன், தமிழிசைக்கும் இராகங்களுக்கும் உள்ள உறவை சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். குடந்தை சுந்தரேசனார் அவர்களோடு கல்லூரிக் காலத்தில் பழகியது முதல் தமிழிசை குறித்த இவரது ஆர்வம் விதையாகி, வேர்பரப்பி ஒரு ஆலமரமாக பல கிளைகளுடன் பரவி நிற்கிறது இந்நூலில்.

இந்த அறிமுகவுரையை வாசித்தபின் இதை எழுதிய நான் இசை பற்றி நன்கு அறிந்தவன் என்று நீங்கள் எண்ணக்கூடும். இசையைப் பொறுத்தவரை எனது அறிவு, தமிழ் திரைப்படப் பாடல்கள் கேட்பதும், அதனை உள்வாங்கி ரசிப்பதுமே. குறிப்பாக நாட்டார் பாடல்கள், கானாப்பாடல்கள், பீட் சாங்க்ஸ் எனப்படும் டப்பாங்குத்து பாடல்களை ரசிப்பதும், அதிதீவிர சோகப் பாடல்களைக் கேட்பதையும் தவிர வேறு ஒன்றும் தெரியாது. ஆனால், இந்நூல் வழியாக, இசையில் குறிப்பாக நாம் அன்றாடம் கேட்கும் தமிழ் திரையிசைப் பாடல்களில் இத்தனை இராகங்கள், அதன் நுட்பங்கள், அது ஏற்படுத்தும் மன ஓர்மை, மனநிலை ஆகியவற்றை அறிய முடிந்தது. ஒரு பாடலின் உருவாக்கம் என்பது அத்தனை சாதரணமாகக் கடந்து செல்லக்கூடிய ஒன்றல்ல. அதற்கான பண்ணிசையை கண்டுபிடித்து அப்பாடலை மிகச்சரியாக வடிவமைப்பது என்பது ஒரு பெரும் சாதனைதான்.

தமிழ்த் திரையிசை இல்லாவிட்டால் நமக்குள் ஒரு இசைவான அழகியலை உள்வாங்கும் ஒரு அமைதியை அனுபவிக்கும் மனநிலை வாய்த்திருக்காது. தமிழர்களையும், திரைப்படங்களையும் பண்பாட்டு ரீதியாக பிரிப்பது அத்துணை சுலபமல்ல. அதிலும் தமிழ்த் திரையிசை வாழ்வின் ஒரு பகுதியாக மாறியுள்ளது. அத் திரையிசை எப்படி தமிழிசையாக ஒரு தமிழியம் சார்ந்த சிந்தனை ஒழுங்கிற்குள் அமைந்துள்ளது என்பதையும், அதன் இராக இலக்கணம் எப்படி ஒரு கோட்பாடாக வடிவமைகிறது என்பதையும் புரிவதற்கான தரவுகள் கொண்ட ஓர் ஆவணத் தொகுப்பாக அமைந்துள்ளது இந்நூல். இதனைத் தனது தனிப்பட்ட தினவாழ்வில் மிகப்பெரும் சிரமங்களை பொருளாதாரரீதியாகவும், சமூக அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் அங்கீகாரமற்றும், கண்டும் காணாமல் விடப்பட்ட நிலைக்கும் ஆளான போதும், இந்தப்பணியை தனது வாழ்நாள் சாதனையாக நிகழ்த்தியுள்ள நிழல் ப. திருநாவுக்கரசை பாராட்டாமல் இருக்க முடியாது, இலக்கிய அரசியலாலும், லாபிகளாலும், சுயநலத்திலும் ஊறிப்போன இலக்கிய உலகில் இத்தகைய தனிநபர்கள் முயற்சிகள் ஊக்குவிக்கப்படுவதும் ஒரு அரசியல் நடவடிக்கையே.

●

கட்டுரையாளர், எழுத்தாளர்

அஞ்சலி

# ஆய்வறிஞராக உயர்ந்த தமிழாசிரியர்




**ஜி.சரவணன்**

கல்வெட்டியல், வரலாற்றாய்வியல், தொல்லியல் போன்ற பன்முகங்களில் களப்பணியாற்றியவரும் இதழாசிரியர், பதிப்பாசிரியர் என மிகச்சீரியப் பங்காற்றியவருமான புலவர் செ.இராசு அவர்கள் ஆகஸ்ட் 9ந் தேதியன்று இயற்கை எய்தினார். அவரது மறைவு தமிழ் ஆய்வியல் துறைக்கும் தமிழ்ச் சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் ஆகப்பெரிய பேரிழப்பாகும்..

புலவர் செ.இராசு அவர்கள் ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் வெள்ளமுத்துக்கவுண்டன் வலசு என்னும் ஊரில் பிறந்தவர். ஆரம்பகால பள்ளிக் கல்வியை திருப்பூரில் பயின்றார். திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் வித்துவான் படிப்பை நிறைவு செய்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பி.லிட் மற்றும் முதுகலைப் பட்டங்களைப் பெற்றார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 'கொங்குநாட்டு வரலாற்றில் சமண சமயம்' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார்.

ஈரோட்டில் 1959 ஆம் ஆண்டு தமிழாசிரியராகப் பணியைத் தொடங்கி 1980 வாக்கில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் பணிபுரியத் தொடங்கினார்.




ஈரோட்டில் பள்ளித் தமிழாசிரியராகப் பணியைத் தொடங்கிய அவர் களஆய்வுகள் மூலம் கொங்குநாட்டின் பல்வேறு பண்டைச் சிறப்புகளையும், பழம்பெருமைகளையும் கட்டுரைகள் வாயிலாகவும், நூல்கள் மூலமாகவும் வெளிப்படுத்தி வந்தார். பல்வேறு விதமான கொங்குநாட்டு வரலாற்றுச் செய்திகளை வெளிக் கொணர்வதில் தீவிரமாகக் களப்பணியாற்றினார்.

பள்ளிப் பருவத்திலும், தமிழாசிரியராகப் பணி தொடங்கிய காலத்திலும் கொங்குநாட்டுப் பெரும் புலவர் மகாவித்துவான் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களோடு ஏற்பட்ட நெருக்கமான தொடர்பு புலவர் இராசு அவர்களின் ஆய்வு வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக இருந்தது.

பள்ளி ஆசிரியராக இருந்த அவரை மொழியியல் அறிஞர் டாக்டர் வ.ஐ.சுப்பிரமணியம் அவர்கள், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டு, தொல்லியல் துறையில் பணியில் அமர்த்தினார். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியேற்ற இராசு அவர்கள் இணைப் பேராசிரியர், பேராசிரியர் ஆகச் செயல்பட்டு துறைத்தலைவராக உயர்வு பெற்றார்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தபின் அவரது ஆய்வு படிப்படியாகப் பரந்து, விரிந்தது. தஞ்சை மராட்டியர், இராமநாதபுரம் சேதுபதிகள், புதுக்கோட்டை - அறந்தாங்கித் தொண்டைமான்கள், சிவகங்கை மன்னர்கள், கொங்குச் சமுதாயம், பாளையக்காரர்கள் பற்றிய செப்பேடுகளையும் கல்வெட்டுகளையும் தொகுத்துப் பல நூல்களாக வெளியிட்டார். பல சுவடிப் பதிப்புக்களையும் வெளியிட்டார்.

கொடுமணல் அகழ்வாய்வுக்கு முழுமுதற் காரணமாக இருந்தவர் புலவர் இராசு அவர்களாவார். பதிப்பிக்கப்படாமலிருந்த கொடுமணல் ஏட்டுச் சுவடி இலக்கியங்களின் பதிப்பாசிரியராக இருந்தவரும் அவரே. 1981ஆம் ஆண்டில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டையொட்டி இந்நூல் "கொடுமணல் இலக்கியங்கள்" என்ற தலைப்பில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பதிப்பிக்கப்பட்டது.

மேனாள் தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களின் முன்னோர் கொங்கு நாட்டிலிருந்து கேரள மாநிலத்திற்குக் குடிபெயர்ந்தவர்கள் என்ற வரலாற்று உண்மையினை ஆவண ஆதாரத்தின் அடிப்படையில் ஆராய்ந்து எழுதினார். இந்நூல் 'செந்தமிழ் வேளிர் எம்.ஜி,ஆர்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டு வரலாற்றில் அடிமைகள் முறையையும் சேர்த்து எழுதினால்தான் வரலாறு முழுமை பெறும் என்ற நோக்கில் அவர் எழுதிய 'அடிமை முறையும் ஆள் விற்பனையும்' என்ற நூல் அவரது ஆய்வுச் செயல்பாடுகளில் முக்கியமான ஒன்றாகும்.

1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட அறச்சலூர் இசைக் கல்வெட்டை ஆராய்ந்து கண்டறிந்து உலகிற்கு அடையாளப்படுத்தியவரும் இவரே. இந்தியாவில் கண்டறியப்பட்ட முதல் இசைக் கல்வெட்டும் இதுவேயாகும்.

செ.இராசு அவர்கள் தொல்லியலறிஞர் பேராசிரியர் அ.சுப்பராயலு அவர்களுடன் இணைந்து தமிழகத் தொல்லியல் கழகம் என்பதை நிறுவி எட்டாண்டுகளாக செயலாளராகவும், பின்னர் தலைவராகவும் செயல்பட்டார்


'கொங்கு ஆய்வு மையம்' எனும் பெயரில் நூல்களை வெளியிட்டு வந்ததோடு முந்நூறுக்கும் மேற்பட்ட கல்வெட்டு ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். ஈரோடு கலைமகள் அருங்காட்சியகத்தை நிறுவி அதில் ஈரோடு மாவட்டம் தொடர்பான பல அரிய சேகரிப்புகளையும் சேர்த்து வந்தார்.

தமிழக அரசு 2012ஆம் ஆண்டில் உ.வே.சா விருது வழங்கத் தொடங்கியபோது அதன் முதல் விருதைப் பெற்றவர் எனும் சிறப்புக்கு உரியவர். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள இவரது படைப்புகளை தமிழக அரசு அவர் வாழுங் காலத்திலேயே நாட்டுடைமைப்படுத்தி கௌரவித்ததை உள்ளபடியே அவரது வாழ்நாட் பணிக்கான அங்கீகாரமாகக் கொள்ளலாம்.

தற்காலத் தலைமுறையினர் அறிந்துகொள்ளும் விதமாக அவரது நூல்களை பெருமளவில் பதிப்பித்து தமிழ்ச் சமூகத்திற்கு அறியச் செய்யவேண்டியது புலவர் செ.இராசுவைப் படித்துணர்ந்த அனைத்துப் பெருமக்களின் அவசியக் கடமையாகும்.

●

கட்டுரையாளர், எழுத்தாளர்



கட்டுரை

# ஐக்கிய நாடுகளின் நிலைத்த மேம்பாட்டு இலட்சியங்களும் கல்வியும்

**க.பழனித்துரை**

கேரளத்தில் ஓர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் ஒரு கருத்தரங்கம் சமீபத்தில் நடந்தது. அதில் கருத்துரையாற்ற என்னை அழைத்திருந்தனர். கேரளத்துக்குச் செல்வதில் எனக்கு ஒரு மகிழ்ச்சி. கண் குளிர பசுமையை ரசிக்கலாம், மாணவர்களுடன் கலந்துரையாடலாம். அவர்கள் விவாத ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள். என்னை அழைத்தது ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி. எனவே நான் உரையாடப்போவது எதிர்கால ஆசிரியர்களுடன் என்ற காரணத்தால் அதற்கு உடனே சம்மதம் தெரிவித்தேன். எனக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பு "ஐக்கிய நாடுகளின் நிலைத்த மேம்பாட்டு இலட்சியங்களும் கல்வியும்" என்பதுதான். இது ஐ.நாவின் இலக்கு அதில் நம் நாடும் கையெழுத்திட்டு, அதை அடைய அத்தளத்தில் எப்படிப்பட்ட பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய மாநில அரசாங்கங்கள் சிந்தித்து, உள்ளாட்சிகளை அதற்கு தயார் செய்ய முனைந்து வருகின்றன. இந்தச் செயல்பாடுகளில் கல்லூரி பல்கலைக் கழக மாணவர்களும், ஆசிரியர்களும் எப்படி தங்களை இணைத்துக் கொண்டு செயல்படலாம் என்பதை தெளிவாக விளக்க வேண்டும். இதுதான் என்னுடைய பணி.

நான் எங்கு உரையாற்றச் சென்றாலும் என் உரையை கேட்பவர்களின் மனதுக்குள் சென்று ஒரு சிலரின் ஆன்மாவையாவது தொட்டு அவர்களை செயல்பட தயார் செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன்தான் என் உரையைத் தயார் செய்வேன். இந்தக் கல்லூரி ஒரு பயிற்சிக் கல்லூரியாக இருப்பதால் அங்கு வருவோருக்கு ஒரு பயிற்சியாகவே இதைத் தந்திட வேண்டும் என்று நான் முனைந்தேன். பொதுவாக பயிற்சி என்றால் மனிதருக்குள்ளே பணி செய்ய ஒரு வெப்பத்தை உருவாக்குதல் என்றுதான் பொருள். பொதுவாக எல்லா மனிதருக்குள்ளும் ஒரு பேராற்றல் இருக்கும். அதை அவர்களே முயன்று, கண்டு, அதை வெளிக்கொணர செயல்படுவார்கள். இதை அனைவராலும் செய்ய இயலாது. பலருக்கு கல்வி அந்தப் பணியைச் செய்து மாமனிதர்களாக உருவாக்கும். இன்று நம் கல்வி அதற்கு நேர் எதிர் திசையில் பயணிக்கிறது. இருந்தபோதிலும் நாம் எதிர்நீச்சல் போட்டாவது அந்தப் பணியைச் செய்ய அதற்கான தயாரிப்புடன் அங்கு சென்றேன். இந்தக் கூட்டத்தில் பங்கேற்பாளர்கள் அனைவரும் பல பயிற்சிக் கல்லூரிகளிலிருந்து வந்த ஆசிரியைகள், ஆசிரியராகப் போகும் மாணவர்கள்.

அரங்கத்தில் இருந்த முன்னூறு பங்கேற்பாளர்களில் ஒரு ஐம்பதுபேர் மனதை உலுக்க முடிந்தால், அதுவே மிகப்பெரிய சாதனையாகும் என்று கருதி இந்த உரையை எவ்வளவு எளிதாக்க

முடியுமோ அவ்வளவு எளிதாக்கினேன். என் வாழ்நாள் ஆசிரியப்பணியின் நோக்கமே எந்தத் தத்துவத்தையும், சிக்கலான கருத்தாக்கத்தையும் சாதாரண மனிதர்களும் புரிந்து கொள்ளக்கூடிய அளவில் எளிமைப்படுத்தி சாதாரண மனிதர்களுக்குத் தருவதுதான். அதுதான் இன்றுவரை பல இடங்களுக்கு பேசுவதற்கு என்னை அழைப்பதற்கான காரணம். எனவே இந்த ஐக்கியநாடுகள் சபையின் இலக்குகள் பற்றிய புரிதலை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஏற்படுத்த வேண்டும், அடுத்து அதை நம் கிராமங்களிலும், நகரங்களிலும் செயல்படுத்த நம் பங்களிப்பை எப்படிச் செய்ய முடியும் என விளக்கிட வேண்டும். அத்துடன் இதை நாம் ஏன் செய்திட வேண்டும் என்பதற்கு அவர்களின் மனதைத் தொடும் விளக்கத்தைத் தரவேண்டும். இந்தப் பணியை எவ்வளவு முறைமையுடன் செய்கின்றோமோ அந்த அளவுக்கு விளைவினைக் கொடுக்கும் என்பதனையும் உணர்வுடன் அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

அந்த அடிப்படையில் மாணவர்களின் முன் ஒரு எதார்த்தத்தை கொண்டு வந்து அவர்களை உணர்வுடன் சிந்திக்கத் தூண்ட வேண்டும். எதார்த்தங்களை அவர்களின் நெஞ்சுக்கு அருகில் கொண்டுவர வேண்டும். அதற்கு உலகச் சூழல், நாட்டுச் சூழல், உள்ளூர்ச் சூழல் இவைகளை படம்பிடித்துக் காட்ட வேண்டும். அவைகளை ஆதாரங்களுடன் காட்ட வேண்டும்.

ஐ.நா.வின் திட்டப்படி 2030க்குள் மானுடம் மேம்பட 17 இலக்குகளை நிர்ணயித்து 169 பணிகளை வடிவமைத்து ஐ.நா.வின் அங்கீகாரம் பெற்ற நாடுகளில் செயல்படுத்த முனைந்துள்ளது. இது மானுட மேம்பாட்டுக்கானது தான். எனவே இதை அனைத்து நாடுகளும் அதை ஆமோதித்து அந்த பிரகடனத்தில் கையெழுத்திட்டு விட்டன. ஒவ்வொரு நாடும் அதனதன் முறைமையில் இந்த இலக்கினை அடைய முயல்கின்றது. இப்படித்தான் இந்தியாவும் முயல்கின்றது. இந்த இடத்தில் ஒரு புரிதலை உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் ஒரு அரசாங்கம் செயல்பட்டுக் கொண்டுதானே இருக்கின்றது. அந்த அரசாங்கங்கள் மக்களுக்காகத்தானே செயல்படுகின்றன. அப்படி இருக்கும்போது ஐக்கிய நாடுகள் சபை ஏன் ஒரு புதுத் திட்டத்தை உருவாக்கி அனைத்து நாடுகளையும் செயல்படுத்த வேண்டுகின்றது என்று கேட்கத் தோன்றும்.

இன்று உலக நாடுகள் பொருளாதாரத்தை முன்னிலைப்படுத்தி அதுதான் வளர்ச்சி, அதுதான் மேம்பாடு என்ற சிந்தனையை உருவாக்கி, வலுவாக்கி போட்டியில் ஓடிக்கொண்டிருக்கின்றன. இந்தப் பொருளாதாரச் செயல்பாடுகளால் ஒட்டுமொத்த மானுடத்தின் நலம் பேணப்படவில்லை, மாறாக ஒரு சிறுபான்மைக் கூட்டம் எல்லா வளங்களையும் சுரண்டி சுகபோக வாழ்க்கையில் இருக்கிறது, பெரும்பான்மை மக்கள் குறைந்தபட்ச வசதிகளைக்கூட பெற இயலாமல் வாழ்க்கை நடத்தும் சூழல் என்பது நிதர்சனமான பின் உலக சமாதானத்திற்காகவும் மேம்பாட்டிற்காகவும் செயல்படும் நிறுவனத்திற்கு ஓர் தார்மீகக் கடமை இருக்கிறது. ஆகையால் அது வலிந்து எல்லோருக்குமான மேம்பாடு பற்றி விவாதிக்கிறது, நாடுகளை செயல்படக் கேட்டுக்கொள்கிறது. உலக நாடுகளும் அதை ஏற்றுக் கொள்கின்றன. காரணம், உலகத்தில் ஆய்வு அறிக்கைகள் கொண்டுவரும் தரவுகள் மானுடத்தின் உண்மையை பிரதிபலிக்கின்றன. அந்த அறிக்கைகளை எவராலும் மறுக்கவும் இயலாது.

எனவே இந்தியாவும் மற்ற நாடுகளைப்போல் செயலாற்ற முயல்கிறது. அப்படி முயல்கிறபோது நாம் எப்படிச் சிந்திக்கின்றோம் என்றால் ஐ.நா. கொடுத்த அந்த அறிக்கையைப் படித்து அது தந்திருக்கக்கூடிய முறைமையில் சிந்தித்து செயல்பட முனைகின்றோம். இந்தியா உலகுக்கு வழிகாட்டும் நாடு. இந்தியாவின் சிந்தனையே உலகச் சிந்தனை, அதையும் தாண்டி அண்டத்தைக் காக்கும் சிந்தனை. இது வேதகாலத்திலிருந்து தொடரும் வரலாறு. நமது நவீன காலச் சிந்தனை மேற்கத்தியக் கல்வி, மேற்கத்திய மயத்திலிருந்து வந்ததால், அந்தக் கோணத்திலிருந்தே பார்க்க பழகிவிட்டோம். மேற்கத்திய முறைமை அறிவியல் சார்ந்தது என்பதையும் நாம் மறுக்க இயலாது. அதையும் தாண்டிய ஒரு முறைமை நம்மிடம் உண்டு. அந்த முறைமையியல் என்பது சுரண்டலற்ற மானுட மேம்பாடு சார்ந்த ஒரு அண்டச் செயல்பாடு. அண்டத்தை நேசிக்கும் அறிவுத் தளத்தை உருவாக்கிய நாடு. இது நம் வரலாற்றில் இருக்கிறது.

ஐ.நா. வேண்டுவது, இன்றைய சூழலில் மானுடம் எல்லையற்ற ஏற்றத்தாழ்வுகளில் சிக்குண்டு ஒரு சிறுபான்மை மக்கள் எல்லா வசதிகளும், சுகபோகங்களையும் எல்லை இல்லா அளவுக்கு அனுபவிக்கின்றனர். பெரும்பான்மை மக்கள் பசியிலும், பட்டியினிலும், ஊட்டச்சத்துக் குறைவுடனும், அறியாமையிலும், கல்வியற்றும், சுகாதாரம் மற்றும், குடிக்க நன்னீர் இன்றியும், வாழ்விடப் பாதுகாப்பின்றியும், அடக்குமுறைகளுக்கும், ஒதுக்குதலுக்கும் இலக்காகி வாழ்ந்து வருகின்றனர் என்பதை ஐ.நாவின் மேம்பாட்டு அறிக்கை, உணவு அறிக்கை, பசி அறிக்கை, நீர் அறிக்கை, ஊழல் அறிக்கை, மனித உரிமை அறிக்கை என்ற ஆய்வறிக்கைகள் பறைசாற்றுகின்றன.

பெரும்பான்மை மக்கள் ஒரு மதிக்கத்தக்க, மரியாதையுடைய மானுட வாழ்வு எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ இயலவில்லை. இந்தச் சூழலை மாற்றி உலகில் அனைத்து நாடுகளிலும் அனைத்துத் தரப்பு மக்களும் மதிக்கத்தக்க, மரியாதையுடைய, மானுட வாழ்வை வாழத் தேவையான வசதிகளையும் சூழலையும் ஒவ்வொரு நாடும் அதன் அரசாங்கத்தின் மூலம் உருவாக்க வேண்டும். அதற்கான புரிதலையும், அதற்கான பணிகளையும் எல்லோரும் இணைந்து முன்னெடுக்க வேண்டும் என்று பிரகடனம் செய்துள்ளது. இந்தப் புரிதலுக்கும், செயலுக்குமான ஒரு கல்வி வேண்டும். அந்தக் கல்வியை நாம் தேட வேண்டும். நாம் முதலில் எங்கு இருக்கின்றோம்,

எந்தச் சூழலில் வாழ்கின்றோம், நம் சமூகம், அரசியல், பொருளாதாரம், கல்வி, ஆளுகை நிர்வாகம் அனைத்தும் எப்படி இருக்கின்றன என்ற புரிதல் நமக்கு வேண்டும்.

இன்று ஒரு சிக்கலான சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உலகை போரை நோக்கி, குழப்பத்தை நோக்கி, கலகத்தை நோக்கி, நாடுகளை பிடிக்கும் குறிக்கோளைக் கொண்டு செயல்படும் நாட்டுத் தலைவர்கள் மத்தியில் இன்று இந்த உலகத்தில் வாழ்கின்றோம். தற்போது பெருந்தொற்று ஏற்படுத்திய சூழலிலிருந்து மீண்டுவர மிகப்பெரிய போராட்டத்தில் உலகம் இருந்து வருகிறது. பொருளாதார மந்த நிலையில் வேலைவாய்ப்பை இழப்போர் எண்ணிக்கை கூடி வருகின்றது. வேலை வாய்ப்பில் இருந்த பெண்கள் பெருமளவில் வேலையிலிருந்து வெளியேறி வருகின்றனர். உலகில் எல்லை இல்லா ஏற்றத்தாழ்வுகளை மானுடம் சந்தித்து வருகிறது பருவநிலை மாற்றத்தின் விளைவாக இயற்கைப் பேரிடர் என்பது தொடர் நிகழ்வாகி, கொட்டுகின்ற மழை வெள்ளத்தை உருவாக்குகின்றது, அதே நேரத்தில் பல பகுதிகளில் வறட்சியும் உலகை வாட்டி வதைக்கின்றது. பெருமளவில் இயற்கைச் சூழல் மாசுபட்டு நாம் வாழுமிடம் வாழ தகுதியற்றதாக மாறிவிட்டன. அரசியல் என்பது வன்மம் நிறைந்ததாகவும், குற்றப் பின்னணி கொண்ட பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டதாக மாறிவிட்டது.

எல்லை இல்லா ஊழல் ஆட்சியிலும் நிர்வாகத்திலும் பரவி மக்களாட்சியைச் சிதைத்துக் கொண்டுள்ளது. அரசியல் சந்தைமயமாகி சந்தைக்கு செயல்படும் கருவியாக மாறிவிட்டது. சமூகப்பார்வையற்ற தன்னலம் பேணும் மாந்தர்களாக மத்தியதர வர்க்கம் மாறிவருகின்றது. எங்கு நோக்கிலும் பொறுப்பற்ற மனிதர்கள் பொறுப்புக்களில் தங்களை தலைவர்களாக்கிக் கொண்டு இருக்கின்றனர். நாட்டில் வாழும் மக்களில் பெரும்பகுதி ஏழ்மையில் இருக்கின்றனர். 80 கோடி மக்களுக்கு மத்திய அரசாங்கம்தான் உணவுப் பாதுகாப்பை வழங்க வேண்டிய சூழலில் மக்களை வைத்திருக்கிறது நம் ஆளும் வர்க்கம். ஆனால் இந்த 140 கோடி மக்களை நுகர்வோராக்கி சந்தையின் மூலம் 7% பொருளாதார வளர்ச்சியடைந்துள்ளது இந்த நாடு. அதே வேளையில் 3% பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகள் ஏழைகளைப் பாதுகாப்பதில் கால் பங்குகூட இந்தியாவால் வசதிகள் செய்து ஏழைகளை மரியாதையுடைய வாழ்க்கையை வாழ வழிகாண இயலவில்லை.

இதன் விளைவுதான் சமீபத்தில் பொருளாதார வல்லுனர்கள், நம் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குபவர்கள் கூறுகிறார்கள், "அரசும் தோற்றது, சந்தையும் தோற்றது ஏழைகளுக்கு மறுவாழ்வு அளிப்பதில்" என்று. இந்த நேரத்தில் நம் நாட்டில் ஒரு விவாதத்தை முன் எடுக்கின்றனர். ஏழ்மையை குறைப்பதற்கு வழி தேடுவதற்குப் பதில் வல்லரசாக்கவும், உலகத்தில் பெரிய பொருளாதார சக்தியாக மாற்றவும் விவாதம் நடக்கின்றது. மக்களாட்சியை எவ்வளவு மாண்பை இழக்கச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு அதனை தரம் தாழ்ந்த நிலைக்கு நம் அரசியல் மூலம் தேர்தல் மூலம் கொண்டு வந்துவிட்டோம். மானுடம் கண்டுபிடித்த கண்டுபிடிப்புக்களில் மக்களாட்சி என்பதுதான் மாபெரும் ஆளுகைக்கான ஒரு மகத்தான கண்டுபிடிப்பு. அதை மானுடத்தை மனிதத்துவத்தில் உயர வைக்கச் செயல்படுத்துவதற்குப் பதில் காசு பார்க்க அதிகாரம் பிடிக்கும் கருவியாக்கிவிட்டோமே நம் மாசு படிந்த அரசியலால்.

இந்தச் சூழலில் தான் நாம் குன்றாவளத்தையும் நிலைத்த மேம்பாடு அடையும் வழிமுறைகளைக் கட்டமைக்க விவாதிக்கின்றோம். இன்றைய கலகச் சூழலை மாற்ற, சந்தைச்சூழலை மாற்ற, அரசியல் சூழலை மாற்ற தேவை ஒரு மக்களாட்சிக்கான மக்கள் கல்வி. இந்த மக்கள் கல்வி என்பது பொதுமக்களை எல்லா மேம்பாட்டுச் செயல்பாடுகளிலும் பங்கெடுக்க வைக்க தயாரிப்பதாகும். இன்றைய குடிமக்கள் சிந்தனை என்பது பயனாளிச் சிந்தனை. இந்த சிந்தனையிலிருந்து பொறுப்புமிக்க குடிமைக்கள் சிந்தனைக்கு கொண்டுவர வேண்டும். அந்த சிந்தனை பொதுமக்களுக்கு வந்துவிட்டால் குடிமைச் சமூக அமைப்புக்களை உருவாக்கி பொதுமக்கள் செயல்பட ஆரம்பிப்பார்கள். குடிமைச் சமூக அமைப்பை உருவாக்கி செயல்பட ஆரம்பித்தால் அரசைக் கண்காணிக்க ஆரம்பிப்பார்கள், அதிகாரிகளைக் கண்காணிக்க ஆரம்பிப்பார்கள், அதிகாரிகளை, மக்கள் பிரதிநிதிகளை கேள்வி கேட்க ஆரம்பிப்பார்கள். அரசிடம் மனுக் கொடுப்பதை நிறுத்திவிட்டு அரசாங்கத்தை வேலை வாங்க ஆரம்பித்து விடுவார்கள்.

இந்தப் பொறுப்புணர்வு மக்களிடம் வந்துவிட்டால் அரசிடமிருந்து பயன்கள் வேண்டும் என கையேந்தி நிற்க மாட்டார்கள். மாறாக அரசிடமிருந்து தங்களுக்கு உரிமைகளாக செய்ய வேண்டிய கட்டாயக் கடமைகளை சேவைகளாக பெற்று விடுவார்கள். அதற்காக அரசாங்கத்தை நிர்பந்தப்படுத்துவார்கள். அந்த நிலை உருவாகின்றபோது அரசு தான் செய்ய வேண்டிய பங்கீட்டு நிதியிலிருந்து வழுவவிடாமல் பார்த்துக் கொள்வார்கள். அப்படி ஒரு நிலையை பொதுமக்கள் உருவாக்க முனையும்போது நாடு அடைகின்ற பொருளாதார வளர்ச்சி முறையாக பங்கீடு செய்யப்பட்டுவிடும்.

இந்த நிலையை உருவாக்கத்தான் நமக்கு ஒரு கல்வித்திட்டம் தேவைப்படுகிறது. அது சமூகப்பார்வை கொண்டதாக இருக்க வேண்டும். மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வல்லமை கொண்டதாக இருக்க வேண்டும், மக்களாட்சி பேணுவதாக இருக்க வேண்டும், சமத்துவம் பேணுவதாக இருக்க வேண்டும், அண்டம் காக்கும் பார்வை கொண்டதாக இருக்க வேண்டும். பொறுப்புமிக்க குடிமக்கள் உருவாக்கும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். குடிமைப் பண்பை வளர்ப்பதாக இருக்க வேண்டும், மனிதத்துவத்தை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும். ஒட்டுமொத்த

சமூக மாற்றத்திற்கு வித்திடும் மிகப் பெரிய கருவியாக இருக்க வேண்டும். அதை போதிக்கின்றவர்கள் சாதாரண மனிதர்களாக இல்லாமல் மாற்றுச் சிந்தனை கொண்ட மாற்றுத் தலைவர்களாக இருக்க வேண்டும். இந்தக் கல்வியின் மூலம் பொதுமக்கள் பொதுப்பணிகளுக்கு பொறுப்பேற்க தயங்காமல் தானே வரும் சூழலை உருவாக்க வேண்டும்.

ஆனால் இன்றைய கல்விச் சந்தைக்கு பணியாட்கள் தயார் செய்யும் பயிற்சி நிறுவனங்களாக மாறிவருவதுதான் நாம் பார்க்கும் சோக நிகழ்வு. இன்று அந்தப் பணியைக்கூட பயிற்சித் தொழிற்சாலைக்கு தந்துவிட்டது கல்வி நிறுவனங்கள். இன்றைய கோச்சிங் மையங்கள்தான் பெரும் பணத்தில் செயல்பட்டு பெரும் லாபம் ஈட்டுகின்றன. கல்விச் சாலைகள் அறிவையும் திறனையும் சான்றிதழாக மட்டுமே கொடுத்து வருகின்றன. எப்படி மக்களாட்சி என்ற மாபெரும் ஆளுகைக்கான கோட்பாட்டை தேர்தலாக சுருக்கிப் பார்த்து விட்டோமோ அதேபோல் கல்வியை பணியாட்களைத் தயார் செய்யும் பயிற்சியாக மாற்றிவிட்டோம். கல்வி மனிதத்துவத்தை உயர்த்தும் ஓர் கருவி என்பதிலிருந்து வேலைவாய்ப்புக்கு தயார் செய்யும் ஓர் முறைமையியலாக மாற்றிவிட்டோம். அது மட்டுமல்ல நம் கல்வியின் விளைவுகளை எங்கே பார்க்க முடிகிறது என்றால் சந்தையின் மேம்பாட்டில்தான். இந்தக் கல்வி மானுடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பணி செய்வதற்கு பதில் சந்தை வியாபிப்பதற்கும், லாபம் பெருக்குவதற்கும் யுத்தியை கற்றுத்தரும் முறைமையாக மாற்றப்பட்டு விட்டது. விண்ணில் நமக்கு ஏவுகணையை செலுத்தத் தெரிந்தது, கொட்டிக் குவித்த குப்பைகளை மேலாண்மை செய்ய இயலவில்லை, அதற்கான அறிவியலை உருவாக்க இயலவில்லை.

நம் தொழில்நுட்பம் சந்தைக்கான தொழில்நுட்பமாகவே இருந்து பொருள்கள் உற்பத்திக்கும் சந்தைப்படுத்துவதற்கும் செயல்படுகின்றது. கையால் சாக்கடை அடைப்பை எடுக்கும் மனிதனுக்கு ஒரு கருவியைக் கொண்டு வந்து அவனுக்குப் பாதுகாப்புத் தர இயலவில்லை. இவை அனைத்தும் நமக்கு ஒரு செய்தியை உணர்த்துகின்றது. நம் கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம் பெரும்பான்மை மக்கள் சந்திக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்குப் பதில் புதிய புதிய பொருள்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி லாபம் ஈட்ட உதவி வருகின்றன.

இதை மாற்றியமைத்திட நமக்கு ஒரு புரிதல் வேண்டும். நாம் முதலில் மாற வேண்டும். நம் சிந்தனை மாற வேண்டும். இன்றைய சந்தைமய வாழ்விலிருந்து சமூகமய வாழ்வுக்கு மாற வேண்டும். இதற்கு உலக இலக்கியங்களைப் படிக்க வேண்டியதில்லை. காந்தியின் “இந்து சுயராஜ்யத்தை” படித்தால் போதுமானது. வினோபாவேயின் “சுயராஜ்ய சாஸ்திரத்தை”ப் படித்தால் போதுமானது.

காந்தியின் நிர்மாணத்திட்டத்தை படித்தால், இந்த ஐ.நா.வின் 17 இலக்குகளான வறுமையை ஒழித்தல், பசியில்லா சமூகத்தை பாதுகாத்தல், ஆரோக்யத்தை பாதுகாத்தல், தரமான கல்வியைத் தருதல், பாலின சமத்துவத்தை உருவாக்கல், நீர்ப் பாதுகாப்பும் வாழ்விடத் தூய்மையை உருவாக்கல், மாற்றுமுறை எரிசக்தியை உருவாக்கல், நீடித்த பொருளாதார வளர்ச்சியை கட்டமைத்தல், நிலைத்த தொழில்மயத்தை உருவாக்கல், மானுடத்தில் உள்ள ஏற்றத்தாழ்வை குறைத்தல், வாழ்விடத்தை பாதுகாப்பாகவும், அனைவருக்கும் உரியதாகவும் உருவாக்கல், பொறுப்புமிக்க உற்பத்தியும் நுகர்வும், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள செயல்திட்டத்தை உருவாக்குதல், வாழ்வாதாரத்தை கடல் நீரைப் பாதுகாத்து, காடுகளைப் பாதுகாத்து மண்ணை பாதுகாத்து வைத்துக் கொள்ளுதல், நீதியை நிலைநாட்ட ஆளுகை நிறுவனங்களையும் கடமைப்படுத்துதல், இவை அனைத்தையும் உரிய முறையில் நிறைவேற்ற சரியான பங்குதாரர்களை உருவாக்கிக் கொள்ளுதல் என அனைத்தையும் மக்களுடைய பங்கேற்போடு அடைய முடியும்.

இதற்குத்தேவை ஒரு மக்கள் கல்வி. அனைவருக்கும் புரியும் வகையில் இதை ஏற்படுத்தினால் பெரும் மக்கள் பங்கேற்பு மேம்பாட்டுப் பணிகளுக்காக உருவாகும். அந்தப் பங்களிப்பு, அரசியல் பங்களிப்பாக, ஆளுகைப் பங்களிப்பாக மாறும். அந்தப் பங்களிப்பின் மூலம் ஒரு மிகப்பெரிய அரசியல் மாற்றம், ஆட்சியில் மாற்றம், ஆளுகை மாற்றம், நிர்வாக மாற்றம், இவை எல்லாவற்றையும் விட வாழ்வியலில் ஒரு மாற்றுமுறை உருவாகிவிடும். எளிய வாழ்க்கைக்கு மக்கள் திரும்பி விடுவார்கள், பொறுப்புமிக்கவர்களாக மாறுவார்கள், இயற்கை வளங்களைப் பாதுகாக்க உணர்வு பெற்றவர்களாக மாறுவார்கள், மக்களாட்சி புரிந்தவர்களாக சமத்துவத்தையும் சமூக நீதியையும் பேணுவார்கள். எனவே இதற்கான ஒரு கல்வியை நம் கல்விக் கழகங்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு ஆசிரியரும், மாணவரும் உருவாக்கிக் கொண்டு உணர்வு மிக்க ஒரு சமூகத் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டு மக்களுடன் செயல்பட நாம் முயல வேண்டும். நாம் யாருக்காகவும் காத்திருக்க வேண்டியது கிடையாது. நாம் வாழும் இடத்தில் மக்களுடன் சிறு சிறு பணிகளில் கைகோர்த்துச் செயல்படலாம்.

மக்களை நமக்கு ஆசிரியராக்கிக் கொள்ளலாம், நாம் அவர்களுக்கு ஆசிரியராக்கிக் கொண்டு செயல்படலாம். இதற்கு அரசாங்கமே ஒரு திட்டத்தை உன்னத் பாரத் அபியான் 2.0 என்று கொண்டு வந்துள்ளது. அதன் மூலம் நாம் வாழும் கிராமங்களிலும், நகரங்களிலும் மக்களுடன் பணியாற்றி மானுடத்தில் இருக்கும் மனிதத்துவத்தை வளர்க்கலாம். அதன் மூலம் ஒரு மக்கள் கல்வியை உருவாக்கலாம். இதற்குத் தேவை நமக்கு ஓர் உணர்வு மற்றும் கடப்பாடு என்று கூறி அந்த உரையினை நிறைவு செய்தேன்.

●

கட்டுரையாளர், காந்திகிராமிய பல்கலைக்கழக ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் ஆராய்ச்சி இருக்கைத் தலைவர் (ஓய்வு)

கட்டுரை





# ஒப்பீட்டு நோக்கில் வள்ளுவமும் ஆத்திச்சூடியும்

முனைவர் தி. சுமதி

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் வரிசையில் காலத்தால் முற்பட்டதும், பொருட்சிறப்பால் உயர்ந்ததுமாகத் திகழ்வது திருக்குறளாகும். இதனை ‘முப்பால்’ என்று குறிப்பிடுவர். திருக்குறளின் பெருமை பேசும் திருவள்ளுவமாலையிலும் பல பாடல்களில் திருக்குறள் முப்பால் என்றே அழைக்கப்படுகிறது. திருக்குறள் முப்பெரும் பிரிவுகளையும், 133 அதிகாரங்களையும், அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்கள் என 1330 குறட்பாக்களையும் கொண்ட வெண்பா வகையைச் சேர்ந்த நூலாகும். வெண்பாக்களால் ஆன முதல் நூலும், ஒரே நூலும் இதுதான் என்ற பெருமையும் மனித சமுதாயத்தை ஆழ்ந்து நோக்கி அச்சமுதாயம் உயர்வு பெற இந்நூலைப் போன்று உலகில் வேறு எந்த மொழியிலும் இதுவரை தோன்றியது இல்லை என்ற பெருமையும் உலகில் முதன்முதலாக எழுதப்பட்ட தன் முன்னேற்ற நூல் என்ற பெருமையும் குறளுக்கு உண்டு.

திருக்குறளின் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார், பெருமை, அறன் வலியுறுத்துதல் ஆகிய நான்கு அதிகாரங்களும் பாயிரமாகத் திகழ்கின்றன. வள்ளுவத்தின் தொடக்கமாகத் திகழும் பாயிரத்திலேயே அறம் வலியுறுத்தல் செய்கிறார் வள்ளுவர்.

அறம் தான் உயிருக்கு ஆக்கத்தையும், சிறப்பையும், செல்வத்தையும் கொடுக்கக் கூடியது என்றும், வள்ளுவர் அத்தகைய அறத்தை அன்றறிவாம் என்னாது ஒல்லும் வகையெல்லாம் ஓவாது செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறார். தனி மனிதனின் வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் மற்றும் அன்பு வாழ்விற்கு இலக்கணம் அமைத்த நூல் என்பதும் இந்நூலின் சிறப்பாகும்.

ஆத்திச்சூடி 12-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையார் இயற்றிய நீதி நூல்களில் ஒன்றாகும். சிறுசிறு வார்த்தைகளால் சிறுவர்கள் இளம் வயதிலேயே மனப்பாடம் செய்து மனதில் நிலைநிறுத்திக் கொள்ளும்படி படைக்கப்பட்ட எளிமையான நூலாகும். சமுதாயத்தில் நல்லொழுக்கத்திற்கும், அறத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தக்கூடிய வல்லமை பெற்றது ஆத்திச்சூடியாகும். அன்றைய காலக் கட்டங்களில் இருந்த திண்ணைப் பள்ளிகள் முதல், இன்றைய நவீனக் கல்விமுறை வரை தமிழ்க் கற்பிக்கும் போது முதலில் உயிரெழுத்துக்களைத் தான் கற்றுத் தருகின்றனர். அவ்வாறு அன்றும் இன்றும் ஆசிரியர்கள் ஔவையின் ஆத்திச்சூடியைக் கொண்டு தான் தமிழ்க் கற்பிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நீதி நூல்களில் முதன்மையானதாகக் கருதப்படும் திருக்குறளும், பிற்காலத்தில் இயற்றப்பட்ட ஆத்திச்சூடி ஆகிய இவ்விரண்டு நூல்களும் வாழ்வியல் சிந்தனையை வலியுறுத்த எழுதப்பட்டவையாகும். திருக்குறளின் அறத்துப்பால் மற்றும் பொருட்பாலில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான குறட்பாக்கள் ஆத்திச்சூடி வரிகளுடன் ஒலிக்கத்தக்கவையாகும். அதே போன்று குறளுடன் ஒப்பிடும்போது எண்ணிக்கையிலும் அளவிலும் ஆத்திச்சூடி குறுகியதாகும். பாரதியார், பாரதிதாசன் போன்ற அறிஞர்கள் ஆத்திச்சூடி இயற்றியிருந்தாலும் ஔவையின் ஆத்திச்சூடி காலத்தினால் முந்தையது எனும் காரணத்தினால் குறளுடன் ஒப்பிடப்படுகிறது. திருக்குறளும் ஔவையின் ஆத்திச்சூடியும் எவ்வாறு வாழ்வியல் களங்களை உணர்த்துகின்றன என ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அறம் வலியுறுத்தல்**

